விலை: ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 362 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 07, திங்கட்கிழமை 23.11.2015



வாசனா சம்பத
இத் திங்கட்கிழமைக்கான சுப்பர் பரிசு
ரூ. 12,824,238.00
இ. தேசிய லொத்தர் சபை

# பொறுப்புக் கூறுவதே நல்லிணக்கத்துக்கு வழி

## ஒபாமாவின் எதிர்பார்ப்பும் அதுவே
## யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்தார் சமந்தா பவர்

யாழ்ப்பாணம், நவம்பர் 23

பொறுப்புக் கூறலே நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கும் என்று குறிப்பிட்டுள்ள சமந்தா பவர், தற்போதைய அரசு நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான பிரயத்தனங்களையும் அமெரிக்கா முன்னெடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு வருகை தந்த, ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், 'உதயன்' ஊடகவியலாளர்களுக்குப் பிரத்தியேக நேர்காணல் ஒன்றை வழங்கினார்.

இதன்போது, வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் சார்பில் நீங்கள் கொண்டு வந்த செய்தி என்ன என்று பக்.24



## இராஜதந்திர அப்பம் சமந்தா பவருக்கும்

கொழும்பு, நவ.23

ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவருக்கு, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினமிரவு வழங்கிய விருந்து பசாரத்தில் அப்பம் முக்கிய இடத்தை வகித்திருந்தது.



வெளிவிவகார அமைச்சில், சமந்தா பவருக்கு, அமைச்சர் மங்கள சமரவீரவினால் இராப்போசனம் அளிக்கப்பட்டது. இதில் முக்கியமாக அப்பம் பரிமாறப்பட்டது. இதனை இலங்கையின் அப்ப இராஜதந்திரம் என்று, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் அப்ப இராஜதந்திரம், அமெரிக்க இராஜதந்திரிகள் மட்டத்தில் பிரபலமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி எதிரணியின் பொதுவேட்பாளராகப் போட்டியிடுவதற்காக மகிந்த ராஜபக்ச அரசில் இருந்து மைத்திரிபால சிறிசேன வெளியேறியிருந்தார்.

அதற்கு முதல் நாள், தன்னுடன் ஒன்றாக இருந்து அப்பம் சாப்பிட்ட மைத்திரிபால சிறிசேன சொல்லாமல் கொள்ளாமல் எதிரணியின் பக்கம் ஓடி விட்டதாகத் தேர்தல் மேடைகளில் பக்.24

## படைக்குறைப்புக்கு காத்திருக்க முடியாது

*சமந்தா பவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணத்தில் படைக்குறைப்புக்குக் காத்துக் கொண்டிருக்க முடியாது என்று ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், வடக்கு மாகாண ஆளுநர் பளிஹக்காரவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சந்திப்புத் தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள சமந்தா பவர், அபிவிருத்தி பக்.24

# மக்களின் பிரச்சினைகளை வெளிக்காட்டியது உதயன்

## அதன் மூலமே இங்கு என்ன நடந்தது என்பது தமக்குத் தெரிந்தது என்று கூறினார் சமந்தா

யாழ்ப்பாணம், நவ. 23

நீங்கள் (உதயன்) மக்களின் பிரச்சினைகளைப் பத்திரிகையில் வெளிக்கொண்டு வராமல் விட்டிருந்தால், இங்கு என்ன நடந்தது என்பது எங்களுக்கு – சர்வதேசத்துக்குத் தெரியவந்திருக்காது. அவ்வாறு தெரியவந்திருக்காவிட்டால், இந்தப் பகுதி எப்படியிருக்கும் என்பதைக் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. இவ்வாறு ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் தெரிவித்தார். 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்கு வருகை தந்த, சமந்தா பவரை, 'உதயன்' குழுமத் தலைவரும் – தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினருமான பக்.24

## எமது சவாலான பயணத்துக்கு சர்வதேசத்தின் ஆதரவு தேவை

அமெரிக்காவிடம் கோருகிறது இலங்கை



கொழும்பு, நவ.23

பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் நீண்ட பயணத்தை மேற்கொள்வதற்குச் சவாலான பாதையைத் தெரிவு செய்துள்ளோம். இதற்குச் சர்வதேசத்தின் ஆதரவு அவசியம் என அமெரிக்காவிடம் இலங்கை அரசு வலியுறுத்தியுள்ளது.

மூன்று நாள் பயணமாக இலங்கை வந்துள்ள ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். வெளிவிவகார அமைச்சில் இந்தப் பேச்சுக்கள் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றன.

இந்தப் பேச்சுக்களின் முடிவில் சமந்தா பவருடன் இணைந்து, வெளிவிவகார அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசினார். இதன்போது மங்கள சமரவீர கருத்துவெளியிடுகையில்:- சமந்தா பவர் எப்போதும் இலங்கையின் சிநேகிதி பக்.24

# திருமலை வதைமுகாம் குறித்து தகவல்களை வெளியிடத் தயார்

## ஐ.நா. அதிகாரி யஸ்மின் சூகா அறிவிப்பு

கொழும்பு, நவ.23

பருத்தித்துறையிலிருந்து கொண்டு செல்லப்பட்டுத் திருகோணமலை சித்திரவதைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். இதனை மேற்கொண்டவர்களின் விவரங்களை வெளியிடத் தயாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் திருகோணமலை சித்திரவதைக் கூடத்துடன் தொடர்புடைய கடற்படை உத்தியோகத்தர்கள் பத்துப் பக்.24



## சிசுவின் சடலம் அழுகிய நிலையில் மீட்பு

அராலி, நவ.23

அராலி தெற்கில் கிணறு ஒன்றில் இருந்து அழுகிய நிலையில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெண் ஒருவர் மீது சந்தேகம் கொண்ட அயலவர்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸுக்குத் தகவலை வழங்கியுள்ளனர்.

இந்தப் பெண், பிறந்த குழந்தையை நிலத்தில் புதைக்க முற்பட்டபோது, அயல் வீட்டார் சந்தேகித்ததால் பின்னர் அதனைக் கிணற்றில் போட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் பின்னர் சிசு சிதைந்த நிலையில் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

## ஆட் கடத்தல்களுக்கு பயன்படுத்திய வாகனம் திருமலை கடற்படையில்

### கைப்பற்றினர் புலனாய்வுப் பிரிவினர்

கொழும்பு, நவ.23

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் கப்பம் பெறுவதற்காக மாணவர்கள் மற்றும் முக்கிய நபர்கள் ஆகியோரைக் கடத்தப் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் வெகன் ரக வாகனமொன்றை திருகோணமலை கடற்படை முகாமிலிருந்து குற்றப் புல னாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பு சர்வதேசப் பாடசாலை மாணவர்கள் 6 பேர் பிரிட்டனில் கல்வி கற்பதற்கான பக்.24

# அனைத்திலும் தாமதமாகவே செயற்படுகின்றது இலங்கை

## வடக்கு முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டினார் சமந்தா

யாழ்ப்பாணம், நவ. 23

இலங்கையில் எந்தவொரு விடயத்தைத் தொடங்கினாலும், அதனை தாமதமாகவே முடித்துக் கொடுக்கின்றனர். இதனை நான் இலங்கையில் அவதானித்துள்ளேன் என்று சமந்தா பவர் தெரிவித்ததாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு – சிறுபான்மையினருக்கு ஏதாவது செய்தால், சிங்களவருக்கு எதிராக இந்த அரசு செயற்படுகின்றது என்று தென் பகுதியில் சொல்லப்படுவதும் மாற்றங்கள் மெதுவாக நடப்பதற்கு காரணம் என்று சமந்தா பவர் சுட்டிக்காட்டினாரெனவும் முதலமைச்சர் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த ஐ.நா.வுக்கர்ன அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், வடக்கு பக்.24

# சமந்தா பவரின் யாழ். வருகைப் பதிவுகள்




முதலமைச்சர் அலுவலகத்தில்



ஆளுநர் அலுவலகத்தில்



யாழ். நூலகத்தில்



ஒஸ்மானியக் கல்லூரியில்



ஒஸ்மானியாக் கல்லூரியில் எல்லே விளையாடிய சமந்தா.

## உதயனில்











# யாழ். பல்கலை வளாகங்களில் நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் பீடம் மற்றும் விடுதிகள் நேற்று திறப்பு

## உயர் கல்வி அமைச்சர்கள் திறந்து வைத்தனர்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் அதன் கிளிநொச்சி, வவுனியா வளாகங்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதிகள் உயர் கல்வி அமைச்சர், ராஜாங்க அமைச்சர் உள்ளிட்டவர்களால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

முதல் நிகழ்வாக யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட 2 மாணவர் விடுதிகள் நேற்றுமுற்பகல் 9 மணிக்குத்திறந்து வைக்கப்பட்டது. அதில் உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, உயர் கல்வி ராஜாங்க அமைச்சர் மோகன் லால் கிரேரோ, சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், அமைச்சின் செயலாளர் திஸநாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மோகன் டீ சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் பீடத்துக்கான நிர்வாகக் கட்டடத் தொகுதி நேற்று முற்பகல் 11.30 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது. அதில் குறித்த அமைச்சர்கள் கலந்து கொண்டனர். அந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொகான் டீ சில்வா ஆகியோர் உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து வவுனியாவளாகமாணவர்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட தங்குமிட விடுதியை உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் மோகன் லால் கிரேரோ உள்ளிட்டவர்கள் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள விடுதிகளைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பொறியியல் பீடம் 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் சூழ்நிலை காரணமாக 35 வருடங்கள் தாமதித்து கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது திறந்து வைக்கப்படுகிறது. எனவே பல வருடங்களை நாம் இழந்து விட்டோம்.

அந்த இழப்பு தனியே யாழ். மாவட்டத்துக்கு மட்டுமல்ல நாடு பூராகவும் தான். யாழ்ப்பாண மக்கள் கல்வியிலும் புலமைப் பரிசில் பரீட்சையிலும் எவ்வளவு அக்கறையுடையவர்கள் என்பது தெரியும். அடுத்த 5 வருடங்களில் தென்னாசியாவில் நல்லதொரு நாடாக வளரும். - என்றார்.



அங்கு உரையாற்றிய உயர் கல்வி ராஜாங்க அமைச்சர் மோகன் லால் கிரேரோ தனது உரையில் தெரிவித்ததாவது-

பல்கலைக்கழக மாணவர்களுக்கு எனப் பல்கலைக்கழகங்களை அண்மித்து 60 தங்குமிட விடுதிகளை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாணவர் தொகைக்கேற்ப இவை அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு விடுதியிலும் 400 மாணவர் தங்கக் கூடியதாக விடுதிகள் அமைக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு விடுதியும் 220 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. கல்விக்கான நிதியும் 6 வீதமாக ஒதுக்கப்பட்டுள்ளது. - என்றார்.

(ம-4,109)

# சர்வதேச பல்கலைக்கழகம் வடக்கில் அமைய வேண்டும்

## அமைச்சர் விஜயகலா கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

உயர் கல்வி நிலையங்கள் சகலதையும் தெற்கிலேயே அமைக்கிறார்கள். அது உகந்ததல்ல. சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்று வடமாகாணத்தில் கட்டாயம் அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், அது பற்றிய கோரிக்கையை உயர் கல்வி அமைச்சரிடம் நேற்று முன்வைத்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட தங்குமிட விடுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பல்கலைக்கழக மாணவர்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். கடந்த காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை. அதற்குக் கடந்த கால அரசியல்வாதிகளும் இராணுவமும் காரணமாக இருந்தன. தற்போது நல்லாட்சி ஏற்பட்டுள்ளது. இந்த நல்லாட்சியில் சிறந்த தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்த நிகழ்வுக்குப் பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட அழைப்பிதழில் தனது பெயர் குறிப்பிடப்படாததனைச் சுட்டிக் காட்டிய ராஜாங்க அமைச்சர், பல்கலை நிர்வாகம் அதில் கவனம் செலுத்தத் தவறியமை தனக்கு மன வருத்தத்தை ஏற்படுத்துகின்றது என்றும் தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல்கள் கூடுதலாக இடம்பெறுகின்றன. நியமனத்தில் சில விரிவுரையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இராமநாதன் நுண்கலைப் பீட மாணவிகள் சிலர் விரிவுரையாளர்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது உட்பட பல பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் எத்தனையோ குறைபாடுகளை எதிர்நோக்கியிருந்தனர் என்றும் தெரிவித்தார்.

தவிர தனது உரையில், இந்த வாரம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் முக்கிய வாரம். அதனை மறை முகமாகக் கூற விரும்புகிறேன் என்றும் ராஜாங்க அமைச்சர் விஜயகலா மேலும் தெரிவித்தார். (ம-4)

# குருநகர்ப் பகுதியில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

## ஐந்நூறு வரையிலான குடியிருப்புக்கள் தரிசிப்பு

யாழ்ப்பாணம், நவ.23

குருநகரில் இடம்பெற்ற விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது ஐந்நூறு வரையிலான மக்களின் குடியிருப்புக்கள் தரிசிக்கப்பட்டன.

குருநகர் ஜே/69 கிராம சேவகர் பிரிவில் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளதோடு பத்துப் பேர் வரை டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதையடுத்து டெங்குத் தொற்றை உடனடியாகக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதாரப் பகுதியினரின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினரால் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

குருநகர்ப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.ராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது இந்தப் பகுதியில் இருநூறு வரையிலான குடியிருப்புப்பகுதிகள் நுளம்பு பெருக்கக்கூடிய வகையில் துப்புரவு இன்றிக் காணப்பட்டமை கண்டறியப்பட்டது.

இந்தக் குடியிருப்புச் சுற்றாடல் மூன்று நாள்களுக்குள் துப்புரவு செய்யப்பட வேண்டும் என்ற சிவப்பு ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன. இந்தப் பகுதியில் பத்து குடியிருப்பாளர்களின் சுற்றாடலில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதால் அந்தக் குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் உமாசுதன், பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திவ்விய குமாரன் உட்பட பொலிஸார், கிராம உத்தியோகத்தர், குடும்பநல உதவியாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதார பாதுகாவலர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினர் போன்றோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் யாழ்.மாநகர கழிவகற்றும் பிரிவினரால் இந்தப் பகுதியில் உள்ள வடிகால்வாய்கள் துப்புரவு செய்யப்பட்டன. வீதிகளில் காணப்பட்ட திண்மக் கழிவுகளும் கழிவகற்றும் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டன.

ஜே/69 கிராம சேவகர் பிரிவில் உள்ள 1ஆம், 2 ஆம், 3ஆம் குறுக்கு வீதிகள், தண்ணீர்த்தாங்கி வீதி, ஐஸ்பிளான் வீதி, மத்திய கிழக்கு வீதி, கடற்கரை வீதி போன்றவற்றை உள்ளடக்கி நுளம்பைக் கட்டுப்படுத்தும் முகமாக புகை அடிக்கப்பட்டது.

இந்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் செயற்பட்டனர்.

பிரதேச மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்த செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ராஜா தெரிவித்தார்.

(ம-17)

# கூட்டுறவுத் துறையினருக்கும் வெள்ள நிவாரணம் வழங்குக

## கூட்டுறவாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கூட்டுறவுத் துறையினருக்கு உதவிப் பொருள்களை வழங்குவதற்கும் சங்கங்கள் முன்வரவேண்டும் என்று கூட்டுறவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக பனை தென்னவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு வெள்ள நிவாரணப் பொருள்களை விநியோகித்து வருகின்றன. அதேபோல் ஏனைய கூட்டுறவு அமைப்புக்களும் தமது பணியாளர், அங்கத்தவர்கள் போன்றோருக்கும் வெள்ள இடர் நிவாரணத்தை வழங்க முன்வர வேண்டும்.

அண்மையில் பெய்த கனத்த மழையின் தாக்கத்தால் அனேகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் கூட்டுறவுத் துறையினரும் பாதிக்கப்பட்டனர். மாதாந்த வருமானம் குறைந்த கூட்டுறவாளர்களுக்கு வெள்ள இடர் நிவாரணத்தை வழங்க சங்கங்கள் முன்வர வேண்டும். குடாநாட்டில் முன்னர் இடம்பெற்ற நிசா புயலால் பாதிக்கப்பட்ட கூட்டுறவுத் துறையினருக்கு சங்கங்கள் நிவாரணப் பொருள்களை வழங்கின. அவ்வாறு தற்போதைய வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சங்க நிர்வாகங்கள் பொருள்களை சுலபமாக வழங்க முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-17)

# தென்மராட்சி தெற்கில் கால்நடைகளால் பயிரழிவு

## விவசாயிகள் கவலை

சாவகச்சேரி, நவ.23

தென்மராட்சி தெற்குப் பகுதியில் உள்ள நெல் வயல்களில் பயிர்களை கால்நடைகள் அழித்து வருகின்றன என்று அந்தப் பகுதி நெற்செய்கையாளர்கள்கவலை வெளியிட்டுள்ளனர்.

தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளில் மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்படும் மாடுகள் வயல்களுக்குள் புகுந்து பயிர்களை அழித்து வருகின்றன எனவும் மழை வெள்ளத்தில்பயிர்கள்அழிந்துபோயுள்ள நிலையில் எஞ்சியவை இவ்வாறு அழிகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தனங்களப்பு மறவன்புலோ கமக்கார அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது -

கடந்த காலபோக நெற்செய்கையின் பின்னர் சிறுதானியப் பயிர்கள் நெற்செய்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட போது கால்நடைகளால் அழிவு ஏற்படுவதைத் தடுக்க அரச சார்பற்ற நிறுவனமொன்றால் சிமெந்து தூண்கள் வழங்கப்பட்டு முட்கம்பி வேலிகள் அடைக்கப்பட்டன. இதனால் பயிர்கள் பாதுகாக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்டது.

ஆயினும் அதன்பின்னர் வேலிக்குப் போடப்பட்டிருந்த 40 தொடக்கம் 50 வரையிலான சிமெந்து தூண்கள் இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் கால் நடைகளால் பயிர்கள் அழிக்கப்படுகின்றன என நெற்செய்கையாளர்கள் எம்மிடம் முறையிட்டுவருகின்றனர்.

திருடப்பட்ட வேளையில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறியதால் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை இந்த வருடம் மேற்கொள்ள முடியவில்லை.

இருப்பினும் பிரதேசத்தைச் சேர்ந்த கால்நடைகள் வளர்ப்போருக்கு கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய மழை வெள்ளத்தால் அவற்றைக் கட்டி வைத்திருக்க முடியாத நிலையில் அவர்கள் கால்நடைகளை அவிழ்த்து விட்டுள்ளனர். அவை வயல்களுக்குள் புகுந்து அழிவை ஏற்படுத்துகின்றன. வெள்ளம் வடிந்தபின்னர் கால்நடைகளைக் கட்டி வளர்க்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். - என்று தெரிவிக்கப்பட்டது.

(ற)

# நான்கு ஆண்டுகளில் 402 சிசுக்கள் இறப்பு

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, நவ.23

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 402 சிசுக்களின் இறப்புகள் ஏற்பட்டுள்ளன என்று வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணரும் கிழக்கு பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளருமான மருத்துவர் கே.ஈ. கருணாகரன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிசு மரணங்களில் 201 சிசுக்களின் உயிரிழப்புக்கள் பிரசவ அறைகளில்நடந்துள்ளன என்றும் ஏனைய உயிரிழப்புகள் மகப்பேற்று விடுதிகளில் இடம்பெற்றுள்ளன என்றும் வைத்தியசாலை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு 46 சிசு இறப்புகளும், 2012ஆம் ஆண்டு 54 சிசு இறப்புகளும், 2013ஆம் ஆண்டு 60 சிசு இறப்புகளும், கடந்த ஆண்டு 41 சிசு இறப்புகளும் வைத்தியசாலை மகப்பேற்று விடுதிகளில் நிகழ்ந்துள்ளன.

2011ஆம் ஆண்டு 46 இறப்புகளும், 2013ஆம் ஆண்டு 54 இறப்புகளும், 2013ஆம் ஆண்டு 60 இறப்புகளும், கடந்த ஆண்டு 41இறப்புகளுமாக 201சிசுக்களின் இறப்புகள் பிரசவ அறையில் நிகழ்ந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற)

## நிதி ஒதுக்கீடு தொடர்பில் அறிவிப்பு

சாவகச்சேரி, நவ.23

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் கட்டுமானப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமைதொடர்பானவிவரங்கள் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தென்மராட்சி பிரதேசத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 வேலைத் திட்டங்களின் விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றை உரிய காலத்தில் நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையக் கலையரங்கு, மாசேரி சனசமூக நிலைய கட்டட திருத்தம், மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலைய கட்டட திருத்தம், கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலைய கட்டடத் திருத்தம், கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலைய கட்டடத் திருத்தம், கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு, மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலைய கட்டடத் திருத்தம், பாலாவி குஞ்சர்வளவு பொதுக் கிணறு திருத்தம் ஆகியவற்றுடன் மீசாலை மேற்கு, மீசாலை வடக்கு ஆகிய இடங்களில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள இருகுடும்பங்களின் வீடுகள் புனரமைப்பதற்கான மூலப் பொருள்கள் கொள்வனவு செய்து வழங்கல் போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-9)



சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் அண்மையில் பெய்த பெருமழையால் பாதிக்கப்பட்ட சங்க அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதி வழங்கினர். சங்க எல்லைக்குட்பட்ட மட்டுவில், நாவற்குழி, மறவன் புலோ, தச்சன்தோப்பு, கைதடி, சரசாலை, வேம்பிராய், இராமாவில், அல்லாரை, கோவில்குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 210 அங்கத்தவர்களுக்கும் சங்க பணியாளர்களுக்கும் அவை வழங்கப்பட்டன. (ற-9)

# நவாலி வடக்கு தலுவில் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

மானிப்பாய், நவ.23

நவாலி வடக்கு, தலுவில் வீதி கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்பு இன்றி அழிவடைந்துள்ளது. அதனை புனரமைப்புச் செய்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரு பிரதான வீதிகளை இணைக்கும் தலுவில் வீதியை தினமும் 500 முதல், 1200 வரையிலான மக்கள் தினமும் உபயோகிக்கின்றனர். இந்த வீதிக்கு கூடிய முக்கியத்துவம் கொடுத்து மீள்புனரமைப்புச் செய்ய வேண்டும் என்று நவாலி ஹேமலதா சனசமூக நிலையம் வலி. தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி.சோ.ஜெயந்தாவை கோரியுள்ளது.

குறித்த சன சமூக நிலையம் இது குறித்துப் பிரதேச செயலரிடம் கோரியுள்ளதாவது -

குறித்த வீதி வலி.தென்மேற்கில் உள்ள பிரதேசசபைக்குட்பட்ட பிரதான வீதியாகும். அரச அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், வேலையாள்கள், விவசாயிகள் எனப் பலரும் இந்த வீதியை தினமும் பயன்படுத்துகின்றனர்.

மேற்படி வீதியின் புனரமைப்புக் குறித்து ஏற்கனவே இரு கடிதங்களை வரைந்துள்ளோம். 2016 ஆம் ஆண்டில் நவாலியில் உள்ள தலுவில் வீதிக்கு முன்னுரிமை கொடுத்து உதவ சபை முன்வர வேண்டும்.

இதேவேளை, நவாலி தெற்கு ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்குச் செல்லும் 100 மீற்றர் வீதியைப் புனரமைத்துத் தர வேண்டும் - என்றுள்ளது.

(ற-50)

# நுணாவில் கொல்லங்கிராய் வீதி வெள்ளத்தில் முழ்கியது

## பொதுமக்கள் பெரும் சிரமம்

சாவகச்சேரி, நவ.23

தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்களின் பிரதான பாதையாக விளங்கும் நுணாவில் கொல்லங்கிராய் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அதனால் ஐந்து மைல்களுக்கு மேல் கூடுதலாக பயணிக்க வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சி தெற்குப்பிரதேசத்தில் உள்ள மறவன்புலோ கைதடி-நாவற்குழி தச்சன்தோப்பு, கோவிலாக் கண்டி, நாவற்குழி கிழக்கு போன்ற கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லங்கிராய் வீதி ஊடாக நுணாவில் ஏ-9 வீதிக்கு வந்து சாவகச்சேரிக்குச் செல்வதற்கு குறுகிய வழி என்பதால் பெருமளவு மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அண்மையில் பெய்த மழையால் வீதியின் இருமருங்கும் நெல் வயல்கள் என்பதால் வெள்ளம் வீதியை மறைத்து நிற்கின்றது. அதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், அரச அலுவலர்கள் கடற்றொழிலாளர்கள் விவசாயிகள் பொதுமக்கள் தனங்களப்புச் சந்திக்குச் சென்று அங்கிருந்து சாவகச்சேரிக்கு செல்ல வேண்டியுள்ளது.

இந்த வீதி ஏற்கனவே கனரக வாகனப் பாவனைகளால் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு பிரதேச பொது அமைப்புக்கள் உட்பட மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையிடம் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையுடன் தொடர்பு கொண்ட போது இந்த வீதி அந்தப் பகுதியில் உள்ள நெல் வயல்களுக்குச் செல்லும் வீதியாக உள்ளது. இதனை தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இரண்டு கிலோ மீற்றர் தூரமான இந்த வீதியைப் புனரமைக்க பெருமளவு நிதி தேவைப்படும் என்பதால் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி கிடைக்கும் பட்சத்தில் மேற்கொள்வது என்று முன்னைய சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிதி கிடைக்கும் போது மக்களின் கோரிக்கை பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-9)

# வீதியில் யுவதியின் கையைப் பிடித்த இளைஞர்களுக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், நவ. 23

வீதியால் துவிச்சக்கரவண்டியில் சென்ற யுவதியை இடைமறித்து தொந்தரவு செய்ததுடன் அவருடைய கையைப் பிடித்த 3 இளைஞர்களுக்கு யாழ். நீதிவான் நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது. அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தலா 25 ஆயிரம் ரூபா நட்டஈடும் செலுத்துமாறும் கட்டளையிடப் பட்டது.

கலையரசு வீதி, நவாலி என்ற இடத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்ற பெண் ஒருவரை இடைமறித்து தொந்தரவு செய்ததுடன் அவருடைய கையைப் பிடித்து இழுத்தனர் என்று நவாலியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களுக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மூன்று இளைஞர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டபோது பொலிஸார் அவர்களுக்கு எதிரான குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்தனர்.

அவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் பொலிஸாரால் முன்வைக்கப்பட்டிருந்தன. அவை தொடர்பில் மூவரும் குற்றவாளிகள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மேனகா கேசவன் தெரிந்த அறிமுகமான பெண் என்ற வகையிலேயே இளைஞர்கள் பெண்ணை மறித்தனர் என்றும் அதனால் அவர்களுக்கு குறைந்த தண்டனையை வழங்குமாறு விண்ணப்பித்தார்.

அதையடுத்து நீதிவான் பெ.சிவகுமார் மூவருக்கும் இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கும் ஒவ்வொரு வரையும் 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒவ்வொருவரையும் 25 ஆயிரம் ரூபாவை நட்டஈடாக செலுத்துமாறு கட்டளையிட்டதுடன், ஒருவருட கடூழியச்சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். மூன்றாவது குற்றச்சாட்டிலிருந்து இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இளைஞர்களின் வயதையும் எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்படுகின்றது என்று தெரிவித்த நீதிவான் அந்தக் காலப்பகுதியில் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் நன்நடத்தையில் இருக்கவேண்டும் எனவும் இளைஞர்களை எச்சரித்து விடுவித்தார்.

(ற-103)

# வெள்ளப்பாதிப்பு மக்களுக்கு வீணாகான குருபீடம் உதவி

யாழ்ப்பாணம்,நவ.23

வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அடைமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீணாகான குருபீடாதிபதி சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் ஒரு தொகுதி உதவிகளை வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி யூ.யசோதாவிடம் வழங்கியுள்ளார்.

வலி.தென்மேற்கில் அடைமழையால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் கண்ட வீணாகான குருபீடாதிபதி வாசுதேவக்குருக்கள் ஒரு தொகுதி உடுபுடைவைகள், பெற்சீற், குடிதண்ணீர்ப் போத்தல்கள் உள்ளிட்ட உதவிப் பொருள்களையே இவ்வாறு வழங்கியுள்ளார்.

இதேவேளை கடந்த வருடம் மீரியபத்தையில் இடம்பெற்ற மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வலி.மேற்கு மக்களின் உதவியை திரட்டி வீணாகான குருபீடம் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-50)

# போலிக் குற்றச்சாட்டுக் குறித்த உண்மைகள் வெளியாகின்றன

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, நவ.23
தன் மீது சுமத்தப்பட்டுள்ள போலியான குற்றச்சாட்டுகள் தொடர்பில் தற்போது உண்மைகள் வெளியாகின்றன என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
களுத்துறை, தெம்புவன பிரதேச விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஒரே நேரத்தில் இந்த வருடத்தினுள் அபிவிருத்தி நடவடிக்கைகள் முற்றாக இடை நிறுத் தப்பட்டுள்ளன. கடந்த ஜனவரி 8ஆம் திகதி வரை இருந்த பணம் 9ஆம் திகதியாகும் போது இல்லை என்கின்றார்கள். அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் இடை நிறுத் தப்பட்டுள்ளன. இன்னும் சில நாள் கள் இந்த நிலைமை தொடர்ந்தால் மக்கள் பட்டினியால் உயிரிழக்க நேரிடும். நான் நாட்டு மக்களைப் பட்டினியாக வாழ விடவில்லை. போர் நிறைவடைந்த பின்னர் அவசியமான நிவாரணங்களை வழங்கினேன். தனியார் தொலைக்காட்சியால் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார்கள். ஆணைக்குழு முன் சென்றால் சாட்சி வழங்கும் நபர் தனது கணக்கில் தான் பிழைகள் என ஏற்றுக்கொள்கின்றார். என் மீது சுமத் தப்பட்டுள்ள போலியான குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் இப்போது உண் மைகள் வெளியாகின்றன. எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் கிழ் அனைத்தையும் மாற்ற முடியும்- என்று கூறியுள்ளார். (ற)

# ஆறு மாதங்களுக்குள் அரசு கவிழ்ந்து விடும்

## மகிந்தானந்த அளுத்கமகே ஆருடம்

கொழும்பு, நவ.23
தேசிய அரசு இன்னமும் ஆறு மாத காலத்துக்குள் கவிழ்ந்து விடும் என்று முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.
வார இதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தற்போதைய அரசு இரண்டு தலைவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் தனது கொள்கைப் படியே அரசு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல தடவைகளில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு பார்க்கும்போது ஜனாதிபதிக்கு இந்த அரசில் எந்தவித அதிகாரமும் இல்லை.
மறுபுறத்தில் அமைச்சர்கள் ஆளாளுக்கு அடித்துக் கொள்கின்றார்கள். விஜேதாசவும், ராஜிதவும் ஒருவரையொருவர் பகிரங்கமாக விமர்சித்துக் கொள்கின்றார்கள்.
அமைச்சர்களான விஜேதாசவும், நிமல் சிறிபால டி சில்வாவும் இந்த அரசு நிலைத்து ஆட்சியில் இருக்காது என்று கூறியுள்ளார்கள். பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அரசின் அமைச்சர் ஒரு வரே இலஞ்சம் வாங்கியுள்ளார் என்று லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.
இவற்றையெல்லாம் வைத்துப்



பார்க்கும் போது இன்னமும் ஆறு மாத காலத்துக் குள் இந்த அரசு கவிழ்ந்துவிடும். எதிர்க்கட்சி குறித்தும் அதையே தான் சொல்ல வேண்டியுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கருத்துக்களுக்குத் தலையாட்டும் பொம்மை எதிர்க்கட்சித் தலைவர் எமக்கு தேவையில்லை. அதன் காரணமாகவே நாங்கள் தனி எதிர்க் கட்சிக் குழுவாக இயங்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ற)

# மகிந்த ஆட்சியில் ஊழல் சட்ட ரீதியாக இருந்தது

## சாடுகின்றார் சம்பிக்க

கொழும்பு, நவ.23
நூறாண்டுகள் தாக்குப் பிடிக்கும் என்று வர்ணிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை புரட்டிப் போட்டது நாங்கள்தான் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
முன்னொரு காலத்தில் ஒரு குடும்பத்தின் கையில் மட்டும் ஆட்சி அதிகாரம் தங்கியிருந்தது. ஆனால், இன்று இரண்டு கட்சிகளின் தலைவர்கள் புரிந்துணர்வுடன் ஒன்றிணைந்து நல்லாட்சியின் மூலம் மக்களை அதிகாரம் கொண்டவர்களாக மாற்றியுள்ளார்கள்.
மகிந்தவின் ஆட்சியில் ஊழல், மோசடி, இலஞ்சம் என்பன சட்ட ரீதியாக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பொதுமக்கள் அந்த ஆட்சியை வெறுத்தார்கள். எங்களது அரசு பொதுமக்களின் அதிருப்தியைச் சம்பாதிக்கும் வகையிலான எந்தவித செயற்பாடுகளிலும் ஈடுபடுவதில்லை.
சுயாதீன ஆணைக்குழுக்களின் உருவாக்கம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிப்பு போன்றவற்றால் நாங்கள் பொதுமக்களின் ஆதரவைத் தக்க வைத்துக் கொண்டுள்ளோம். இதன் காரணமாக இந்த ஆட்சியை உறுதிமிக்க ஆட்சியாக வர்ணிக்க முடியும்- என்று கூறியுள்ளார். (ற)

# நாட்டின் சொத்துக்களை விற்பதற்கே யோசனை

## வரவு- செலவுத் திட்டம் குறித்து வாசுதேவ கருத்து

கொழும்பு, நவ.23
இலங்கையின் வளங்களையும் சொத்துக்களையும் உள்நாட்டு, வெளிநாட்டு செல்வந்த நிறுவனங்களுக்கு விற்கும் யோசனையே இந்த வரவு-செலவுத் திட்ட யோசனை என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிடுகின்றார்.
நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
எங்கள் நாட்டின் சொத்துக்கள், வளங்கள், உடைமைகள் என்பவற்றை மொத்தமாக தேசிய மற்றும் வெளிநாட்டு செல்வந்த நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கும் ஒரு யோசனை இன்று முன்வைக்கப்பட்டுள்ளது. மறுபுறம் அவை அனைத்தையும் மூடி மறைக்க சில உணவு வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு குறைக்கப்பட்ட விலைகளும் எதிர்காலத்தில் கூட்டப்படும். இது நடைபெறும்.
ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு அடிப்படைச் சம்பளத்தில் இணைக்கப்படவுமில்லை, 2 ஆயிரத்து 500 ரூபா கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை - என்றார். (ற)

# இம்முறை வரவு - செலவு, ஊழியர்களுக்கு ஏமாற்றம்

## உதய கம்மன்பில கூறுகின்றார்

சம்பள அதிகரிப்பு எதிர்பார்ப்புடன் இருந்த ஊழியர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் வகையில் இந்த வரவு -செலவுத் திட்டம் அமைந் துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்காவால் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சகலரும் எதிர்பார்த்திருந்ததற்கு அமைய சம்பள அதிகரிப்பு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறவில்லை. குறைந்தது 2014 ஆம் ஆண்டு எமது அரசு முன் மொழிந்த 3,500 ரூபா சம்பள உயர்வையேனும் அரச ஊழியர்களுக்குப் பெற்றுக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அதேபோல் நாம் அமைத்த அதிவேகப் பாதைகளையும் தனியார் மயப்படுத்தும் யோசனையையும் முன்வைத்துள்ளனர். அதுமாத்திரமன்றி உரமானியம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு முன்மொழியப்பட்டுள்ளது - என்றார். (ற)





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சூழ்நிலையறிந்து சாதுரியமாக நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், முக்கிய செலவுக்காகக் கடன் வாங்குவார்கள். பிராணிகளிடம் அவதானமாக இருக்கவும்.

**இடபம்:** உறவினர்களிடம் பாசத்துடன் நடப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு இனிதாக நிறைவேறும்.

**மிதுனம்:** முயற்சிக்கேற்ப முன்னேற்றம் வாழ்வில் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன் மடங்கு உயரும். வீட்டில் சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவார்கள்.

**கடகம்:** எவரிடமும் விவாதம் மேற்கொள்ள வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிங்கம்:** பிறரின் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**கன்னி:** எதிரிகளின் தொல்லை பலமிழந்து போகும். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி உண்டாகும். பெண்களின் செயற்பாடு பெருமையளிக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** விலகிச் சென்ற உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். பெணகள் ஆடை, ஆபரணம் வாங்க நல்யோகம் உண்டு. மாணவர்கள் கண்ணும் கருத்துமாகக் கற்பார்கள்.


**விருச்சிகம்:** நல்லோரின் ஆலோசனையால் நன்மைஏற்படும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் ஏற்படும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**தனுசு:** நண்பர்கள் அதிக எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் இருந்த நெருக்கடி விலகும். இலாபம் சுமார். அரசியல்வாதிகள் தொண்டர் மத்தியில் செல்வாக்குப் பெறுவர்.

**மகரம்:** மனக்குழப்பம் நீங்கி தெளிவுடன் இருப் பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி குறித்து ஆலோ சிப்பீர்கள். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவார்கள். உறவினர் வருகையால் கலகலப்பு உண்டாகும்.

**கும்பம்:** நம்பகத்தன்மை இல்லாதவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். மனைவியின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும். உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**மீனம்:** பிறருக்கு உதவும் எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். குடும்பத்தில் சுப நிகழ்வு நடத்தத் திட்டமிடுவீர்கள். நண்பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள்.



# இருதிச்சுற்றில் வலம் வரப்போகும் மாதவன்

தமிழ் சினிமாவில் 2000 ஆண்டு காலப்பகுதியில் இளமங்கையரின் கனவு நாயகனாக உருவாகியவர் மாதவன். பின்னர், பல திரைப்படங்களில் நடித்தாலும் தற்கால சினிமாவில் இவரைக்காண்பது அரிதாகிப்போய் விட்டது. இந்தநிலையில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு மாதவன் நடிப்பில் உருவாகிவருகிறது இறுதிச்சுற்றுப் படம். தமிழ் மற்றும் இந்தியில் இந்தப்படம் தயாராகி வருகிறது. இந்தியில் 'சால காதூஸ்' என்ற தலைப்பில் வெளியாகவுள்ள இந்தப்படத்தை 'துரோகி' படத்தை இயக்கிய சுதா.கே.பிரசாத் இயக்கியிருக்கிறார்.

இதில் மாதவன் நீண்ட தலைமுடியும் தாடியும் வளர்த்த குத்துச்சண்டை பயிற்சியாளராக நடித்துள்ளாராம். இந்தப்படத்தின் படப்பிடிப்புகள் ஆரம்பத்தில் விறுவிறுப்பாக நடந்தன. பின்னர் சில காரணங்களால் படத்தின் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. எனினும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட படப்பிடிப்புகள் தற்போது முடிந்துள்ளதால் படக்குழு இறுதிகட்ட வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. சந்தோஷ் நாராயணன் இசையமைக்கும் இந்தப்படத்தை சி.வி.குமாரின் திருக்குமரன் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனமும், சசிகாந்தின் ஒய் நாட் ஸ்டியோஸ் நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ளன. சினிமாவில் மாதவனின் மீள் வருகைக்காக யுடிவி நிறுவனம் இந்தப்படத்தை அடுத்த ஆண்டு தை மாதம் 29ஆம் திகதி வெளியிட முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பேஸ் புக்கில் பிடித்துவை...

















# நூலகங்களின் அடிப்படை வசதிகள்; அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

வட மாகாண உள்ளூராட்சி சபைகளின் கீழ் செயற்படும் நூலகங்களில் மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி, கணினி தொழிலாளர் பற்றாக்குறை ஆகியவற்றை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுப்பதுடன், அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.குகநாதன் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவித்துள்ளார். மேலும், நூலக ஆவணவாக்கல் சபையால் கடந்த மாதம் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் நூலகங்களில் கடமையாற்றும் நூலகர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். சபையால் நடத்தப்படும் பொது நூலகங்களின் அடிப்படை வசதிகளான மலசலகூட வசதிகள் இல்லாமை அல்லது மலசலகூடம் இருந்தும் பாவனைக்கு உட்படுத்த முடியாது பழுதடைந்துள்ளமை, நூலகத்துக்குத் தேவையான குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படாமை, நூலகப் புத்தகங்களை கணினியில் பதிவேற்றுவதற்கு குறைந்தது ஒரு கணினிகூட நூலகங்களுக்கு வழங்கப்படாமை, நூலகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு அமைவாக சபையால் நியமனம் வழங்கப்பட்டு, கடமையாற்றும் தொழிலாளர்களை நூலகங்களுக்கு வழங்காமை, சபையால் சபை நிதி அல்லது அரச நன்கொடை நிதிகள் மூலம் நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது நூலகர் மற்றும் நூலக ஆலோசனைச் சபையின் பரிந்துரைகள் அல்லது அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்யாது தன்னிச்சையாக நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்தல், நூலகத்துக்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படாமை அல்லது ஒதுக்கப்பட்ட நிதியை நூலகங்களுக்குச் செலவு செய்யாது வேறு செலவினங்களை மேற்கொள்ளல் போன்ற பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றில் முதல் நான்கு பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுத்து தீர்வை வழங்கி அறிக்கையிட வேண்டும். மேற்படி நான்கு பிரச்சினைகளும் இல்லாத நூலகங்களுக்கு பிரச்சனை இல்லையென அறிக்கையிடவேண்டும். சபையால் சபை நிதி மூலமோ அல்லது அரச நன்கொடை நிதி மூலமோ நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள் கொள்வனவு செய்யும் போது தேசிய நூலக விவரக் கொத்தைப் பெற்று, நூலகங்களுக்குத் தேவையான நூல்கள் அல்லது சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்ளும்போது நூலக ஆலோசனைக் குழு மற்றும் நூலகர் ஆகியோரின் பரிந்துரை பெறப்படல் வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-9)

## வீதிகளில் அலையும் நாய்கள் வீதியால் செல்வோர் சிரமம்

குடியிருப்புக் காணிகளுக்குள் மழை வெள்ளம் தேங்கியிருப்பதால் வளர்ப்பு நாய்கள் அதிகளவில் வீதிகளில் அலைந்து திரிவதுடன், வீதியால் செல்வோருக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றன. வீதிகளில் பெருமளவு நாய்கள் காணப்படுவதால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வீதிகளில் நிற்கும் நாய்களால் கடியுண்டும், விபத்துக்குள்ளாகி காயமடையும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு நேற்றுமுன்தினம் தமது சைக்கிளில் சாவகச்சேரி சந்தைக்கு வந்த முதியவரொருவர் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் சைக்கிள் மோதியதில் வீழ்ந்து காயமடைந்துள்ளார். காயமடைந்த முதியவர் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## தொழிலாளர்களுக்கு வெள்ள நிவாரணம்

அச்சுவேலி, நவ.23

அச்சுவேலி பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், சங்க உறுப்பினர்களான தொழிலாளர்களுக்கு மழை வெள் ளத்தால் ஏற்பட்ட தொழில் பாதிப்பு மற்றும் வருமான இழப்புக்கு நிவாரணமாக தலா 3 ஆயிரத்து 100 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது. அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை உள்ளிட்ட உலர் உணவுப் பொருள்கள் சுமார் 175 பேருக்கு வழங்கப்பட்டன. (11)



கடஹபொல
பேன் மருந்து
100 வீதம் ஆயுர்வேத வேதியியல் பொருள்கள் மூலம் தயாரிக்கப்பட்டது. பெரியவர்கள் சிறியவர்களது தலையில் உள்ள பேன் மற்றும் பேன் முட்டைகளை நீக்கும் திறன் கொண்டது.
வடபகுதி ஏக விநியோகஸ்தர்:-
சிவசம்பு மருந்தகம்
இல.03, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1783
077 87 52 491
Kadahapola Dharmaratna Ausadalaya (Pvt) Ltd.
Kuliyapittiya Road, Kadahapola, Narammala. Ay.Reg.No:6/2/1/09/2

## கற்சிலைமடு அ. த.க. பாடசாலையின் புலமைப் பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு,நவ.23

கற்சிலைமடு அ. த.க. பாடசாலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. பாடசாலை ஆசிரியர் திருமதி சந்திரலேகா கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் கந்தையா சிவநேசன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மேரி கமலா குண்சீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பரீட்சையில் சித்தியடைந்த இரண்டு மாணவர்களுக்கும் பிரதம விருந்தினர்கள் மாலை அணிவித்து பரிசில்களும் வழங்கினர். அத்தோடு ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் உறவான சிவன் என்பவரால் அனுப்பிவைக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா நிதியும் இருவருக்கும் வழங்கி வைக்கப் பட்டது. அத்துடன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மேரி கமலா குணசீலனால் 6 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பரீட்சைக்கு தோற்றி சித்தி அடையத்தவறிய 17 மாணவர்கள், கற்பித்த ஆசிரியர், சித்தியடைந்த இரு மாணவர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-ரி3,500)

## வெள்ளப்பாதிப்பு மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

சாவகச்சேரி,நவ.23

தென்மராட்சி பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாவகச்சேரி பிரதேச சபையால் தினமும் குடி தண்ணீர் பவுஸர் மூலம் கொண்டுசென்று வழங்கப்பட்டு வருகிறது. நாவற்குழி ஐயனார் கோயிலடி புதிய குடியேற்றத் திட்டம், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களுக்கு வேம்பிராயிலிருந்து பவுஸர் மூலம் குடிதண்ணீர் கொண்டு செல்லப்பட்டு வழங்கப்பட்டு வருவதாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-9)

## வலி.தென்மேற்கில் வெள்ளப்பாதிப்பு நுளம்பு வலைகள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மழையால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த 350 குடும்பங்களுக்கு, சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ஜி.ரஜீவ் நுளம்பு வலைகளை வழங்கியுள்ளார். குடாநாட்டில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்த அடைமழை காரணமாக வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல் பகுதியில் நூற்றுக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் தங்கியிருந்த இடங்களுக்குப் பயணம் செய்த சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி முதற்கட்டமாக குடிதண்ணீர் உட்பட அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இதையடுத்து தற்பொழுது 350 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளை வழங்கியுள்ளார். இந்த வலைகள் வழங்கும் நிகழ்வு மாதகலில் இடம்பெற்றது. [illegible]

பிரத்தியேக வகுப்பு
வீட்டில் வந்து ஆங்கில இலக்கணம் தெளிவாகக் கற்றுக் கொடுக்கப்படும்.
J. Laksika தொடர்பு: 077 534 2025 (66284) (12.16)

அறைகள் நாள் வாடகைக்கு
600.00- 3950.00 - A/C இணைந்த குளியலறை
கோட்டையிலிருந்து HOTEL VILLA வரை போக்குவரத்து இலவசம். 422/1 Galle Road, Wellawatte.
072 255 2222 011 499 9911



## வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பசுக்கள்

முல்லைத்தீவு,நவ.23

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புலுமச்சினாதி குளம் கிராமத்தில் ஏற்பட்ட வெள்ள இடரினால் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆறு கறவைப் பசுக்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பின்தங்கிய இந்தக் கிராமத்தில் வாழ் வாதாரத்துக்கு உந்து சக்தியாக விளங்கிய இந்தக் கறவையினப் பசுக்கள் தனியொருவருக்கு மட்டுமே சொந்தமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-500)

# 'விடுலமு' திட்டத்தில் மின்சாரக் கடனுதவி

யாழ்ப்பாணம்,நவ.23

"விடுலமு" இருளகன்று முழுநாடும் ஒளிமயம், மின் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடனடிப்படையில் வீட்டு உள்ளக மின்னிணைப்பு வேலைகளைச் செய்து கொடுத்து மின்சாரம் வழங்குவதற்கு மின்சக்தி அமைச்சுத் தீர்மானித்துள்ளது. இதன்படி இதற்கான விண்ணப்பப்படிவங்கள் வேலணைப் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன, தங்களால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காகக் கிராம சேவையாளர் ஊடாக, பயனாளிகளுக்குக் குறிப்பிட்ட படிவங்களை வழங்கி அவர்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை ஐந்து நாள்களுக்குள் அந்தந்தப் பகுதி மின்பாவனையாளர் சேவை நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகூடிய கடன் தொகையாக வீட்டு உள்ளக மின்னிணைப்புக்கு (வயரிங்) 17 ஆயிரத்து 500 ரூபாவும், இலங்கை மின்சாரசபை மின் வழங்குவதற்கான செலவுத் தொகையாக 22 ஆயிரத்து 500 ரூபாவும் வழங் கப்படும். இந்தக் கடன் தொகை 72 மாதங்களில் 7 வீத வட்டியுடன் மின் பட்டியலுடன் சேர்த்து அறவிடப்படும் எனவும் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ-7)

### 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கூட்டுறவாளர்
அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.சங்க. சமாசம்)

தோற்றம் 06.10.1927
மறைவு 23.11.1990

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 25ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோப்பாய் பிராந்தியம்

(சு.90308)(ஐ.க)

### கண்ணீர் அஞ்சலி



எமது பல்கலைக்கழக கல்லூரியில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
**சாந்தினி செல்வகுமரன்** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பல்கலைக்கழக கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம்.

(66289) (13.15.17)


## பரிசளிப்பு விழா

மல்லாவி,நவ.23

துணுக்காய் கல்வி வலயத்தில் இடம்பெற்ற வலய மட்ட தகவல் தொழில்நுட்பத்துக்கான வினாடி வினாப் போட்டியிலும், கண்காட்சிப் போட்டியிலும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு துணுக்காய் கல்வி வலய ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள், அவர்களுக்கான பொறுப்பாசிரியர்களுடன் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கோரி பாட சாலை அதிபர்களுக்குக் கடிதம் அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் மாலினி வெலிற்றன் தெரிவித்துள்ளார். (ஐ-500)

### 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 10 . 1927
மறைவு 23 . 11 . 1990



கூட்டுறவாளர்
அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்
(ஸ்தாபகர் முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.ச.சமாசம்)


தூர நோக்குடன் சமாசத்தின் வளர்ச்சிக்காக மெழுகுவர்த்தியாய் தன்னை உருக்கி சேவையாற்றிய அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 25ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

இல.637,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்.

(C17779)(12.3.6)

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன் கனகசபை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
(திதி:- அபரபக்க திரயோதசி)

நீறணி நெற்றியும் வெண்ணிற
ஆடையும்
நாவிசைக்கும் நற் தேவாரப் பதிகமும்
நயந்து பருகிய திருவாசகத்தேனும்
வியந்து நிற்கிறது
நீங்கள் இல்லையெனும் போது
கற்றவர் சபையில் கணிப்புடன் வாழ்ந்து
உற்றதுணையாக உடன்பிறப்பையும்
அணைத்தீர்
வற்றாத நினைவோடு வாடுகின்றோம்
வந்து எமக்கு ஆறுதல் தாருங்கள் ஐயா!

தோற்றம் 04.12.1934
மறைவு 23.11.2011


குடும்பத்தினர்.
முருகன் கோவிலடி, புலோலி.

## நினைவு விழாவும் மர நடுகையும்

யாழ்ப்பாணம், நவ.23

சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் நினைவு விழாவும், மர நடுகையும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமூக அபிவிருத்தி மன்றத்தின் உபதலைவர் ம.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள, இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப் பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தின் அதிகாரியான அ.இராஜமாணிக்கம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறீ, கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசு, தென்னை அபிவிருத்திச் சபை முகாமையாளர் தே. வைகுந்தன், கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தின் ஏ.பி.ஜே. மனோகரன் ஆகியோரும்கலந்து கொள்வர். மேலும் விழாவில் நினைவுப் சொற்பொழிவை ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எ.சின்னத்தம்பி வழங்கவுள்ளதுடன், விழாவில் மரக் கன்றுகளும் வழங்கப் படவுள்ளதாகவும், சமூக அபிவிருத்தி மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி5)

### 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சுப்பிரமணியம் கந்தசாமி
(ஓய்வுபெற்ற ஆசிரியர் இந்து ஆரம்ப பாடசாலை- சாவகச்சேரி)
திதி:திரயோதசி(23.11.2015)

தோற்றம் 14.12.1935
மறைவு 17.11.2002


சீராண்டு மன்மத வருடம்
கார்த்திகை திங்கள் மலரும்
திரயோதசி திதிநாளில்
நினைவாக ஐயாவின் திருப்பாதங்கள்
பணிந்து பாரினில் மோட்சதீபம்
ஏற்றி பதின்மூன்றாம் நினைவஞ்சலி செலுத்தி
இறைபாதம் நாடிப் பணிகின்றோம்.

பொன்னம்பலம் வீதி,
கச்சாய் வீதி,சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

### ஈர்பத்து ஆண்டுகள் நிறைவில்

தோற்றம் 03 . 11 . 1941
மறைவு 23 . 11 . 1995
தோற்றம் 18 . 08 . 1983





அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம்**
(ஸ்தாபக உரிமையாளர் சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்)

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன்**
(மாணவன் - யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி)

ஆர்வமுடன் உழைத்தீர் ஊர் போற்ற வாழவைத்தீர்
ஓர்நொடியில் சேர்ந்தீர் இறைவனடி - ஈர்பத்து
வருடமாயும் நினைவில் வாழ்கின்றோம் நல்லூரான்
திருவருளே எமக்குத் துணை

29, ஓட்டுமடம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# யாழ்.சுகாதாரத் திணைக்களத்தால் இடமாற்றல் பட்டியல் வெளியீடு

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றும் சிறுபணியாளர்களுக்கான 2016 ஆம் ஆண்டுக்குரிய இடமாற்றல் பட்டியல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளன.

வருடாந்த இடமாற்றல் விண்ணப்பங்கள் கோரிய போது விண்ணப்பித்த, விண்ணப்பிக்காத பணியாளர்களுக்கு இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளன. இடமாற்றல் தொடர்பான மேன்முறையீடு செய்ய விரும்புவோர் தமது நிறுவனத் தலைவர் ஊடாக எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் தமது மேல்முறையீடுகளை அனுப்பி வைக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

ஆண்,பெண் பரிசாரகர்கள், சுகாதாரப் பணி உதவியாளர்கள், மருந்துக்கலவையாளர்கள், இயந்திரமேற்பார்வையாளர், பம் இயக்குநர், இயந்திர இயக்குநர், காவலாளி ஆகிய பதவிகளில் உள்ளவர்களுக்கு இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-9)

## தொடுபேசியில் பெண்களைப் படம் பிடித்த தென்னிலங்கை வாசி பொலிஸாரால் கைது

சாவகச்சேரி,நவ.23

வீதியோரத்தில் பூமரக் கன்றுகள் விற்பனை செய்தவர் வீதியில் சென்ற இளம்பெண்களை தொடுபேசியில் படம் எடுத்துள்ளார். இதனை அவதானித்த அப்பகுதியில் காணப்பட்ட நிறுவனமொன்றின் முகாமையாளர் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித் ததையடுத்து அங்கு வந்த பொலிஸார் அவரைக் கையும் மெய்யுமா கப் பிடித்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இந்தச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அரு கில் இடம்பெற்றது. மழை காலம் என்பதால் தென்பகுதியிலிருந்து பல வகைப் பூ மரக் கன்றுகளை வாகனத்தில் எடுத்து வந்து சாவகச்சேரி ஏ-9 வீதியோரத்தில் வைத்து விற்பனை செய்துள்ளனர். இந்த வியாபாரத்தில் ஈடுபட்ட ஒரு வர் வீதியில் செல்லும் இளம்பெண்களை தொடுபேசியில் படம்எடுப்பதில் ஆர்வம்காட்டினார். இதனை அந்த இடத்துக்கு முன்பாக உள்ள நிறுவனமொன்றின் பணியாளர்கள் கண்டு முகாமையாளருக்குத் தெரிவித்துள்ளனர். முகாமையாளர் அதனைப் பார்வையிட்டு உறுதிப்படுத்திய பின்னர் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். அங்கு வந்த பொலிஸார் அவரிடமிருந்த தொடுபேசியை வாங்கிப் பார்த்த போது பலபெண்களின்படங்கள்பதிவுசெய்யப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தனர். சம்பவத்தைக்கேள்வியுற்றசிலர் திரண்டபோதிலும்பொலிஸார் அவர்களைத் தடுத்து குறித்த வியாபாரியை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (ஐ-9)

## சுகாதாரமற்ற சூழலில் முல்லைத்தீவு மக்கள்

முல்லைத்தீவு,நவ.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் பெருமழையால் சுகாதாரமற்ற சூழலை மக்கள் எதிர்கொண்டுள்ளனர். மழை வெள்ளம் தேங்கி நிற்கும் காணிகளில் நுளம்புகளின் தாக்கம் அதிகரித்துள்ளது. அத்துடன் குடிதண்ணீரும் மாசடைந்துள்ளது. குறிப்பாக ஒட்டுசுட்டான், வயலும், வயல் சார்ந்த பிரதேசமும் என்பதால் நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் தமக்கான நுளம்பு வலைகளை சுகாதாரப் பிரிவினர் தந்து உதவ வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். அத்துடன் கிணறுகளில் நீர் நிரம்பியுள்ளதால் அது மாசடைந்த நிலையில் காணப்படுகின்றது. எனவே, அவற்றுக்கு உடனடியாக குளோரின் இடப்பட வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர். (ஐ-500)

## விபத்தில் இருவர் காயம்

அளவெட்டி, நவ. 23

இரு வெவ்வேறு இடங்களில் மோட்டார் சைக்கிளுடன் நாய் மோதுண்டதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற வீதி மல்லாகம், கோண்டாவில் ஆலடி ஆகிய இடங்களில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது நாய் குறுக்காக ஓடிய வேளையில் இந்த விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. (ஐ-36)

## மரண அறிவித்தல்கள்

### வில்வராஜா சுதாகர்

(நரேசா இன்ஜினியர்ஸ் உரிமையாளரும், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவரும்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், இல. 28/1, நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வில்வராஜா சுதாகர் (நரேசா இன்ஜினியர்ஸ் உரிமையாளரும், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவரும்) 21.11.2015 சனிக்கிழமை அகால மரண மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வில்வராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்-யாழ்.இந்துக் கல்லூரி) மற்றும் பத்மாவதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் கமலேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், தயானியின் (பிரதேச செயலகம், சங்கானை) அன்புக் கணவரும், நரேந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி), சாம்பவி (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தினி (வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்), பிரபாகர் (யாழ். பொது சன நூலகம்), மனோகர் (யாழ். பொதுசன நூலகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நற்குணராஜா, தனேஸ்வரி, சிந்துஜா, சக்தீஸ்வரி (லண்டன்), யனோசியா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/1, நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி.
077 9309738, 0778348976

தகவல்: குடும்பத்தினர்.

(86283) ( 10,12.15.17 )



### செல்லர் கணேசமூர்த்தி

ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும், 34, யாழ்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் கணேசமூர்த்தி 20.11.2015 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புதல்வனும்,காலஞ்சென்ற ரத்தினம் மற்றும் லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும்,சந்திராதேவியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, பூமணி, நடராசா,ராஜா, பரமேஸ்வரி,அம்பிகா (ஜேர்மனி),ராதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும்,வரதரூபன் (பிரான்ஸ்),ரூபிணி (பிரான்ஸ்),ராஜினி, நிஷாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,செல்வராஜா (பிரான்ஸ்),ரஜித்காந் (குவைத்),உதயசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சுதர்சன்,அபிஷா, நிதுஷா (பிரான்ஸ்),துவர்ணன்,துவாரகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/4, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.

## வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு தலைவர் நியமிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

வடமாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவராக கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் மேலதிக அரச அதிபர் ஸ்ரீநிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சால் இவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனைவிட குறித்த ஆணைக் குழுவுக்கு இரண்டு உறுப்பினர்களும் நியமனம் பெற்றுள்ளனர். முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசமூர்த்தி மற்றும் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சின்னத்தம்பி ஆகியோரே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-17)

## புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களின் 94 பிள்ளைகளுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளது. சமாசத்தின் தலைவர் எஸ். இலகுநாதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில், வடமாகாண கூட்டுறவுத் திணைக்களத்தின் தலைமைக் காரியாலய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். அத்துடன் இந்த நிகழ்வில் மூத்த கூட்டுற வாளர்களும் கௌரவிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதில் மூத்த கூட்டுறவாளர்கள் 21பேர் கௌரவிக்கப்பட்டனர். இதனை விட 93 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடத்தப் பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டுறவாளர்கள் கலந்து கொண்டனர். (ஐ-17)

## கண்ணீர் மலர்த்தூவல்



மலர்வு 12 . 06 . 1974

உதிர்வு 21 . 11 . 2015

### வில்வராஜா சுதாகர் (சுதா)

அண்ணா....
கண்டதும் வணக்கம் சொல்லும்
உன் புன்முகம் எங்கே?
கனவுகள் பல சொல்லும்
உன் பொன்மனம் எங்கே?
காரணம் இன்றிப் பழகும்
உன் அன்பு மனம் எங்கே?
சிரிப்புடனே சிந்தனை சொல்லும்
உன் சிறந்த மனம் எங்கே?

தோற்றுப்போகும் எம்மை தேற்றி
தூக்கி விடும் உன் தாராள மனம் எங்கே?
அனைத்தையும் இழந்து தவிக்கின்றோம்.

சுதா அண்ணா உம்மை
தோழனாய் சகோதரனாய்
நல் ஆசானாய் கண்ட காலங்களை
இனி எப்போது தான் காண்போமோ....?

விழிநீர் ததும்பும் விழிகளுடன்
சுச்சேரியடி நண்பர்கள்

(66790)(11,16,17)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

சாவகச்சேரி,நவ.23

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 9 ஆம் திகதி 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. நாவற்குழிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில்மணல்ஏற்றப்படுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார், மணல் ஏற்றி வந்த நிலையில் வாகனத்தைக் கைப் பற்றியதுடன் வாகனச் சாரதியையும் கைது செய்தனர். இந்தச்சாரதியை நேற்று நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபருக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (ஐ-9)

## விசேட பஜனை

சாவகச்சேரி,நவ.23

சாவகச்சேரி சத்யசாயி சேவை நிலையத்தில் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 90 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விசேட பஜனை நிகழ்வுகள் இடம்பெறும். அத்துடன் மாதாந்த பௌர்ணமி தின நிகழ்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும்.

(ஐ-9)

நெஞ்சைவிட்டகலாத ஓராண்டு நினைவஞ்சலி

எம்மை வாழ வைத்த தெய்வம்

தோற்றம் 06 . 01 . 1934



மறைவு 04 . 12 . 2014

திருமதி பவளரத்தினம் சிவப்பிரகாசம்

திதி: 23.11.2015

மண்ணுலக வாழ்வில் அன்புடனும் பண்புடனும்
பார்போற்ற வாழ்ந்த எங்கள் உயிர்த்தெய்வமே
விண்ணுலகம் சென்று இன்று ஓராண்டு
ஆனாலும் உங்கள் பிரிவுத் துயர்
எங்கள் நெஞ்சை விட்டகலவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்! சாந்தி ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

பண்டத்தரிப்பு.

(66178)(11)

46 ஆவது பிறந்தநாள் நினைவஞ்சலி

"ஆண்டவனின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும்"
தி.பா.27:24



அன்னையின் மடியில்
23.11.1969

ஆண்டவரின் அடியில்
02.05.2006

அமரர்
பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ்
[சுரேஷ்]

(முன்னாள் சந்தைப்படுத்தல் முகாமையாளர் உதயன் பத்திரிகை நிறுவனம்)

ஜெபம்: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. எங்கள் அன்பு
மீட்பரே அனைத்து மக்களும் சாவைக் கடந்து புது வாழ்வுக்குள்
நுளையவும் வேண்டுமென உம்மையே நீர் சாவுக்குக்
கையளித்தீர் நீர் ஒருவரே தூயவர் எம்மை விட்டுப்
பிரிந்து உம்மிடம் வந்துள்ள உம் அடியாராகிய
பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸின் பாவங்களை மன்னித்தருளும்
உம் அடியார் உம்மை விட்டுப் பிரிந்தகல விடாதிரும்
உமது மகிமையின் வல்லமையால் விண்ணுலகில் அவருக்கு
ஒளியும் மகிழ்வும் அமைதியும் அளித்தருளும் – ஆமென்

எமது சுரேஷின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று காலை 6.30 மணிக்கு மட்டக்குளிய பாம் வீதியிலமைந்துள்ள 'புனித கார்மேல் மாதா' துறவற சபையின் சிற்றாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் அகலாமல் எமது இதயங்களோடு சங்கமித்துவிட்ட எமது சுரேஷின்
நினைவுகளோடு வாழும்

மனைவி: சுவேன் (SUVEN)
பிள்ளைகள்: அல்றின் (ALRIN),சேஷா (SAESHA) AUSTRALIA.

(சி.20188) (13.15)

## சாவுத்தண்டனைக் கைதிக்கு சிறையில் விசேட சலுகை

கொழும்பு,நவ.23

முன்னாள் மேல்நீதிமன்ற நீதிவான் சரத் அம்பேபிற்றியவின் கொலை தொடர்பில் சாவுத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள மொகமட் நவ்பர் என்பவருக்கு பதுளை சிறைச்சாலையில் உயர் உபசரிப்புக்கள் கிடைப்பதாக அந்தச் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதற்குப் பிரதியுபகாரமாக குறித்த நபர் மாதத்துக்கு ஒரு தடவை சிறைச்சாலையின் சில உயர் மட்ட அதிகாரிகளுக்கு பல லட்சம் ரூபா பெறுமதியான அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனது சட்ட விரோதக் கடத்தல்கள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை எண்ணம் போன்று நடத்திச்செல்வதற்குத் தேவையான அலைபேசிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் இவருக்குச் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விளக்கமறியல் சிறைச்சாலையொன்றில் ஏறத்தாழ இரண்டாண்டுகளாக இவர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பிலும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. சாவுத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள விசேட தரத்திலுள்ள சிறைக்கைதியொருவராக கருதப்படாதுள்ள இவருக்கு, எந்தக் கட்டுப்பாடுமின்றி விருந்தினர்களைச் சந்திப்பதற்கும் மற்றும் தொடர்புகளை வைத்துக் கொள்வதற்கான சலுகையும் வழங்கப்பட்டுள்ளதாகதெரிய வந்துள்ளது. (ஐ-22)

25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சண்முகம்
ஞானப்பிரகாசம்
(ஸ்தாபகர் இணைப்பதிகாரி, சமூக அபிவிருத்தி மன்றம், ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)



பிறப்பு 06.10.1927
இறப்பு 23.11.1990

அன்னாரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

சமூக அபிவிருத்தி மன்றம்
276, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி ரேவதிதேவி
அருள்ராசலிங்கம்
திதி: துவாதசி



அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதய தெய்வமே!
ஆண்டுகள் பதினான்கு ஆன போதும்
ஆறவில்லை எம் துயரம்.

தோற்றம் 24.09.1953
மறைவு 27.11.2001

என்றும் நினைவில்
அன்புக் கணவர் சி.அருள்ராசலிங்கம்,
தம்பி, தங்கை

குப்பிழான் தெற்கு,ஏழாலை.

(66186)(11.15)

17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வடிவேற்கரசு தேவசுதா (நிதியா)



அன்னை மடியில்
02.02.1987

ஆண்டவன் அடியில்
01.12.1998

திதி: கார்த்திகை பூர்வபக்ஷ
திரயோதசி
23.11.2015 (திங்கட்கிழமை)

அவனிதனில் வந்துதித்த ஆருயிரே!
அம்மாவின் வயிற்றில் வந்துதித்த ஓருயிரே!
நீயில்லாமல் நிதம் வாடுகின்றேன்.
வந்திடுவாய் உன், ஆத்மசாந்திக்காக
எல்லாம்வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

அம்மா
செல்வராணி வடிவேற்கரசு
(வைத்தீஸ்வரன்)

சித்தம்பாதி .
கரணவாய் தெற்கு. கரவெட்டி.

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அப்பாத்துரை
ஞானேஸ்வரன்
திதி:திரயோதசி



பிறப்பு
25.01.1940

இறப்பு
26.11.2012

அன்புத் தெய்வமே- அப்பா!
ஆண்டுகள் மூன்று கடந்தனவே -அப்பா!
நீங்கள் எம்மைப் பிரிந்தாலும் எப்போதும் உங்கள் நினைவுகள்
பிரியாது - அப்பா! ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"ஜனகபதி"
பாப்பாகோட்டை ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

(66272)(11)

குடும்பத்தினர்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 248 குடும்பங்களுக்கு உதவி

சாவகச்சேரி,நவ.23

மட்டுவில் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 248 குடும்பங்களுக்கு மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தினர், ஐரோப்பியாவில் உள்ள மோகனதாஸ் சனசமூக நிலையக் கிளையின் பங்களிப்புடன் உலர் உணவுப் பொதிகளை அண்மையில்வழங்கியுள்ளனர். நிலையத் தலைவர் சி.செல்வராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஐரோப்பியாவிலிருந்து வருகை தந்த மோகனதாஸ் சனசமூக நிலையக் கிளையின் உறுப்பினர் க.மதியழகன் நிலையச் செயலாளர் வே.கிருஷ்ணன் ஆகியோர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பொருள்களை வழங்கினர். (ஐ-9)

## இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்

சாவகச்சேரி,நவ.23

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு உசன் பகுதி மக்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் கடந்த 15 ஆம் திகதி உசன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடத்தப்பட்டது. சாவகச்சேரி லயன்ஸ் கழகம், பிரதேச சபையின் ஆயுள்வேத மருந்தகப் பிரிவு ஆகியவை இணைந்து நடத்திய மருத்துவப் பரிசோதனையில் கலந்துகொண்ட மக்களுக்கு ஆங்கில மற்றும் ஆயுள்வேத சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இதன்போது கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட 77 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் உசன் விடத்தற்பளை, கெற்பேலி, பாலாவி, மிருசுவில் வடக்கு போன்ற பகுதிகளைச்சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். (ஐ-9)




## ஐ போன்-7 (iPhone 7) தொடர்பான தகவல்கள் வெளியாகின

அலைபேசி பாவனையாளர்களுக்குச் சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்ட அலைபேசிகளை வடிவமைத்து வழங்கும் அப்பிள் நிறுவனம் அடுத்ததாக ஐபோன்-7 (iPhone 7)ஐ அறிமுகம் செய்யவுள்ளது.

2016 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த அலைபேசியின் சில சிறப்பம்சங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி 3ஜிபி ரம் (3GB RAM) ஐ பிரதான நினைவகமாகக் கொண்டுள்ளதுடன், நீர் உட்புகவிடாத தொழில்நுட்பத்தையும் கொண்டதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஐபோன் 6E (iPhone 6C ) எனும் குறுந்திரை கொண்ட அலைபேசியை அறிமுகம் செய்யவுள்ளமை தொடர்பான தகவல்களும் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மர நடுகை மாதம்

## மரம் வளர்ப்போம் வாருங்கள்...

*“என் மனதில் ஆழப் பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை”*


*-சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)*

'ஒவ்வொரு மரமும் ஒரு வரம்'; மரங்கள் எமக்கு நன்மையே செய் கின்றனவேயன்றி தீமை பயக்கா. இதை நாம் சில நேரங்களில் மறந்துவிடுகின்றோம். நாம் சுவாசிக்கும் காற்றிலிருந்து நாம் உண்ணும் உணவு,உறையுள் என்பவற்றை எமக்கு இயற்கையின் கொடையாக வாரி வழங்கும் காமதேனு போன்றதே விருட்சம். இயற்கையின் கொடையான மரங்களை எமது சுயதேவைக்காக எம்மை அண்டிய பகுதிகளிலும் காடுகளிலும் அழித்து வருகின்றோம். அவைகள் எமக்கு காய்,கனி, கீரை வகைகளைத் தருவது மட்டுமல்லாது விலங்குகள்,பறவைகளுக்கும் இயற்கை அன்னையாகத் தாமே உணவூட்டி வருகின்றன. இவை மட்டுமே சுயமாக உணவைத் தயாரிக்கும் திறமையைப் பெற்றுள்ளன என்றால் மிகையாகாது. எம்மைச் சூழவுள்ள நச்சு வாயுக்களை அகத்துறிஞ்சி, தூய காற்றை வழங்கும் இயற்கை அன்னை மரங்களே. இவை இளைப்பாற நிழல் தருவது மட்டுமல்லாது நகர்ப்புறங்களிலும்,வசிப்பிடங்களிலும் கடுமையான வெப்பத்தைக் கட்டுப்படுத்தி இயற்கையான குளிர் காற்றை வழங்குகின்றன. மழையைத் தருவதுடன் மண்ணரிப்பில் இருந்தும் பாதுகாக்கின்றன. கோடையில் அனல் வீசும்போதும் அதனைக் கட்டுப்படுத்தி உதவுகின்றன. அவை இறந்த பின்பும் விறகாக, எரிபொருளாக, கட்டுமரப் பொருளாக ,அலங்காரப் பொருளாக வடிவமைக்க உதவுகின்றன. இவ்வாறான பயன்களைப் பெற்றிருந்தும் கூட அவற்றை நாம் அழிக்க நினைக்கின்றோம். மரம் வளர்ப்புப் பற்றி சிந்தனையாளர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்த போதும்கூட பொது இடங்களில் மட் டுமே அதனை நட்டு வருகின்றனரே தவிர அவற்றைத் தமது வசிப்பிடங்கள் தோறும் நட வேண்டும் என்று எவருமே அக்கறை கொள்வதில்லை. மரம் நடுவது மட்டும் கடமையல்ல அதனை எவ்வாறு பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் எம்மால் முடிந்தளவு மரங்களை நடுவோம் 'மரம் வளர்ப்போம் வாருங்கள்...மரம் செழித்து, மழை கொழித்து, பூமி மகிழக் கை கோர்ப்போம்'; வாருங்கள்...

**ஏழாலையூர் - சந்தோஸ்**

## மீண்டும் வடிவமைக்கப்படும் பிங் (Bing) அப்பிளிக்கேசன்




பிங் (Bing) ஆனது பிரபலமான இணையத் தேடல் பொறிகளுள் ஒன்றாகும். அப்பிளின் அலைபேசிச் சாதனங்களுக்காகப் பயன்படத்தப்படும் இந்தத் தேடல் பொறியில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இதன்படி ஐஓஎஸ் (iOS) சாதனங்களில் விரைவான தேடல் மற்றும் செய்திகளைப் பெறல் போன்றவற்றைப் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தகவலை மைக்ரோசொப்ட் நிறுவனமே உத்தியோகபூர்வமாக வெளி யிட்டிருந்தது. மேலும் இந்தத் தேடல் பொறியின் அலைபேசிச்சாதனங்களுக்கானபதிப்பானது டெக்ஸ்டாப்கணினிகளில்பயன்படுத்தப்படுபவற்றிலிருந்து முற்றாக வேறுபட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மண்ணுக்குள் புதைந்த கிணறு



சாவகச்சேரி,நவ.23

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் பகுதியில் பெய்த அடைமழையால் குடியிருப்புக் காணிக்குள் நிறைந்த வெள்ளத்தால் அங்குள்ள கிணறு ஒன்று இடிந்து, மண் கீழே இறங்கி உட்சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 20 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் தெற்கில் இடம்பெற்றது. 25 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட கிணற்றின் உட்பகுதி உடைந்து உள்ளே வீழ்ந்ததால், மணல் அந்த ஓட்டை. வழியாகக் கிணற்றினுள்ளே சென்றுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை என்பவரின் வீட்டுக்கிணறே இவ்வாறு உடைந்துள்ளது.

(ஐ-9)

## மயங்கி விழுந்த முதியவர் சாவு

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்து பெறும் வரிசை ஒழுங்கில் (கியூவில்) மருந்து வாங்குவதற்காகக் காத்திருந்த முதியவரொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். யாழ்.நகரைச் சேர்ந்த செல்லர் கணேசமூர்த்தி (வயது - 64) என்பவரே அவ்வாறு விழுந்து உயிரிழந்தவராவார்.

இந்த முதியவர் மாதாந்தக் கிளினிக்குக்காக வைத்தியசாலை கிளினிக் கில் மருத்துவரிடம் காட்டிவிட்டு மருந்து பெறுவதற்காக மருந்து வழங்கும் பகுதியில் நோயாளர்களுடன் ஒழுங்கு வரிசையில் காத்து நின்றுள்ளார். அதன்போது மயங்கி முகம் குப்புற நிலத்தில் வீழ்ந்துள்ளார். உட னடியாக அவர் வைத்தியசாலையில் சிகிச் சைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்து விட்டார் என்பது பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

நீதிமன்றப் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற் கொண்டார். பின்னர் சடலம் உறவினர்க ளிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-4)




சணச அபிவிருத்தி வங்கியின்
கிளிநொச்சி கிளை

உங்களுக்கு மென்மேலும் சிறப்பான, செயற்றிறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கத்துடன்
2015 நவம்பர் 23ஆம் திகதி
A-9 வீதி, கிளிநொச்சி
என்ற முகவரியிலுள்ள புதிய இல்லத்தில்
திறந்து வைக்கப்படுகிறது!

தொலைபேசி: 021 228 5316

SDBL
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ
தேசத்தின் முன்னோடி

சணச அபிவிருத்தி வங்கி என்பது இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வங்கியாகும்.

Fitch Rating BB+ (stable), RAM Rating BBB & P3. Reg. No: PB62PQ

# மியான்மரில் நிலச்சரிவு 50 பேர் சாவு; பலர் மாயம்



லண்டன், நவ.23
வடக்கு மியான்மரின் பச்சைக் கல் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஆகக் குறைந்தது 50 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கும் அதிகமானவர்கள் காணாமற் போயுள்ளனர்.

மியான்மரின்காசின்மாநிலத்தில் உள்ள உலகில் விலையுயர்ந்த பச்சைக் கல் சுரங்கத்தில் அடிக்கடி நிலச்சரிவுகள் ஏற்படுவது வழக்கமாகும். குறித்த சுரங்கத்தில் பச்சைக் கற்களைத் தேடும் பணியில் குறித்த பணியாளர்கள் ஈடுபட்ட வேளையிலேயே இந்த இடர் நடந்துள்ளது.

இதன்போது ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி குறைந்தது 50 பேர் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகின்ற வேளையில், பலர் காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சுரங்கத்தில் உள்ள கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டிருந்த இடத்திலேயே இந்த நிலச்சரிவு ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. ஆயினும் இந்தத் தகவல் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இதன்போது சுரங்கத் தளத்தில் அமைக்கப்பட்டிருந்த பல குடிசைகளும் நிலச்சரிவால் மண்ணில் புதையுண்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

குறித்த பகுதியில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், காணாமல் போனவர்கள் தொடர்பான எந்தவித தகவல்களும் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது. (ற)



பரிஸில் நடத்தப்பட்ட தீவி
பலப்படுத்தப்பட்டுள்ளது.
நடத்தப்படலாம் என்று அ

## தொடர் வான் தாக்குதல்; சிரியாவில் 36 பேர் சாவு

டமஸ்கஸ், நவ.23
சிரியாவின் தீர்எஸான் மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் 36 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தகவலை சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளிப்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடத்தப்பட்ட கொடூரத்தாக்குதலுக்குப்பொறுப்பேற்றுள்ள ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துக்கு எதிராக பிரான்ஸ், ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை, சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தீர்எஸார் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் ரஷ்யா மற்றும் சிரியப் படைகள் இணைந்து தொடர் வான்வழி தாக்குதல்களை நடத்தியுள்ளன. இதன்போது 70 க்கும் மேற்பட்ட தடவைகள் இடைவிடாது குண்டுகள் வீசப்பட்டன என்றும் கூறப்படுகின்றது. இதுகுறித்து மனித உரிமைகள் கண்காணிப்பக அதிகாரி ஒருவர் கூறும்போது -

மாகாணத்தின் பெரிய மற்றும் சிறிய நகரங்களையும், 3 எண்ணெய் நிறுவனங்களையும் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்று வரும் தாக்குதல்களில் மிகவும் மோசமான குண்டு வீச்சு இதுவாகும் - என்றார். கடந்த திங்கட்கிழமை அமெரிக்க கூட்டுப்படை நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகள் பயன்படுத்தி வந்த எரிபொருள் ஏற்றிச் செல்லும் 116 பாரவூர்கள் அழிக்கப்பட்டன. ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளஎரிபொருள்நிறுவனங்கள்மூலம் அந்த இயக்கத்துக்கு கோடிக் கணக்கில் வருமானம் கிடைக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## குழந்தைகள் பொம்மையில் குண்டு பொருத்தித் தாக்குதல்

### ஐ.எஸ். தீவிரவாதிகள் அட்டூழியம்



லண்டன், நவ.23
ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு வித்தியாசமான நுட்பங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது குழந்தைகள் விரும்பும் குழந்தைகள் பொம்மைகளில் வெடிகுண்டுகளை பொருத்தி தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

-இவ்வாறு தயாரிக்கப்பட்ட 18 குழந்தைகள் பொம்மைகளில் இருந்த வெடிகுண்டுகளை ஈராக் இராணுவத்தினர் அண்மையில் செயல் இழக்க வைத்து உள்ளனர்.

இது குறித்து சமூக வலைத்தளத்தில் தகவல் வெளியிட்டு உள்ள ஐ.எஸ். அமைப்பினர், சிரியாவில் மக்களுக்கு எதிராக குழந்தைகள் பொம்மை மூலம் வெடிகுண்டு வைக்கும் படலத்தை தொடர உள்ளோம் எனத் தெரிவித்து உள்ளனர்.

இது ஒருபுறம் இருக்க ஐ.எஸ். குழுவினர், ரஷ்யாவின் விமானங்களை அழிக்கஆணுறைகளில்வெடிகுண்டை பறக்க வைத்து வெடிக்கச் செய்கின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


ஆணுறைகளில் கட்டிப் பறக்கவிடப்படும் இந்த வெடி குண்டுகள் ரஷ்ய விமானங்களுக்கு மேலே சென்று வெடிக்கின்றன என்றும்- அவை விமானங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய வெடிகுண்டுகள் சிரியாவின் இடிலிப் நகரில் பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. (ற)

## ரோபோ மூலம

### சீனாவில் நடத்தப்ப

பீஜிங், நவ. 23
சீனாவில் குவாங்டாங் மாகாண
சிறுநீரகக்கோளாறினால் பாதிக்கப்பட்ட
துச் சிறுவனுக்கு நவீன தொழில்
கூடிய ரோபோ மூலம் சத்திரசிகி
நடத்தப்பட்டுள்ளது. குவாங்கோ ந
இந்தச் சத்திரசிகிச்சை மேற்கொள்ள
டுள்ளது.



திட்டமிட்டபடி அந்தச் சிறுவனுக்கு ரோபோ சத்திரசிகிச்சை செய்தது.பிரமாண்டதிரைக்கு முன் அமர்ந்து வைத்தியர்கள் அங்கிருந்தபடி சத்திரசிகிச்சைக் கூடத்தில் படுக்க வைக்கப்பட்டிருந்த சிறுவனுக்கு ரோபோ மூலம் சத்திரசிகிச்சை செய்தனர். சுமார் 2 மணித்தியாலம் 20 நிமிடங்கள் நடந்த இந்தச் சத்திரசிகிச்சை

## போர்க் குற்றவாளிகளுக்கு பங்களாதேஷில் தூக்கு

### நேற்று நிறைவேற்றப்பட்டது



டாக்கா, நவ.23
பாகிஸ்தானுக்கு எதிராக 1971 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சுதந்திரப் போராட்டங்களின்போது போர்க் குற்றங்களை இழைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பங்களாதேஷின் இரு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனை நேற்று அதிகாலை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சலாஹூதீன் குவாடர் சௌத்ரி மற்றும் அலி அசன் மொஹமட் முஜா ஹித் ஆகிய இருவருக்குமே பங்களாதேஷின் டாக்காவில் அமைந்துள்ள மத்திய சிறைச் சாலையில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவர்கள் இருவருக்கும் வெவ்வேறு தூக்கு மேடைத் தளங்களில் ஒரே நேரத்தில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது என்று மத்திய சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் எதிராக இனப்படுகொலை மற்றும் பாலியல் வன்புணர்வு ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டே சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் அவர்கள் இருவரும் தம் மீது சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்திருந்தனர்.

சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்ட சௌதிரி ஆறு முறை அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார். முஜாஹித் என்பவர் பங்களாதேஷின் மிகப் பெரிய இஸ்லாமியக் கட்சியின் ஒரு சிறந்த தலைவராகச் செயற்பட்டிருந்தார்.

இவர்கள் சார்பாக பங்களாதேஷ் ஜனாதிபதி அப்துல் ஹமீத்திடம் கருணை மனு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அவை நிராகரிக்கப்பட்டன. அதையடுத்தே தூக்கிலிடப்பட்டு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அந்நாட்டு உள்துறை அமைச்சர் அசடுஸ்ஸாமான் கான் தெரிவித்தார். குறித்த இருவருக்கும் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்ட சமயத்தில் அவர்களின் ஆதரவாளர்கள் பலர் மத்திய சிறைக்கு முன் பாகத் திரண்டிருந்தனர். (ற)

## நி

லண்
நியூ
யில்
தொ
பேரு
நியூ
வித்த
விபத்
பாகங்
யில்
குறித்
வதற்
என்று
றனர்.
சுற்று
ஹெல
ளது.
யோது



...தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் பெல்ஜியம் தலைநகர் ப்ருசெல்ஸில் கைது செய்யப்பட்டுள்ளதை அடுத்து அங்கு பாதுகாப்புப் ...பட்டுள்ளது. அங்கு தேடுதல்களும், சுற்றிவளைப்புக்களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பரிஸில் நடத்தப்பட்ட தாக்குதல் பாணியில் அங்கும் தாக்குதல் ...ம் என்று அஞ்சப்படுகின்றது. அதையடுத்து ப்ருசெல்ஸின் வீதிகள் எங்கும் பாதுகாப்புப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. (ற)

# எமது நிலைப்பாடு கடுமையாகின்றது

## மாலி தாக்குதல் குறித்து அமெ. ஜனாதிபதி கருத்து

வொஷிங்டன், நவ.23

மாலியின் தலைநகரில் தீவிரவாதிகள் நடத்தியிருக்கும் தாக்குதலானது, தீவிரவாதம் மீது அமெரிக்கா கொண்டிருக்கும் நிலைப்பாட்டை இன்னமும் கடுமையாக்குகின்றது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் இடம்பெறும் பிராந்திய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தின் கோரத்துக்கு மற்றுமொரு உதாரணம் மாலி தாக்குதல் என ஒபாமா அங்கு சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாலி பாதுகாப்பு படைகளும், பன்னாட்டு பாதுகாப்பு படைகளும் மாலியில் மக்களின் பாதுகாப்புக்காக பாடுபடுகின்றனர்.

பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களில் பலர் பாதுகாப்பாக மீட்கப்பட்டிருக்கின்றனர். இதற்குக் காரணமான பாதுகாப்புத் தரப்பினருக்கு நன்றி கூறுகின்றேன். விடுதியில் மேலும் அமெரிக்கர்கள் இருக்கலாம். எல்லோருடைய பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான தீவிரவாதத் தாக்குதல், தீவிரவாத அமைப்புக்களுக்கு எதிராகவும் அதனை ஊக்குவிக்கும் நாடுகளுக்கு எதிராகவும் நாம் கொண்டிருக்கும் தீர்மானத்தை வலுவடையச் செய்கின்றது - என்றார். (ற)

# ...மூலம் சத்திரசிகிச்சை

## ...த்தப்பட்டது

...மாகாணத்தில் ...பாதிக்கப்பட்ட 6 வய... ...தொழில்...த்துடன் ... சத்திரசிகிச்சை ...வாங்கோ நகரில் ...மேற்கொள்ளப்பட்...

வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மருத்துவ உலகில் ரோபோ மூலம் முதன் முறையாக இந்தச் சத்திரசிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. லேப்ராஸ்கோபிக் மூலம் மேற்கொள்ளப்படும் இந்தச் சத்திரசிகிச்சை வழமையைவிட காட்டிலும் குறைந்த நேரத்தில் செய்து முடிக்கப்பட்டது. (ற)



...வற்றப் ...நாட்டு ...ஸ்ஸா ...த்தஇரு ...நிறை ...களின் ...றைக்கு (ற)

# தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி கிம் காலமானார்

சியோல், நவ.23

தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி கிம் யங் சாம் தனது 87 ஆவது வயதில் காலமானார். தென் கொரியாவின் ஜனநாயக சார்பு இயக்கத்தின் முன்னேற்றப் பாதைக்கு இவரே வித்திட்டவராவார்.

கிம் யங் சாம் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், இரத்தத் தொற்று மற்றும் இதய செயலிழப்பு ஆகியவை காரணமாக உயிரிழந்துள்ளார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தென் கொரியாவில் பல தசாப்தங்களாக இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடிய கிம், தென் கொரியாவின் ஜனநாயக சீர்திருத்தத்துக்கு அரும் பாடுபட்டவராவார்.

ஜனநாயக சார்பு இயக்கத்தின் மூலம் செயற்பட்டமையால் இவர் கடந்த 1980ஆம் ஆண்டு இருமுறை வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இவர் 1993, 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்கொரியாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். இவர்தனது ஆட்சிக்காலத்தின்போது, சுண்டு ஹ்வான் மற்றும் ரோக் டே வூ ஆகிய இரு இராணுவ ஆட்சியாளர்களுக்கு மன்னிப்பளித்திருந்தார். (ற)

# மீண்டும் எபோலா

## லைபீரியாவில் மூவர் இனங்காணப்பட்டனர்

மொன்ரோவியா, நவ.23

மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியாவில் 3 பேர் மீண்டும் எபோலாத் தொற்றுக்குள்ளாகி யுள்ளனர். லைபீரியாவில் எபோலா நோய் இல்லை எனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது 3 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டின் சுகாதாரத்துறை கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.



குறித்த மூவரில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர். லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில் அவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுவருகின்றன என அந்த நாட்டின் சுகாதாரத்துறை தகவல் வெளியிட் டுள்ளது. உலக சுகாதார நிறுவன அதிகாரிகள் இது குறித்துத் தெரி வித்துள்ளதாவது:-

இந்த நோய்த் தொற்றுப் பற்றிய செய்திகள் பலதிசைகளில் இருந்தும் வருகின்றன. பலருக்கு இந்த நோய் பரவுவதற்கு முன், இந்தத் தொற்றை தடுக்கக் கூடிய வழியை நாம் கண்டு பிடிக்க வேண்டும். தடுப்பு முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் எபோலாவை விரட்டியடிக்க முடியும் - என்று தெரிவித்தனர்.

சியாரா லியோன், லைபீரியா மற்றும் கினியா ஆகிய எபோலாவால் பாதிக்கப்பட்ட மூன்று நாடுகளில், லைபீரியாவில் தான் அதிக எபோலா இறப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த 3 நாடுகளில் 11 ஆயிரத்து 300 பேர் எபோலாவால் இறந்தனர். அதில் 4 ஆயிரத்து 808 பேர் லைபீரியாவைச் சேர்ந்தவர்களாவர். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி இந்த மூன்று நாடு களில் மட்டும் 28 ஆயிரத்து 600 பேர் எபோலாத் தொற்றுக்களால் பாதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி4)

# நியூஸிலாந்தில் ஹெலி விபத்து ;7 பேர் சாவு

லண்டன், நவ.23

நியூஸிலாந்தின் தெற்கு தீவுப்பகுதியில் இடம்பெற்ற ஹெலி விபத்தொன்றில் அதில் பயணித்த 7 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று நியூஸிலாந்து பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான ஹெலியின் பாகங்கள் பொக்ஸ் க்ளாசியர் பகுதியில் காணப்படுகின்றன என்றும் குறித்த இடத்தில் மீட்புப் பணி செய்வதற்கு கடினமாக இருக்கின்றது என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சுற்றுலாப்பயணிகளைஏற்றிச்சென்ற ஹெலியே விபத்துக்குள்ளாகியுள்ளது. ஹெலி விபத்துக்குள்ளான போது, அதில் ஒரு விமானியும் ஆறு பயணிகளும் இருந்தனர் என்று குறிப்பிடப்படுகின்றது. அவர்களில் எவரும் இன்னமும் மீட்கப்படாத போதும் அவர்களில் எவரும் உயிருடன் இருப்பதற்கான சாத்தியம் இல்லை என மீட்புப் பணிகளுக்காகச் சென்றிருக்கும் படையினர் தெரிவித்துள்ளனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்ற போதும், உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

குறித்த பொக்ஸ் க்ளாசியர் பகுதியில் 2010 ஆம் ஆண்டும் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது. இதன் போது அதில் பயணித்த 9 பேரும் கொல்லப்பட்டனர். (ற)



# நிலநடுக்கம்

கிழக்கு இந்தோனேஷியாவில் நேற்றுமுன்தினம் 6.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தோனேஷியாவின் பாபர் தீவுகளுக்கு அருகில் 67 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது. குறித்த நிலநடுக்கத்தை அடுத்து அந்தப் பிராந்தியத்தில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலநடுக்கத்தை அடுத்து மக்கள் அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியே ஓடியுள்ளனர். இந்த நிலநடுக்கம் சுமார் 25 செக்கன்கள் மாத்திரமே ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

பா.தனபாலன்
(நிபுணத்துவ ஆலோசகர்)
சமய விழுமியப் பிரிவு,
கல்வியமைச்சு பத்தரமுல்ல



# வடக்கு கிழக்கில் பாதுகாப்பான பாடசாலையும் சிறுவர் நேய அணுகுமுறையும்

கடந்த வாரம் இலங்கை முழுவதும் சிறுவர்களுக்குப் பாதுகாப்பான பாடசாலை மற்றும்சிறுவர் நேயப் பாடசாலை தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் போர் நடைபெறாத இடங்களில் பாடசாலைகள் ஓரளவு பாதுகாப்பானவையாகச் செயற்படுகின்றன. ஆனால், வடக்குகிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பான பாடசாலை மற்றும் சிறுவர்நேயப் பாடசாலை அணுகுமுறைகள் தொடர்பாகப் பெருமளவு குறைபாடுகளை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் அறிக்கைகள், களநிலைத்தகவல்கள் என்பன வெளிக்காட்டி வருகின்றன.

**பாதுகாப்பான பாடசாலை**

பௌதிக ரீதியாக மாணவர்கள் படிக்கக்கூடிய அளவிலான கட்டட வசதிகள் பாதுகாப்பான பாடசாலை என்ற எண்ணக்கருவில் முதன்மை பெறுகின்றது. வடக்கு கிழக்கின் எல்லாப் பாடசாலைகளுமே போரால் சேதமானவை, அழிந்தவைதான். அவசரமான திருத்த வேலைகள், ஓரளவான புதிய கட்டட வசதிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளனவே தவிர, பாரதூரமான ஆபத்து நிலையிலான கட்டட பௌதிகச் சூழலைப் பல பாடசாலைகள் கொண்டுள்ளன.

1. இன்றும் ஓலைக் கொட்டில்களாக மழை ஒழுக்குகளுடன் பிள்ளைகள் வகுப்பறையில் குடைபிடித்துக் கொண்டிருக்கும் பாடசாலைகள்.
2. மேல்மாடிக் கட்டட வேலைகள் பல ஆண்டுகளாகப் பூர்த்தியாகாத நிலையில் மழை பெய்யும்போது கீழே இயங்கும் வகுப்புக்கள் நீரால் நிரம்பி வழிகின்றன.
3. இடியும் நிலையில் காணப்படும் மிகப் பெரிய பாடசாலைக் கட்டடங்கள் அகற்றப்படாமல் உள்ளன.
4. மிக நெருக்கமான வகுப்பறைகள். காற்று, வெளிச்சம் போதாத வகுப்பறைச் சூழல்.
5. மலசல கூடக் கட்டடங்கள் மாணவர் தொகைக்கேற்ப போதுமானதாக இல்லாத பாடசாலைகள்.
6. இடவசதி இல்லாமல் மலசல கூடங்களுக்கு அருகில் உள்ள வகுப்பறைகளில் துர் நாற்றத்தின் மத்தியில் படிக்கும் மாணவர்கள்.

இவை மிக அடிப்படையான தேவைகளாகும். இவற்றை இனம் காண்பது திருத்தங்கள் செய்வது இன்றைய மிக முக்கியமான தேவையாகும். அரசியல்வாதிகளது கவனம் கல்வியின் பக்கம் மிகக்கூடுதலாகத் திரும்ப வேண்டிய சூழலை மேற்கூறிய விவரங்கள் எடுத்தியம்புகின்றன. மேலும், பாடசாலை நோக்கி மாணவர்கள் வரும்போதும், வீட்டிலும் வீதியிலும் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதற்குப் பெற்றோர், ஆசிரியர், அதிபர், மற்றும் பொலிஸாரின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் அவசியமாகின்றன.

**சிறுவர்நேய அணுகுமுறை**

உலகளாவிய ரீதியில் இன்று சிறுவர் உரிமைகளை மையமாகக் கொண்டு சிறுவர் நேய அணுகுமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சிறுவர் நேயக் கட்டமைப்பானது கல்வி கற்பதற்கும், உரிய பாதுகாப்பைப் பெறுவதற்கும், பிள்ளைகள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும், பிள்ளைகளுக்குரிய உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலும் பின்வரும் ஆறு துறைகளினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1. உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட செயல் ரீதியான உட்படுத்தல்.
2. ஆண் பெண் சமூக நிலைப்பாட்டுக்குத் துலங்கல் காட்டுதல்.
3. பிள்ளைகளின் கற்றல் பெறுபேறுகளை விருத்தி செய்தல்
4. பிள்ளைகளின் சுகாதாரப் பாதுகாப்பையும், ஏனைய பாதுகாப்புக்களையும் உறுதிப்படுத்தல்.
5. இதற்காகப் பிள்ளைகளினதும் குடும்பங்களினதும் செயல் ரீதியான பங்களிப்பைப் பெறல்.
6. சிறுவர் நேய முறைமைகள், கொள்கைகள், ஒழுங்கு விதிகள் மூலம் பல்வேறு வசதியீனமுடைய சிறார்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய ஆறு பரிமாணங்களும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் முறையாகப் பிரயோகிக் கப்படும்போது, சிறார்களின் பாதுகாப்பு முறையாகக் கட்டமைக்கப்படும். ஆனாலும், வடக்குகிழக்கு மாகாணப்பாட பாடசாலைகளில் சிறுவர் நேய அணுகுமுறைகள் தொடர்பான பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டாலும் போர்ச்சூழலின் தாக்க விளைவுகள் அவற்றை முழுமை பெறவிடவில்லை.



**போர்த்தாக்க விளைவுகள்**

இலங்கையின் வடக்குக், கிழக்குப் பகுதியில் ஒரு கொடூரப் போர் கடந்த மூன்று தசாப்தங்களாக நீடித்திருந்தது. இந்தக் காலத்திலும், இதற்குப் பிற்பட்ட போர்த்தாக்க விளைவுகளுடன் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பாடசாலை மாணவர்களிடையே போர்த்தாக்க விளைவுகள் ஏற் படுத்தி இருக்கும் தாக்கங்கள் பாரதூரமானவை. அவை மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் சமூகத்துக்கும் பெரிய உளத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. போரால் பெற்றோர்களை இழந்தமை, பிரிந்தமை, ஆதரவற்ற உணர்ச்சிச் சூழல், இடம்பெயர்வு, பெற்றோர்களாலும் ஏனைய பெரியவர்களாலும் ஊடுகடத்தப்பட்ட பதற்றம், பதகளிப்பு, துன்பம், கழிவிரக்கம், குற்றவுணர்வு போன்ற உணர்வுகள் மாணவர்களின் உளநிலையில் பாதுகாப்பற்ற நிலைகளைத் தோற்றுவித்துள்ளன. இவற்றை நீக்குவதற்குப் பெரிய அளவிலான வேலைத்திட்டங்கள் தேவையாகவுள்ளன. ஆனால், நடைமுறையில் எந்த ஆக்கபூர்வ செயற்பாடுகளையும் பொறுப்பானவர்கள் மேற்கொண்டதாக இல்லை. எதிர்கால அபிவிருத்தி நோக்கிய கருத்தூன்றல் இன்றி எம்மிடையே முரண்பாடுகளை வளர்த்து ஒற்றுமையின்றி, சமூக, இனப்பொறுப்பின்றிய நிலை மிக மோசமானது.

மாணவர்களின் உடல் உள சமூக பாதுகாப்புக்குப் பாடசாலைகளே இன்று முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மாணவர்கள் தம்மைச் சூழ நடப்பவை பற்றிய முழுமையான அறிவையும் அவற்றைப் பற்றிய கருத்து நிலையேற்றத்தையும் அறிந்து கொள்ள முடியாத பருவத்தில் இருக்கையில், உண்மையிலேயே பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோரும், வளர்ந்தோரும்தான் தங்களுடைய முன்மாதிரிச் செயற்பாடுகள் வாய்மொழி, ஆதரவு, உள பாதுகாப்பு அன்பு சார்ந்த நடத்தைகளாலும் மாணவர்களுடன் உறவாடும் முறைகளாலும் அவர்களைச் சூழ நடப்பவை பற்றிய விளக்கத்தையும், அர்த்தத்தையும் சரியாகக் கொடுக்க வேண்டும். அப் போது தான் அவர்களுக்கு உளப்பாது காப்பை ஏற்படுத்த முடியும். இதற்கான சூழ் நிலைகளை வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் உருவாக்க வேண்டியுள்ளது.

எனவே, மாணவர்களுக்கு ஆரோக்கியமான, நம்பிக்கையான, ஆதரவான, பாதுகாப்பான, செழுமையான ஒரு சூழலைப் பாடசாலையில் ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் தமக்கு ஏற்படக்கூடிய நெருக்கீடுகளை வெற்றிகரமாக எதிர்கொள்வார்கள். இதற்கு மேலும் வலுவூட்ட இடர் முகாமைத்துவ பாதுகாப்புப் பயிற்சிகளையும் இவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது.

**இடர் முகாமைத்துவமும் பாதுகாப்பும்**

இன்று இயற்கையாக, செயற்கையாக இடர்கள் அநேகம் நடந்த வண்ணமுள்ளன. இது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள், செயலமர்வுகள், நடைமுறைகள் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்குகிழக்கு மாகாணங்களில் போதுமானதாக இல்லை. பாடசாலை முறைமையில் இடர் முகாமைத்துவ செயன்முறைகள் பல மடங்கு விஸ்தரிக்கப்பட வேண்டும். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்ற வகையில் விரைவான விழிப்புணர்வுச் செயன்முறைகள் தேவையாகவுள்ளன. இயற்கையாகவும், செயற்கையாகவும் நடைபெறும், நடைபெறவுள்ள இடர்கள் அவற்றிலிருந்து விடுபடும் செயன் முறைகள் பயிற்சிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறான உடலியல், உளவியல், சமூகவியல், பௌதிகவியல் பாதுகாப்புக்களை முழுநிறைவாகப் பாடசாலைகள் வழங்க வேண்டும். இதற்குக் கல்வித்துறையினரும், ஏனைய துறையினரும், சமூகத்தவர்களும் கூடுதல் அக்கறையையும், அனுசரணையையும் வழங்க வேண்டும். இல்லையேல் இவ்வாறான சூழலில் வளர்ந்து வரும் மாணவர்கள் தமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கையாள்வதற்கு வன்முறை சார்ந்த முறைகளையே பயன்படுத்துவர். இதன் வழி ஒரு விசவட்டச் சூழல் உருவாகி படிப்படியாக வெறுப்பும், ஆக்ரோசமும் நிறைந்தவர்களாக, வன்முறையாளர்களாக இவர்கள் மாறி விடுவர் என நவீன சமூகவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்து கின்றன. எனவே பாதுகாப்பான பாடசாலைச் செயற்றிட்டத்தின் நோக்கம் நிறைவேற அனைத்துச் சமூகப் பிரிவினரும் பாடுபட வேண்டும். எமது எதிர்காலத் தலைவர் கள் இன்றைய மாணவர்களே. சிறுவர் நேய அணுகுமுறைகளைச் சரியாகப் பிரயோகித்து பூரண பாதுகாப்பும், சமநிலை ஆளுமையும் கொண்ட மாணவர்களாக அவர்களை ஆக்க வேண்டியது பாடசா

# பனை வளத்தைப் பெருக்குவோம்


தமிழர் தாயகத்தில் முப்பது வருட காலமாக ஒரு கொடிய போர் நடைபெற்று உயிர் அழிவுகளையும், சொத்தழிவுகளையும் ஏற்படுத்தியமை யாவரும் அறிந்ததே. அத்துடன் நின்றுவிடாது பயன்தரும் பனை தென்னைகளையும் இந்தக் கொடிய போர் விட்டுவைக்கவில்லை. அதனால் இன்று பனை மரத்துக்குப் பெரிய தட்டுப்பாடு நிலவுகிறது. இப்படிப்பட்ட சூழலில் மக்கள் தமது தேவைக்கு கிராமம் கிராமமாக பனை மரத்துக்கு அலைந்து திரிவது மிகவும் கவலை தரும் விடயம். மிதமிஞ்சிய பனைகளையும் சிலர் திருட்டுத் தனமாக தறித்து காவல்துறையிடம் பிடிபட்டு நீதிமன்றில் தண்டம் செலுத்தி வருவதை பத்திரிகைகள் ஊடாக அறிய முடிகிறது. தற்போதைய சூழலில் பனைமரம் தறிப்பதற்கு கடுமையான அனுமதிப்பத்திர நடைமுறை பின்பற்றப்படுவது வரவேற்கத்தக்கது. இந்த நடைமுறை மேலும் இறுக்கமடைய வேண்டும் என்பதே பொது நலவிரும்பிகளின் வேண்டுகோளாக இருப்பதைக் காணமுடிகிறது. இல்லையேல் எமது எதிர்காலச் சந்ததிக்கு பனை மரத்தை புகைப்படத்திலே தான் பார்க்க வேண்டிய சூழல் உருவாகும். இந்த நிலை மாறவேண்டுமானால் ஒவ்வொருவரும் எமது எதிர்காலத்தின் நன்மை கருதி வெற்றிடங்களாக உள்ள காணிகளில் பனம் விதைகளை நட்டு அவற்றைப் பாதுகாப்பான முறையில் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனித்தால் ஓரளவுக்கேனும் அழிந்து போன பனை வளத்தை மீளப்பெறமுடியும். எனது உயிரினும் மேலான தாயக உறவுகளே! தற்போது பனம்பழம் விழுந்து முடிந்து அவை விதையாகும் காலம். பனை மரம் இல்லாதோருக்கு உள்ளவர்கள், விதைகளைத் தாராள மனதோடு கொடுத்து உதவி அவர்களை ஊக்கப்படுத்தி பனை வளத்தைப் பெருக்க நடவடிக்கை எடுங்கள்.

எமது தேசத்தில் நடந்த போரில் மாண்டுபோன உயிர்களை மீட்டெடுக்க முடியாதது கொடிய வேதனையிலும் வேதனை. ஆனால் அழிவடைந்த பயன்தரும் பனை வளத்தை நாம் ஒன்று சேர்ந்தால் மீளவும் பழைய நிலைக்கு கொண்டு வந்திட முடியும். அன்பான உறவுகளே எதிர்காலத்துக்காக சற்றுப்பாடுபட்டு உழைப்போமாக!

அ.இசைப்பிரியா

# கிராஞ்சி பிரதான வீதிக்கு விடிவு எப்போது? கவனிப்பார்களா அரசியல்வாதிகள்?

கிராஞ்சி வேரவில் செல்லும் பிரதான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். மேலும் வேரவில் வைத்தியசாலையில் இருந்து அவசர நோயாளர்கள் மற்றும் கர்ப்பவதிகளை முழங்காவில் வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்லும் நோயாளர் காவு வண்டிகள் பெரும்சிரமத்தை எதிர்கொண்டுள்ளன. மக்கள் எதிர்நோக்கும் இத்தகைய சிரமங்களை அரசியல்வாதிகள் சிந்திப்பதில்லை. அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை மட்டும்தான் வழங்குகிறார்கள். செயற்பாட்டில் எதுவும் இல்லை. எத்தனை அரசியல்வாதிகள் இந்த வீதியால் பெரும் சிரமப்பட்டு வாக்குக் கேட்க வந்தார்கள், அப்போது மட்டும் தான் வாக்குறுதிகள் தருவார்கள், வீதியைப் புனரமைப்போம் என்று. அது தேர்தல் காலங்களில் மட்டுமே, மக்கள் இட்ட வாக்கால் தான் நாடாளுமன்றத்தில் நாற்காலியில் அமரமுடிகின்றது என்பதையும் அவர்கள் சிந்திக்க வேண்டும். மக்கள் இட்ட பொன்னான வாக்குகளுக்கு மதிப்பளியுங்கள் அரசியல்வாதிகளே! இந்தமுறை உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு முன் எமது கிராமத்தின் வீதியை புனரமைத்து அந்த வீதியினூடாக வாருங்கள். இனி வாக்குறுதிகள் வேண்டாம். எமது பொன்னான வாக்குகளை என்றும் உங்களுக்காக வழங்கக் காத்திருக்கின்றோம்.





த.கவிவாணி.

# பொறுப்பு வேண்டும்

19.11. 2015 வியாழக்கிழமை லவ்லேனுக்கு தபால் விநியோகத்துக்கு வந்திருந்த சுன்னாகம் தபாலகத்தைச் சேர்ந்த தபாற்காரர் குறிப்பிட்ட ஒரு வீட்டின் கேற் ஓரம் நின்று ஒரு பெயர் சொல்லிக் கேட்கவே, அந்த வீட்டின் உரிமையாளர் தனக்குத்தான் தபால் வந்துள்ளது என கேற்றை நோக்கிச் சென்றுள்ளார். அங்கு தபாற் காரரைக் காணவில்லை. 30 நிமிடத்துக்கு மேலாக நின்ற வீட்டு உரிமையாளர் தபாற்காரரைக் காணாத காரணத்தால், தபாலகத்தில் சென்று தபாலைப் பெற்றுக்கொள்வோம் என நினைத்து வீட்டுக்குள் சென்றுவிட்டார். பிற்பகல் ஐந்து மணிக்கு மழையில் நனைந்தபடி அந்தக் கடிதத்தை வீட்டுக்கு வெளியே புல்லுக்குள் இருந்து கண்டெடுத்த உரிமையாளர் தபாற்காரரின் பொறுப்பற்ற சேவையை எண்ணி மனம் நொந்து கொண்டார். டயலொக் நிறுவனத்தின் கடிதம் அது. அது ஒரு மிக முக்கியமான ஆவணக் கடிதமாக இருந்திருந்து மழையில் சேதமாகியிருந்தால் என்ன செய்வது? விநியோகிக்கப்பட வேண்டிய கடிதங்களை உரியவர்களிடம் அல்லது அவர்களது தபால் பெட்டியில் சேர்க்க வேண்டியது தபாற்காரரது கடமை. தபாற்சேவையானது தொடர்பாடல் சேவை என்பதை தபாற்காரர்கள் நினைவிற் கொள்ள வேண்டியது கட்டாயமாகும். சம்பந்தப்பட்ட திணைக்களம் இது குறித்துக் கவனிக்க வேண்டும் என பணிவாகக்கேட்டுக்கொள்கிறேன்.

உடுவிலூர் கலா.

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# மீண்டும் யாழ்ப்பாணத்தை உலுக்கியுள்ளது ரயில் விபத்து

யாழ்ப்பாணத்துக்கு ரயில் வந்ததும்தான் வந்தது உயிர்கள் கடுகதியில் காவுகொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் முன்னர் ரயில் சேவை இருந்தபோதிலும் இதே நிலைமை தான் இருந்துள்ளது. தற்கொலைகள், தற்செய லான உயிரிழப்புக்கள், தற்செயலாக அங்கங்கள் இழக்கப்படுதல் எனப் பல சம்பவங்கள் உள்ளன யாழ்ப்பாண ரயில் சேவை வரலாற்றில்.

கச்சேரிக்கு அண்மையில் கச்சேரி நல்லூர் வீதியை ஊடறுத்துச் செல்கிறது ரயில் தண்டவாளம். புதிய ரக சொகுசுக் கார் வீதியால் வருகின்றது. ரயில் வருவதற்கான சமிக்ஞைகள் போடப்பட்டுள்ளன. ரயில் வருவதற்கு முன்னர் போடப்படும் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டுள்ளது. சிவப்பு விளக்கு ஒளிரவிடப்பட்டுள்ளது. முன்னால் அபாயம், பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை போன்ற அறிவுறுத்தல்கள் போடப்பட்டும் இருந்தன. இருந்தபோதிலும் கார் தண்டவாளத்தை கடந்துள்ளது. கல்கிசையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ரயில் காரை அடித்துத் தூக்கியது. உடனடியாக வேகத்தை கட்டுப்படுத்த முடியாத கடுகதி ரயில் தூக்கிய காரை 350 கிலோ மீற்றர் வரை இழுத்துவந்து சோமசுந்தரம் அவனியூக்கு அருகாமையில் வேகத்தைக் கட்டுப்படுத்தி நின்றுள்ளது. சொகுசுக் கார் நசிந்து சிதைந்தது. அத்தோடு முடிந்தது...!

ஒரு நிமிடம் தாமதிப்பதால் அப்படி என்ன ஆகிவிடப் போகிறது? இந்த ரயில் விபத்தில் 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நால்வரில் ஒருவர் உயிரிழக்க மூவர் சுய நினைவின்றி வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர். அவசரத்தால் கண்ட பலன் என்ன? இழப்பு மட்டும் தான். குடும்பத்தினர், குழந்தைகள், மனைவி.. இவர்களைப் பற்றி நினைத்திருக்கலாமே. வேறு வாகனங்கள் என்றால் கூட பிறேக் போட்டு நிறுத்தி ஏற்படும் இழப்புக்களைக் குறைத்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும். வந்தது ரயில். காவு கொள்ளாமல் செல்லுமா?

காரில் வந்தவர்களில் பிழை உள்ளது என்பது ஒரு புறம் இருக்க சன நெரிசல் உள்ள, யாழ் நகருக்கு அண்மையில் உள்ள ரயில் கடவைக்கு பாதுகாப்புக் கடவை போடாதது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது. அதற்காக காரில் வந்தவர்கள் சரியாக நடந்துகொண்டார்கள் என்ற கருத்தல்ல. அவர்கள் நிதானித்திருந்தால் நிச்சயமாக 'விபத்தில் இருந்து தப்பித் திருக்கலாம்.

பாதுகாப்புக் கடவைகள் அனைத்து கடவைகளுக்கும் அவசியம். அண்மையில் கல்லூரி மாணவன் ஒருவன் ரயிலில் அடிபட்டு உயிரிழந்தான். அன்றுமுதல் அந்த மாணவன் அடிபட்ட கடவையைப் பாதுகாப்பான கடவை ஆக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இனிக் கச்சேரி கடவைக்கும் பாதுகாப்புக் கடவை போடப்படும். இனி அந்தக் கடவையில் விபத்துக்கள் குறையும். என்றாலும் ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

பாமர மக்கள் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அதிக அக்கறையாக இருப்பதாகவே தெரிகிறது. படித்தவர்கள் தான் இப்படியான விபத்துக்களில் அதிகளவில் மாட்டிக்கொள்கின்றனர். பாமர மக்களிடம் இருக்கும் நிதானம் இவர்களிடத்தில் இருப்பதில்லையா என்பது கேள்விக்குறிதான்.

வேகம் விவேகம் இல்லை. இழப்பு இழப்புத்தான். இந்த விபத்தில் இழக்கப்பட்ட உயிர் ஒரு பெற்றோரின் சொத்து. பெண்ணொருவரது கணவன், இரு பிள்ளைகளுக்குத் தந்தை. ஒரு கல்லூரியின் பெறுமதியான விருட்சம். பொறியியல் பீடத்தின் உருவாக்கம். சமூகத்தில் அந்தஸ்துள்ள ஒருவர். இழப்பு அவர் சார்ந்த அனைவருக்கும் தான்.

விபத்துக்களில் இருந்து தப்பித்துக்கொள்ளும் உத்திகளை நாங்கள்தான் பின்பற்றவேண்டும். எந்த நேரமும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் கூடவே இருந்து பாதுகாக்க முடியாது. இயலுமானவரை அறிவுறுத்தல்களை வழங்குகின்றனர். இனி நாங்கள்தான் எங்களைப் பாதுகாக்கவேண்டும்.

எந்த ஒரு சம்பவமும் அடுத்தவர்களுக்கு நடக்கும்வரை தான் சம்பவம், செய்தி. நமக்கு என்று வரும்போதுதான் அதன் தாக்கம் தெரியும். உணர்ந்துகொள்வோம். ஆனால் நாங்கள் அப்படி உணர்ந்து கொள்ளும் தருணத்தில் இழப்பு ஏற்பட்டிருக்கும். சிந்தித்து செயற்படுவோம். நிதானத்தோடு பயணிப்போம். நீடித்த ஆயுளோடு உறவுகளோடு வாழ்வோம்..!

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021‡492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944

விளம்பரம் : 021‡493 1111

விநியோகம் : 021‡493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com

விளம்பரம்: advt@uthayan.com

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை பல தரப்புகளின் கருத்துத் தேவை

அண்மையில் நடந்துமுடிந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சிறுவர்களும் அந்த சிறுவர்களுக்கு பயிற்சி அளித்திருந்த ஆசிரியர்களும் அவ்வாறு சிறந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்டுள்ள பாடசாலைகளின் அதிபர்களும் மகிழ்ச்சியடைந்திருந்தார்கள்.

அதேபோல் அவ்வாறு சிறப்புக்குரிய சிறார்களை பெற்றமையினால் பெற்றோரும் கூட பெருமைக்குள்ளாகியிருந்தார்கள். தம்பிள்ளை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையால் சமூகத்திலும் தமக்கு ஒரு கௌரவம் கிடைத்திருப்பதாக அந்தப் பெற்றோர் எண்ணிப் பெருமிதம் அடைந்ததில் வியப்பில்லை -- தவறுமில்லை.

ஆனால், இந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை ஒழித்துவிட்டு அதை எட்டாம் ஆண்டில் நடத்துவது பற்றி அரசு ஆலோசித்து வரும் செய்தியானது பலரையும் சிந்திக்க வைத்துள்ளது.

5 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் சிறார்கள் பெரும்பாலும் பத்துவயதான பச்சிளம் குழந்தைகள். உலக விவகாரங்கள் குறித்து பகுப்பாய்ந்து சிந்திக்க முடியாதவர்கள். பெற்றோரையும் ஆசிரியர், அதிபர்களையும் மகிழ்ச்சியுறச் செய்வதற்காக குழந்தைகளை பெற்றோரும் ஆசிரியர்களும் இரவுபகலாக ஓய்வின்றி படிக்கும்படி கட்டாயப்படுத்துவது சரிதானா? என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. குழந்தைகளின் இயல்பான அறிவு வளர்ச்சிக்கு உதவுவதாக கல்விமுறை அமையவேண்டுமேயன்றி அவர்களின் மனவளர்ச்சியை மழுங்கச் செய்வதாக இருக்கலாகாது என்று கல்வியாளர்கள் கருதுகிறார்கள்.

இந்தப் பரீட்சை சிறுவர்களின் உள ஆரோக்கியத்தை வெகுவாகப் பாதிப்பதாக அண்மையில் ஆய்வொன்றை நடத்தி முடித்துள்ள இரண்டு மருத்துவ நிபுணர்கள் அறிவித்துள்ளார்கள். சுகாதார அமைச்சைச் சேர்ந்த மகப்பேற்று குழந்தைகள் ஆரோக்கியம் மற்றும் இறப்பு நிலை, விழிப்புணர்வு நிபுணர் மருத்துவர் கபில ஜெயரட்ணவைத் தலைவராகக் கொண்டு சமூக மருத்துவத்துறையைச் சேர்ந்த மருத்துவர் திமுது பீரிஸூம் இணைந்து மொரட்டுவையில் பன்னிரண்டு பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்ற சமயத்தில் இந்த ஆய்வை மேற்கொண்டிருந்துள்ளனர்.

அதன் பிரகாரம் தமது பிள்ளைகள் சித்தியடைந்து விடவேண்டும் என்ற ஆர்வம் உள்ள பெற்றோரின் பிள்ளைகள், திருப்தியற்ற மனவளர்ச்சிக்கு உள்ளாகக் கூடிய சாத்தியக்கூறு அதிகமாகவே காணப்பட்டுள்ளது. பெற்றோர் பிள்ளைகளைப் படிக்குமாறு அடிக்கடி வற்புறுத்துவதும் படிப்புத் தொடர்பாகக் கண்டிப்பதும் இந்த நிலைமையை மேலும் மோசமாக்குவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.


மருத்துவர் ஜயரட்ண இது பற்றிக் கூறுகையில்;

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சிறுவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு நிலைக்கு உச்சமடைந்துள்ளது. அதேநேரம் சிறுவர்கள் மத்தியில் அது கடும் மன அழுத்தத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களின் வளர்ச்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றார்.

இவ்வாறு அறிஞர்களும், கல்விமான்களும், சிறுவர் உளவள ஆய்வாளர்களும் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலேயே 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையை ஒழிப்பதற்கு அரசு ஆலோசிக்கின்றது என்று தெரியவந்துள்ளது. இருந்தபோதும் இதுபற்றி இறுதி முடிவை எடுக்கும்முன்னர் நாடளாவிய முறையில் கல்விமான்கள், பாடசாலை அதிபர்கள், பெற்றோர் அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூகத்தினரின் கருத்துக்களையும் அறிய முற்படுவது அவசியம்.

# அம்புலன்ஸ் படகுச் சேவையும் நெடுந்தீவு மக்களும்

**லக்ஸ்மன்**



நெடுந்தீவு நோயாளர்களுக்கான அம்புலன்ஸ் படகுச் சேவை அத்தியாவசியமான ஒன்று என்பதால், கியூ மெடிக்கா நிறுவனம் கடந்த 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அம்புலன்ஸ் படகு ஒன்றை அதற்காக வழங்கியது. கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற போரின்போது நெடுந்தீவில் இருந்து அவசர சிகிச்சைக்காகக் கொண்டுசெல்லவேண்டிய நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் நோயாளர்களும், உறவினர்களும் மட்டுமன்றி வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நெடுந்தீவில் இருந்து ஒரு நோயாளரைக் குறிகாட்டுவான் துறைமுகத்துக்குக்கொண்டு வருவதற்கு 7 ஆயிரம் ரூபா முதல் 8 ஆயிரம் ரூபா வரை செலவு செய்ய வேண்டிய நிலை இருந்தது. வசதி குறைந்த வருமானமற்ற பலர் இதனால் பெரிதும் சங்கடப்பட்டதும் உண்டு.


நெடுந்தீவில் அம்புலன்ஸ் படகு இல்லாத நிலையில் அதன் அவசியத்தை உணர்ந்த கியூ மெடிக்கா நிறுவனம், நெடுந்தீவுக்கென 15 மில்லியன் ரூபா செலவில் புதிய படகு ஒன்றைச் சேவையில் ஈடுபடுத்த முன்வந்து 2006இல் அதனை நடைமுறைப்படுத்தியது. படகு கியூ மெடிக்கா நிறுவனத்தின் பராமரிப்பில், வைத்திய அதிகாரிகள் கோரும் வேளைகளில் தாமதமின்றி நோயாளர்களை எடுத்துச் சென்று வந்துள்ளது. தற்சமயம் வடக்கு மாகாணசபை மற்றும் கடற்படை, தனியார் ஆகியோரின் அனுசரணையுடன் வைத்தியசாலைக்குப் புதிய அம்புலன்ஸ் படகு ஒன்று தருவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தப் படகின் நிலை குறித்து எதுவும் தெரியவில்லை. எனினும் நெடுந்தீவுக் கடலுக்கு அமைவாக இது கட்டப்பட்டுள்ளதால், அதன் சேவையைத் தொடர்ந்தும் தாம் பெறுவதற்கே நெடுந்தீவு மக்கள் விருப்பம் தெரிவிக்கின்றனர்.

கடற்படையினரின் அதிவேகப் படகின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய அம்புலன்ஸ் படகு வேகம் கூடியதாக இருப்பினும், உயர் காற்றுக் காலங்களில் தனது சேவையை வழங்கக்கூடியதாக இருக்குமா? என்பது கேள்விக்குரியதே என மக்கள் கருதுகின்றனர். நெடுந்தீவுக்கான படகுகள் பலத்த கடல் கொந்தளிப்பைச் சமாளிக்கக் கூடியவைகளாக இருக்க வேண்டும். சேவையில் இருந்த கியூ மெடிக்கா அம்புலன்ஸ் படகு, நெடுந்தீவுக் கடலைச் சமாளிக்கக் கூடிய ஒன்று. இந்தப் படகின் நடைமுறைகள் கியூ மெடிக்காவின் முழுக் கட்டுப்பாட்டிலும் இருப்பதால், வைத்திய அதிகாரிகள் நோயாளரை எடுத்துச் செல்ல வேண்டியிருப்பின் அதற்குப் பொறுப்பான கியூ மெடிக்கா உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டே படகைப் பயன்படுத்த வேண்டிய நிலை இருந்துள்ளது. இதனால் சிரமங்கள் ஏற்படுவதாகவும் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார். அவசர நோயாளர்களை அனுப்ப வேண்டிய தருணத்தில் இவ்வாறான நடவடிக்கைகளைக் கையாள வேண்டியிருப்பது தாமதங்களை உண்டு பண்ணும் என்பது நியாயமானதுதான்.

> **கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற போரின்போது நெடுந்தீவில் இருந்து அவசர சிகிச்சைக்காகக் கொண்டு செல்ல வேண்டிய நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.**

புதிய படகு வந்தாலும்கூட இந்தப் படகும் நெடுந்தீவுக்குத் தேவையான ஒன்றே. நோயாளர்கள் மட்டுமன்றி தீவின் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை ஆய்வு செய்யவரும் விசேட அதிகாரிகள் மற்றும் பயணிகள் படகைத் தவறவிட்டவர்கள் ஆகியோரை உரிய இடங்களுக்குக் கொண்டு செல்லவும் இந்தப் படகின் சேவை இன்றியமையாததாகிறது. புதிய படகு சேவையில் இணைந்து கொண்டாலும் ஏனைய தீவுகளுக்கும் செல்ல வேண்டியிருப்பதால் கியூ மெடிக்கா நிறுவனத்தின் படகும் தொடர்ந்தும் இந்தப் பணியில் இருப்பது நெடுந்தீவைப் பொறுத்தவரை முக்கியமானதே.

குறிப்பிட்ட படகில் பணியாற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் இந்த நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன. கச்சதீவு உற்சவகாலத்தில் முதலுதவிச் சேவைக்கும் இது பயன்படுத்தப்படுகின்றது. உற்சவ காலத்தில் நெடுந்தீவில் இருந்து அவசர நோயாளர்களைக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். இதனால் இந்த இரண்டு படகுகளும் நெடுந்தீவுக்கான சேவையில் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டியது தவிர்க்க முடியாது என்பதால் மாகாண சுகாதாரத்திணைக்களம் புதிய அம்புலன்ஸ் படகுடன், இது வரை நோயாளர் சேவையை வழங்கி வந்த அம்புலன்ஸ் படகையும் சேவையில் தொடரத்தக்கதாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கடலுக்கு உகந்த நல்ல பராமரிப்பில் உள்ள கியூமெடிக்கா அம்புலன்ஸ் படகும் வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படாமல் நெடுந்தீவுச் சேவையிலேயே தொடர்ந்தும் ஈடுபடத்தக்கதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது நெடுந்தீவு மக்களின் விருப்பமாகும்.



# சர்ச்சைக்குரிய ஜெனிவாத் தீர்மானம்

நிரான் அங்கிட்டல்

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தமிழர் மத்தியில் சர்ச்சைக்குரியதொன்றாகவே உள்ளது. இந்தத் தீர்மானம் குறித்துப் பலரும் பலவிதமாகப் பேசி வருகின்றனர். ஆனால் பேசுவோரில் பலர், ஐ.நா. அமைப்புக்கள் எவ்வாறு இயங்குகின்றன என்ற விளக்கமற்றவர்களாக, ஜெனிவாத் தீர்மானங்களில் பயன்படுத்தப்படும் நுணுக்கமான வார்த்தைப் பிரயோகங்களை புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருப்பது கவலைக்குரிய விடயம். இருப்பினும், எமது அரசியல் தலைமை இந்த விடயத்தை நிதானத்துடன் கையாண்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அவர்களது செய்திமக்களை இன்னமும் சென்றடையவில்லை. இந்தத் தீர்மானம் முற்றிலும் உள்ளகப் பொறிமுறையை முன்மொழிந்தது எனும் பொய்ச் செய்தி தோற்கடிக்கப்பட வேண்டும். இந்தப் பிழையான செய்தி ஜெனிவாவில் கொடுத்த வாக்குறுதிகளை புரட்டிப்போட நினைக்கும் இலங்கை அரசில் அங்கம் வகிப்போருக்கும், நீதியில் இருந்து தப்பித்துக் கொள்ளத் துடிப்போருக்கும் மாத்திரமே உதவி செய்யும். எமது மக்களை நிரந்தரமான அரசியல் நிர்க்கதிக்குள் தள்ளி, மக்களை அநாதரவாக்கி, கூட்டு மனத் தளர்ச்சியை ஏற்படுத்தி, மக்களைத் தோல்வியடைந்த அரசியல் சித்தாந்தங்களின் பக்கம் திரும்ப வைக்கும் சக்திகளுக்கு மாத்திரமே இந்தச் செய்தி உதவி செய்யக் கூடியது. இதனால் தான் நாம் அனைவரும், பிழையான செய்திகளைத் தவிர்த்து, பொறுப்புடன் மக்களிடம் உண்மையை எடுத்துச் செல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

உண்மை யாதெனில், ஜெனிவாத் தீர்மானத்தில், இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரது அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென விதந்துரைக்கின்றது. ஐ.நா. மனித உரிமை ஆணையாளரது அறிக்கை, ஒரு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறது. இதனுடன் பொதுநலவாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிவான்கள், வழக்குத்தொடுநர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்கள் நீதிப் பொறிமுறையில் பங்குபற்றுவதன் முக்கியத்துவத்தையும் கூறுகின்றது. சர்வதேசச் சட்டத்தின் கீழ் கலப்பு நீதிமன்றம் என்பதற்கு வரைவிலக்கணம் இல்லை. ஆனால், பொதுவாகக் கொள்ளப்படும் அர்த்தத்துடன் ஒப்பு நோக்கினால் ஜெனிவாத் தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டிருப்பது கலப்பு நீதிமன்றம் தான் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இது இலங்கை சர்வதேச குற்றங்களை அதாவது, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனவழிப்பு என்ற இலங்கைச் சட்டத்துக்குள் சேர்த்துக் கொண்டு, இந்தக் குற்றங்களில் உயர் பொறுப்பை வகித்தவர்களைத் தண்டிக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது, கலப்பு நீதிமன்றம் தான் என்பதை மேலும் தெளிவாக்குகின்றது. இன்று உலகில் வெளிநாட்டு நீதிவான்கள், சட்டத்தரணிகள், வழக்குத்தொடுநர்கள், விசாரணையாளர்கள் உள்நாட்டு சகாக்களுடன் இணைந்து தீவிரமான குற்றங்கள் மீது சர்வதேச சட்டங்களைப் பயன்படுத்தி வழக்குத் தொடரும் சில நீதிமன்றங்கள் இயங்குகின்றன. இவை கம்போடியா, சியாரலியோன், பொஸ்னியா, செனகல் போன்ற நாடுகளிலும் இயங்கி வருவதுடன் மத்திய ஆபிரிக்கக் குடியரசு மற்றும் தென் சூடான் போன்ற நாடுகளில் உருவாக்கப்படவுள்ளன. எங்கிருந்தாலும் இவை கலப்பு நீதிமன்றங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. இலங்கை அரசு, கலப்பு நீதிமன்றம் என்ற பதத்தைப் பயன்படுத்துவதை விரும்பாமலிருக்கலாம். ஆனால் முக்கியமானது உள்ளடக்கமேயன்றி அதை அழைக்கும் சொற்பதம் அல்ல. இந்தத் தீர்மானத்தில் நாம் கருத்திலெடுக்க வேண்டிய மேலும் பல விடயங்கள் உள்ளன. தீர்மானத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் களையப்பட வேண்டுமெனவும், அதற்குப் பதிலாக சர்வதேச தராதரங்களுடன் ஒத்ததோர் சட்டம் பிரதியிடப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. மேலும், காணாமற்போனோரைக் கண்டுபிடிக்கும் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமெனவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை இராணுவத்தில் இருந்து அகற்றவேண்டுமெனவும், சரியான உரிமையாளர்களிடம் காணிகள் மீளக் கையளிக்கப்பட வேண்டுமெனவும், மக்களது வாழ்க்கை சாதாரண நிலைமைகளுக்குத் திரும்ப வேண்டுமெனவும், அதிகாரப்பகிர்வை உறுதி செய்யும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலம் அரசியற் தீர்வு எட்டப்பட வேண்டுமெனவும், பாலியல் வன்முறைகள் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் இந்தத் தீர்மானம் குறிப்பிட்டுள்ளது. உண்மையில், இறுதித் தீர்மான வரைபில் அடங்கியிருந்த பல பரிந்துரைகளை இலங்கை அரசு நீக்குவதற்கு முயன்றது. குறிப்பாக சர்வதேச நீதிவான்கள், வழக்குத்தொடுநர்கள் மற்றும் விசாரணையாளர்கள் நீதிப் பொறிமுறையில் பங்குபற்ற வேண்டும் என்ற சரத்தை நீக்குவதற்கு இலங்கை அரசு முயன்றது. ஆனால் இறுதியில் அந்தப் பரிந்துரையின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டி வந்தது. தீர்மானத்தின் இறுதி வடிவத்துக்குத் தமிழ்த் தலைமைகளின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது என்பது தீர்மானம் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்குபெற்ற அனைவருக்கும் தெரிந்த விடயம். தீர்மானத்தில் பாவிக்கப்பட்டிருக்கும் பல பதங்கள், சொற் பிரயோகங்கள் குறிப்பாக, சர்வதேச வகிபாகம் மற்றும் சர்வதேச சட்டம் தொடர்பான சரத்துக்கள் நேரடியாகவே தமிழ்த் தலைமைகளின் பரிந்துரைகளை உள்ளடக்கியதாகவே இருந்தது. இந்தத் தீர்மானத்தின் வரைபில் தமிழ் அரசியல் தலைமைகள் எடுத்துக் கொண்ட வகிபாகம், தமிழ் அரசியல் தலைமைகள் தலையிட்டுச் செய்த உள்ளீடுகள் மற்றும் இந்தத் தீர்மானத்தை தமிழ் அரசியல் தலைமைகள் வரவேற்றமை என்பவற்றைக் கொண்டு இன்று தமிழரது அரசியல் தலைமை, இந்தத் தீர்மானம் தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான ஒப்பந்தமாக வியாக்கியானம் செய்ய, விவாதிக்க முடிந்துள்ளது. ஆகவே இந்தத் தீர்மானம் வெறுமனே இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் இடையிலானதோர் ஒப்பந்தம் அல்ல. அதை விட ஆழமானது. இது சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலானதோர் ஒப்பந்தம். அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலானதோர் ஒப்பந்தம். இந்தச் சிந்தனையின் அடிப்படையில், ஜெனிவாத் தீர்மானம், பண்டா–செல்வா ஒப்பந்தம் மற்றும் டட்லி–செல்வா ஒப்பந்தம் போன்றவற்றுக்கு நிகரானதொன்றே. இன்று தமிழ்த் தலைமை அரசையும், சர்வதேச சமூகத்தையும் பார்த்து ஜெனிவாத் தீர்மானத்தை முழுமையாகச் செயற்படுத்தத் தவறுவது, கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள் கொண்டு வந்த அதே விளைவுகளைக் தருவிக்கலாம் என்றும், சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் தமிழர் தரப்புக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் துரோகங்களுக்கு நிகராகும் என்றும் எச்சரிக்கத் தக்க நிலையில் உள்ளது. இது ஜெனிவாத் தீர்மானத்தின் முழுமையான நடைமுறையை உறுதிப்படுத்தப் பயன்படுத்தப்பட வேண்டிய வலிமையான வாதமாகும். ஜெனிவாத் தீர்மானத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தல் இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை. எமக்கு முன்னிருக்கும் பாதை கடினமானது. பல தடைகள் எமக்குள்ளன. முதலாவதாக, இந்த அரசில் அங்கம் வகிக்கும் அனைவரும் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் இருக்கின்றனரா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த அரசில் முற்போக்கு சிந்தனைவாதிகள், நடுநிலைவாதிகள், சிங்கள பௌத்த பேரினவாதிகள் என அனைவரும் அங்கம் வகிப்பதை நாம் அறிவோம். இதனால் தான் அரசு இரட்டை நாவுடன், இரு விதமாக ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் பேசி வருவதாகத் தோன்றுகிறது. ஆகவே, ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் பணியில் அரசு மீது, உள்நாட்டிலிருந்தும், சர்வதேசத்திடமிருந்தும் போதிய அழுத்தத்தை திரட்டிப் பிரயோகிப்பது அவசியம். நாம் இந்த விடயத்தில் நம்பிக்கையிழக்கலாகாது. பலர் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் நடந்த பேச்சில் அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பது சாத்தியமற்றது எனக் கருத்துத் தெரிவித்த போதும், புத்திக் கூர்மையுடன், சரியான தருணத்தில் சர்வதேச சமூகமும், எமது அரசியல் தலைமையும் பிரயோகித்த அழுத்தம் பெறுபேறுகளைத் தந்ததை நாம் அறிவோம். நாம் தொடர்ந்தும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றி வெளியிலிருந்து அழுத்தத்தை உருவாக்கும் வழி வகைகளைத் தேட வேண்டும். ஐக்கிய நாடுகள், கனடா, மற்றும் ஜெனிவாவில் உதவிய ஐரோப்பிய நாடுகள் என்பவற்றுடன் நெருங்கிப் பணியாற்ற வேண்டும். அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடன் தொடர்ந்து நெருங்கிய உறவுகளைப் பேண வேண்டும். இதற்கு மிகப் பெரும்பான்மைத் தமிழ் மக்களது உறுதியான ஆணையுடன் இயங்கும் நம்பகமான தலைமை அவசியம். இதை எமது மக்கள் துல்லியமாகப் புரிந்து அதற்கேற்பச் செயற்படுவது எமது பலமாக அமையும். அதேசமயம் தமது சுயநலத் தேவைகளுக்கென பொறுப்பற்ற முறையில் பொய்யான எதிர்பார்ப்புக்களை மக்களிடையே உரு வாக்கும் நபர்களையும் நாம் கண்டிக்க வேண் டும். பொய்யான எதிர்பார்ப்புக்களை உருவாக்குவது இறுதியில் விரக்தியையும், நம்பிக்கையிழப்பையுமே கொண்டு வருமேயன்றி ஒரு போதும் நீண்ட, வினைத்திறன் கொண்டதோர் போராட்டத்துக்கு உதவப் போவதில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஓரிரு வழக்குகளைத் தொடுப்பதற்கென இலங்கை அரசாங்கத்திட மிருந்து நாம் பெற்றுக்கொண்ட அரசியல் தீர்வு, கலப்பு நீதிமன்றம். நிலங்களை விடுவித் தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கல் உட்பட எத்தனையோ சர்வதேச அர்ப்பணிப்புக் களை நாம் இழந்திருப்போம். ஆனால் உயர் ஸ்தானிகர் தூரநோக்குடனும், பொறுப்புடனும் செயற்பட்டு கலப்பு நீதிமன்றத்தை முன்மொ ழிந்தார். நீதி, உண்மை, பரிகாரம் என்பவற்றை முன்னிறுத்திய எமது போராட்டத்தில் பெரிய பல சவால்கள் இருப்பது மாத்திரம் தெளிவு. எதிர் வரும் மாதங்களிலும், வருடங்களிலும் எமக்கு முன்னால் இருக்கும், குறிப்பாக ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முக்கியமான சில பணிகளை குறிப்பிடுவது பொருத்தமானது. தெளிவான சிந்தனை, திட்ட மிட்ட செயற்பாடு மற்றும் கடின உழைப்பு என் பவற்றுக்கு மாற்றீடுகள் கிடையாது. இந்தப் பொறுப்பு எம் அனைவரையும் சாரும். முத லாவதாக நாம் எமது மக்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை உள் ளது. நீதிக்கான நீண்டதோர் போராட்டத்தை நாம் மேற்கொள்ள வேண்டுமாக இருந்தால் மக்களிடம் சரியான தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும். அப்போது தான் அவர்கள் எதிர் கொள்ள வேண்டிய சவால்களை எவ்வாறு சமா ளிப்பது என்று தாமாகவே சிந்தித்து முடி வெடுப்பர். பொறுப்புக் கூறல் செயன்முறை தொடர்பிலான தகவல்கள் சற்று சிக்கலானவை யாக இருப்பினும் அவை மக்கள் விளங்கிக்கொள் ளக் கூடிய விதத்தில் மக்களிடம் எடுத்துச் செல் லப்பட வேண்டும். அத்தோடு எடுத்துச் செல்லப் படும் தகவல்கள், செய்திகள் அவர்கள் தனித்து நின்று சிந்திக்கப் போதுமானவையாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் ஊடகங்களில் கடமையாற்றுபவர்களுக்கு, குறிப்பாக பத்திரிகைக்காரர்களுக்கு பெரிய பங்குண்டு. பத்திரிகையாளர்கள் சரியான தகவல்களையும், ஆய்வுகளையும் மக்களுக்கு வழங்கும் வண்ணம் அவர்களுக்கு பொறுப்புக் கூறல், சர்வதேச சட்டம் போன்ற விடயங்களில் தக்க பயிற்சி வழங்கப்பட வேண்டும். அப்போது தான் பொய்களும், போலிப் பரப்புரைகளும் தடுக்கப்படும், தவிர்க்கப்படும். பொறுப்புக் கூறல் முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமெனில் கற்றறிந்த, விழிப்பான சமூகம் அத்தியாவசியமானது. இந்தச் செயன்முறை நீண்ட காலச் செயன்முறையாக உள்ளது. மேலும், நிச்சயமாக இது ஓர் இலகுவான, சிக்கலற்ற செயன்முறையாக இருக்கப் போவதில்லை. எமது மக்கள் ஏமாற்றங்களைச் சந்திக்க, எதிர்த்துப் போராடத் தயாராக வேண்டும். உண்மை, நீதி மற்றும் தக்க பரிகாரம் என்பவற்றை அடைய இன்றிலிருந்தே சரியான அரசியல் வியூகங்களை நாம் வகுக்க வேண்டும். எமது மக்களுக்குள்ளே தேவையான தொழில்நுட்ப அறிவு, ஆற்றல் என்பவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டுக்குள் உருவாகவிருக்கும் பொறிமுறைகளில் முக்கியமான வகிபாகங்களை ஆற்றவென அர்ப்பணிப்புள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகளின் புதிய தலைமுறையொன்று தயாராக வேண்டும். குற்றவியல் வழக்குகள், காணாமற்போனோர் அலுவலகம், பரிகாரங்களுக்கான அலுவலகம் மற்றும் உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு என்பவற்றில் பங்காற்றவென பயிற்சி பெற்ற நபர்கள் எமது சமூகத்தில் உருவாக்கப்பட வேண்டும். காத்திருந்து அவதானித்துவிட்டு பின்னர் முறையிடும் பழைய உத்தியைக் கைவிட்டு இந்தப் பொறிமுறைகளை உண்மைக்கும், நீதிக்குமாகத் திசை திருப்பத்தக்க உத்திகளை நாம் கையாள வேண்டும். கடந்த ஆறு ஆண்டுகளில் பூட்டிய கதவுகளின் பின்னால் நாம் எம்மவர்களுக்கு இந்தத் திறமைகளை, ஆற்றல்களைக் கொடுத்திருக்கலாம், பயிற்றுவித்திருக்கலாம். நாம் இந்தப் பணியை ஆறாண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்திருந்தால் இன்று இந்தப் பொறுப்புக் கூறல் செயன் முறைகளின் திசையைத் தீர்மானிக்கவல்ல செயற்பாட்டாளர்கள் எம்மிடையே இருந்திருப்பர். இன்று இந்தப் பொறிமுறைகளில் அனைத்து இனத்தவர்களும் பங்கெடுக்க வேண்டும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எமக்கு இந்தச் சந்தர்ப்பம் எட்டியுள்ளபோதும் நாம் தயாராகவில்லை. ஆனால் இன்னமும் காலம் முற்றாகத் தாழ்த்தப்படவில்லை. இந்தப் பொறிமுறைகள் செயற்படத் தொடங்க இன்னமும் ஒருவருடமாவது ஆகும். இந்தக் காலப் பகுதியிலாவது நாம் பயிற்றப்பட்ட, அர்ப்பணிப்புள்ள செயற்பாட்டாளர்களை உருவாக்க வேண்டும். இந்த அவசர தேவைகளைத் தாண்டி, உண்மை, நீதி, பரிகாரத்துக்கான போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும், அதை மேம்படுத்தும் ஆய்வறிக்கைகள், கொள்கை ஆய்வுகள் என்பவற்றைச் செய்வதும் அவசியமானதே. ஜெனிவாத் தீர்மானத்தின் கீழ் குறைந்தது 10 சட்ட சீராக்கங்களை நாடாளுமன்றம் நிறைவேற்ற வேண்டும். இவற்றில் சர்வதேச குற்றங்களை விசாரிக்கவென சர்வதேச நீதிபதிகளைக் கொண்டியங்கும் சிறப்பு நீதிமன்றத்தின் உருவாக்கம் சர்வதேச வழக்குத் தொடுநர்கள், விசாரணையாளர்களைக் கொண்டியங்கும் சிறப்பு வழக்குத் தொடுநர் அலுவலகத்தின் உருவாக்கம், சர்வதேச குற்றங்களை இலங்கைச் சட்டத்தில் இணைத்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி அதற்குப் பதிலாக சர்வதேச நடைமுறைகளுக்கேற்ற சட்டமொன்றை உருவாக்குதல், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புச் சட்டத்தை மேலும் வலுப்படுத்தல், பொதுப் பாதுகாப்புச் சட்டத்தை மறுசீரமைத்தல் மற்றும் ஏனையவை அடங்கும். இதேபோல் அமைச்சரவையிலோ, ஜனாதிபதியூடாகவோ நிறைவேற்றப்பட வேண்டிய ஏனைய வெவ்வேறான பத்துக் கொள்கை வகுப்பு நடவடிக்கைகள் உள்ளன. இவை யாவும் சிக்கலான விடயங்கள். துறைசார் அறிவும், நுட்பமான கொள்கைப் பகுப்பாய்வும் அதற்கு அவசியம். எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த சட்ட வரைவுகளில் சாதகமான பங்களிப்பை ஆற்றத் தயாராக இருக்க வேண்டும். இவை குறித்த விவாதங்களை நாம் பொதுவரங்கில் பேசி எமக்கு வேண்டிய திசையில் திருப்பவும் தயாராக வேண்டும். தமது துறைகளுக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றிய கற்றறிந்த, திறமை வாய்ந்த அரசியல்வாதிகள் எமது வரலாற்றில் உள்ளனர். ஆனால் இன்றோ தெரிவு செய்யப்பட்ட எமது சபைகளது செயற்திறன் கவலையளிக்கின்றது. எமது மக்களது உரிமைகளைப் பற்றிய போராட்டத்தில் இது ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. நாம் முன்னேறுவது எமது தார்மீக பொறுப்பு. இறுதியாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடி நிவாரணம், உதவிகளை வழங்கவும் எப்போது பொறுப்புக் கூறல் தொடர்பாக உருவாக்கப்படும் பொறிமுறைகளை அவர்கள் அணுக வேண்டும் போன்ற ஆலோசனைகளையும் வழங்க நாம் தயாராக வேண்டும். மேலும் வழக்குகள் சரியான விதத்தில் நடக்க இப்போதிருந்தே நாம் ஆதாரம் திரட்டும் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும். மேலும், பரிகாரங்கள் செய்யப்படும் போது எமது மக்கள் அதிலிருந்து உச்சப் பயனை அடையத்தக்கதாக நாம் அவர்களை வழிநடத்த வேண்டும். இது போலவே, பாதிக்கப்பட்ட மக்களதும், சாட்சிகளதும் பாதுகாப்பை உறுதி செய்து, பராமரித்து, அவர்களுக்குத் தேவையான உளவியல் மற்றும் மருத்துவ உதவிகள் கிடைக்கச் செய்ய வேண்டும். செய்ய வேண்டிய பணிகள் அனேகம் உள்ளன. தாமதிப்பதற்குக் காலமில்லை. உடனடியாக நாம் இந்தப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும். கடின உழைப்பும், வினைத்திறனான செயற்பாடும் எவ்வளவு முக்கியமோ, அதேயளவு நிதானமான, பொறுப்பான அரசியல் வியூகங்களும், திட்டங்களும் அவசியம். எமது நீதிக்கானதும், உரிமைகளுக்கானதுமான போராட்டத்தை இன்று முழு உலகும் அங்கீகரித்துள்ளது. ஆனால் எமது மக்களுக்கு இவற்றைத் தாண்டிப் பல போராட்டங்கள் இருப்பதையும் நாம் மறக்கலாகாது. வடக்கிலும் கிழக்கிலும் பொருளாதார நிலைகள் தூக்கி நிமிர்த்தப்பட வேண்டும். எமது போராட்டத்தின் விளைவுகளை மக்கள் அனுபவிக்கும் வகையில் எமது அரசியலை நாம் நகர்த்த வேண்டும். எமது மக்களுக்கு நிம்மதியும், சமாதானமும் நிச்சயமாகத் தேவை. ஆனால், எமது அடிப்படை உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்க முடியாது. காலத்தின் தேவை கொள்கை உறுதியுடன் கூடிய யதார்த்தவாதம்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | சாவகச்சேரி | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | யாழ்ப்பாணம் | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 800 | 600 | 600 | 700 | 600 | 400 |
| நண்டு | 400 | 400 | 200 | 400 | 150 | 450 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 650 | - |
| பாரை | - | 500 | 350 | 500 | 400 | 350 |
| சுறா | - | 500 | 350 | 600 | 450 | 400 |
| சீலா | 400 | 400 | 300 | 400 | 250 | 350 |
| விளை | 500 | 400 | 260 | 450 | 600 | 350 |
| முரல் | 350 | 350 | 250 | 300 | 300 | - |
| கும்பிளா | - | 350 | 200 | 300 | 250 | - |
| கிழாக்கன் | - | 800 | - | 400 | 350 | - |
| ஓரா | - | 300 | 220 | 400 | 300 | 300 |
| திரளி | 100 | 200 | 150 | 300 | 200 | - |
| நகரை | - | 200 | 100 | 300 | 200 | 300 |
| சூடை | 200 | 100 | 50 | 100 | 150 | 300 |
| ஒட்டி | - | 150 | 180 | 300 | 250 | 250 |
| திருக்கை | 250 | 300 | 150 | 250 | 150 | - |
| பாலை | 400 | 200 | - | 400 | 400 | - |
| வாளை | 100 | 150 | 150 | 300 | 100 | - |
| கொய் | 50 | 100 | 40 | 120 | 100 | - |
| மதனம் | 200 | 200 | 130 | 250 | 150 | 200 |

## நாளை

கார்த்திகை-8 செவ்வாய்க்கிழமை (24.11.2015)

திதி:
திரயோதசி: மு.ப. 8.47 வரை
நட்சத்திரம் :
அஷ்வினி: மு.ப. 9.07 வரை

சுபநேரம்:
10.41 - 12.11 வரை
இராகு காலம்:
03.11-04.41 வரை


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### நீங்கள் கடவுளின் குழந்தைகள்

எஜமானனைப் போலச் செயற்படுங்கள். அடிமை உணர்வைக் கைவிட்டுச் சுதந்திரமாகப் பணிபுரியுங்கள். மகத்தான செயல்களைச் செய்வதற்காகவே ஆண்டவன் எம்மைப் படைத்திருக்கிறான். உயர்வான செயல்களைச் செய்தால் வாழ்க்கை பயனுடையதாகும். நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் உங்களுக்குள்ளே இருக்கின்றன.

# பலாப்பழத்தின் மருத்துவக் குணங்கள்



முக்கனிகளுள் ஒன்றாகக் கருதப்படும் பலாப்பழத்தின் மேற்றோல், கரடு முரடாக இருந்தாலும், அதன் உட்பகுதியில் இருக்கும் சுளைகள் சுவையாகவும், கண்ணைக் கவரும் வண்ணத்திலும் இருக்கும். பலாப்பழம் சுவையில் மட்டுமல்ல... அதில் அடங்கியுள்ள மருத்துவக் குணத்திலும் முதலிடம் தான். இந்தப் பழத்தை சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகளை பற்றி இப்போது பார்ப்போம்.......

பலாப்பழத்தின் இனிப்புச் சுவைக்குக் காரணம், இதில் உள்ள 'ப்ருக்டோஸ்', 'சுக்ரோஸ்' என்பவை தான். பலாப்பழத்தைச் சாப்பிட்டவுடன் உடலுக்கு உடனடி ஆற்றல் கிடைக்கிறது. சோர்வாக இருக்கும்போது, இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் உடற் சோர்வு நீங்கி, புத்துணர்ச்சி கிடைக்கும்.

மனித இயக்கத்துக்கு உதவும் தைரொய்ட் ஹார்மோன் உடலில் உற்பத்தியாகவும், அதை உட்கிரகிக்கவும் தாமிரச் சத்து அவசியம். பலாப்பழத்திலுள்ள தாமிரச் சத்து இதற்கு உதவிசெய்கிறது.

பலாப்பழத்தில் விற்றமின் 'சி' அதிகமாக உள்ளதால், எமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. வைரஸ் மற்றும் பாக்ரீரியாக்களால் நோய்த்தொற்று உண்டாகாமல் தடுக்கிறது. குருதியில் வெள்ளை அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது.

பலாச்சுளைகளில் பொட்டாசியம் அதிகம் இருப்பதால், குருதி அழுத்தத்தைக் குறைத்து இதய நோய் வராமல் தடுக்கிறது. பலாப்பழத்திலுள்ள விற்றமின் 'ஏ' சத்து, கண் பார்வைக் குறைபாடு வராமல் தடுக்கிறது. மாலைக் கண் நோயைப்படிப்படியாகக் குணமாக்கும். தொடர்ச்சியாகப் பலாப்பழம் சாப்பிடுவோருக்கு கண் நோய்கள் வராது என்கிறது ஒரு ஆய்வு.

நார்ச்சத்து அதிகம் உள்ள பழம் என்றால், அது பலாப்பழமே. மேலும் இது அல்சர், செரிமானக் கோளாறைச் சரி செய்யும். இதில் கலோரி குறைவாக இருப்பதால், இதய நோய் இருப்பவர்களுக்கு சிறந்த மருத்துவ குணம் வாய்ந்த பழம்.

நெய் அல்லது தேன் கலந்த பலாப்பலத்தை சிறுவர்கள் சாப்பிட்டால் இதயம், மூளை வளர்ச்சியடையும், நரம்புகளும் வலுப்படும். உடலும் ஊட்டம் பெறும். பலாப்பழத்தில் புற்றுநோய் எதிர்ப்பு சக்தி இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இது தவிர, உடலை, இளமை தோற்றத்தோடும் வைத்துக் கொள்ளும்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 80 | 100 | – | 100 | – | 40 |
| கத்தரி | 160 | 140 | 160–200 | 180 | 180 | 180 | 110 |
| கரட் | 120 | 120 | 120–200 | 140 | 260 | 370 | 230 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 50 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 250 | 120 | 200–250 | 180 | 240 | 220 | 200 |
| பாகல் | 300 | 220 | 300 | 200 | 240 | 220 | 300 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 120 | 100 | 70 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 150 | 140 | 140 | 150 | 140 | 120 | 130 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 130 | 130 | 200 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 | 40 | 80 | 50 |
| தக்காளி | 160 | 140 | 160 | 120 | 180 | 240 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 50 | 50 | 80 | 50 |
| கீரை | 40 | 40 | 50 | 30 | 40 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 30 | 40 | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 800 | 800 | 600 | 400 | 600 |
| புடோல் | 140 | 120 | 120 | 120 | 120 | 80 | 120 |
| கோவா | 150 | 140 | 160 | 160 | 160 | 200 | 140 |
| வெண்டி | 160 | 100 | 260 | 120 | 120 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 140 | 320 | 180 | 240 | 220 | 230 |
| லீக்ஸ் | 200 | 150 | 200 | 140 | 160 | 160 | 130 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–160 | 120 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 340 | 240 | 400 | 150 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 200 | 240 | 400 | 400 | 600 | 280 | 200 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 250 | 400 | – | 180 | 260 | – | 300 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 4 | 2 | | 1 | | |
| | | 2 | | | 3 | 8 | 6 | |
| 7 | 9 | | | | | | | |
| | | | | | | 3 | | |
| 4 | | | 1 | | 2 | | | 7 |
| | | 9 | | | | | | |
| | | | | | | | 8 | 1 |
| | 8 | 7 | 2 | | | 6 | | |
| | | 1 | 8 | 4 | 6 | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 4 | 5 | 7 | 3 | 1 | 8 | 9 |
| 8 | 1 | 7 | 2 | 4 | 9 | 3 | 6 | 5 |
| 9 | 3 | 5 | 1 | 6 | 8 | 2 | 7 | 4 |
| 1 | 8 | 6 | 4 | 3 | 5 | 9 | 2 | 7 |
| 4 | 7 | 2 | 8 | 9 | 1 | 6 | 5 | 3 |
| 3 | 5 | 9 | 6 | 2 | 7 | 8 | 4 | 1 |
| 5 | 9 | 3 | 7 | 8 | 2 | 4 | 1 | 6 |
| 7 | 4 | 8 | 3 | 1 | 6 | 5 | 9 | 2 |
| 6 | 2 | 1 | 9 | 5 | 4 | 7 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக [illegible]



# கார்த்திகை மாத பலன்கள்

**17.11.2015 முதல்**
**16.12.2015 வரை**

**மிதுனம்**

மற்றவர்களை வழி நடத்திச் செல்வதில் வல்லவர்களான நீங்கள், போராட்டங்களைச் சளைக்காமல் எதிர்கொள்பவர்கள், பாவ புண்ணியம் அடிக்கடி பார்ப்பீர்கள். உங்களின் தைரிய ஸ்தானாதிபதியான சூரியன் இந்த மாதம் முழுக்க உங்கள் ராசிக்கு 6 ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்ததால் தன்னம்பிக்கை துளிர்விடும். உங்களின் பூர்வ புண்யாதிபதி சுக்கிரனும் சாதகமான வீடுகளில் செல்வதால் பணப்புழக்கம் அதிகமாகும். செவ்வாய் 4 இல் நிற்பதால் தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. ராகுவும் 4 ஆம் இடத்திலும், கேது 10 இல் தொடர்வதாலும் வேலைச்சுமையால் அவ்வப்போது சோர்வடைவீர்கள். உங்கள் ராசிநாதன் புதன் பலவீனமாக காணப்படுவதால் நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வந்துபோகும். நண்பர்களுடன் மோதல்கள் வரும். புதன் 6 இல் நிற்கும் சனியை விட்டு விலகுவதால் கோபம் குறையும். அழகு, இளமை கூடும். அநாவசியச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள். 6 ஆம் வீட்டிலேயே சனிபகவான் நீடிப்பதால் வழக்கில் வெற்றி பெறுவீர்கள். தன்னார்வத் தொண்டு நிறு வனங்களில் உங்களை இணைத்துக் கொள்வீர்கள். சிலர் வெளிநாடு சென்று வருவீர்கள். 3 ஆம் இடத்துக் குருவால் எந்தவொரு வேலையையும் முதல் முயற்சி யிலேயே முடிக்க முடியாமல் போகும்.

மாணவர்கள் உங்களுடைய தனித்திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். அறிவியல் பாடத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. கன்னிப்பெண்கள்,உற்சாகமாக இருப்பீர்கள். உயர்கல்வியில் வெற்றி உண்டு. வேலைக்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். அரசியல்வாதிகள், தலைமைக்கு நெருக்கமாவீர்கள். சகாக்கள் மத்தியில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். வியாபாரத்தில் பழைய மீதிகள் கிடைக்கும். அதிரடிச் சலுகைத் திட்டங்கள் மூலமாக வருவாய் கூடும். பங்குதாரர்கள் வழக்கம் போல் முணுமுணுப்பார்கள். முரண்டுபிடித்த வேலையாள்கள் கச்சிதமாக வேலையை முடிப்பார்கள். புடைவை, துரித உணவகம், அழகு சாதனங் களால் இலாபமடைவீர்கள். உத்தியோகத்தில் ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டிவரும். நன்றி மறந்த சக ஊழியர்களை நினைத்துக் கொஞ்சம் ஆதங்கப்படுவீர்கள். சிலர் தங்களின் ஆதாயத்துக்காக உங்களைப்பற்றிய தவறான வதந்திகளைப் பரப்புவார்கள். நீங்கள் வேலை பார்க்கும் நிறுவனத்தை வேறு நிறுவனம் வாங்க வாய்ப்பிருக்கிறது. அதனால் உத்தியோகத்தில் இடையூறுகள் வரும். விவசாயிகள் பழுதாகிக் கிடந்த இயந்திரங்களை மாற்றுவீர்கள். பாதிப்பணம் தந்து முடிக்கப்படாமல் இருந்த நிலத்தை மீதிப்பணம் கொடுத்து உடமை ஆக்குவீர்கள்.

**பரிகாரம்:** வைரவரைத் தரிசித்து வாருங்கள். அன்னதானம் செய்யுங்கள்.

**கடகம்**

அடுத்தவர்களின் தவறுகளை இங்கிதமாக எடுத்துரைப்பதில் வல்லவர்களான நீங்கள், எதிரியாக இருந்தாலும் மன்னிப்பதுடன், மனச்சாட்சிக்கும் பயந்தவர்கள். குருபகவான் 2 ஆம் வீட்டில் வலுவாக அமர்ந் திருப்பதால் எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உங்களின் யோகாதிபதி செவ்வாய் இந்த மாதம் முழுக்கச் சாதகமாக இருப்பதால் மனோபலம் கூடும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். மழலைப் பாக்கியம் கிடைக்கும். குலதெய்வக் கோயிலைப் புதுப்பிப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவியாக இருப்பார்கள். வேலைக்கு விண்ணப்பித்துக் காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். பிள்ளைகளின் வாழ்க்கைத்தரம் வசதி, வாய்ப்புகள் உயரும். என்றாலும் 5 இல் நிற்கும் சனியுடன் இந்த மாதம் முழுக்க பகைக் கோளான சூரியனும் பிரவேசிக்கவிருப்பதால் சிலர் உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளை களைப் பிரிய வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

ராகு 3 ஆம் வீட்டில் வலுவாக இருப்பதால் வெளிவட்டாரத்தில் புதுப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வேற்று மதத்தவர், மாற்று மொழியினரால் பண உதவிகள் கிடைக்கும். அதிக வட்டிக் கடனில் ஒரு பகுதியைச் செலுத்தி வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். சுக்கிரன் இந்த மாதம் முழுக்க சாதகமான வீடுகளில் சென்று கொண்டிருப்பதால் கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். மனைவி வழியில் மதிப்பும், மரியாதையும் கூடும். இரு சக்கர வாகனத்தை மாற்றி சிலர் நான்கு சக்கர வாகனம் வாங்குவீர்கள். புதன் சாதகமாக இருப்பதால் பழைய உறவினர், நண்பர்கள் வீடுதேடி வருவார்கள். மாணவர்கள் படிப்பில் மட்டுமல்லாமல் விளையாட்டு, கலைப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசு, பாராட்டுகள் பெறுவீர்கள். மதிப்பெண் கூடும். வகுப்பாசிரியரின் அன்பைப் பெறுவீர்கள். கன்னிப் பெண் களே! கூடுதல் மொழி கற்றுக்கொள்ள முயற்சி செய்வீர்கள். உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். சிலருக்குத் திருமணம் கூடிவரும். அரசியல்வாதிகளே! அநாவசியமாக எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். அதை நிறைவேற்றப் போராட வேண்டியிருக்கும்.

வியாபாரத்தில் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துகொள்வீர்கள். புது முகவர் வேலையை எடுப்பீர்கள். வேலையாள்களின் குறை, நிறைகளை சுட்டிக்காட்டி அன்பாகத் திருத் துங்கள். பங்குதாரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வியாபார இரகசியங்கள் கசி யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உத்தியோகத்தில் உங்களுடைய தொலை நோக்குச் சிந்தனைக்கு பாராட்டுகள் கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். விவசாயிகளே! எதிர்பார்த்த விளைச்சல் வந்து சேரும். புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். தன்னம்பிக்கையாலும், தளராத உழைப்பாலும் வெற்றி பெறும் மாதமிது.

**பரிகாரம்:** அனுமனைத் தரிசித்து வாருங்கள். கோயில் கும்பாபிசேகத்துக்கு உங்களால் முடிந்தளவு உதவுங்கள்.



# பெண் ஏன் இப்படியானாள்?

இன்று பெண்ணுரிமையைப் பற்றி பேசும் நாம் எந்த நிலையில் இருந்து கொண்டு பேசுகிறோம்? இதைப் பற்றிப் பேச எமக்கு யோக்கியதையோ, உரிமையோ உண்டா? வருடத்துக்கு ஒருமுறை ஏதேதோ தினங்களும், விழாக்களும் வருகின்றன. அதுபோலத்தானே இந்த மகளிர் தினமும். சாதாரண பெண்கள் ஒன்றுகூடி சாதனைப் பெண்களின் போராட்டங்களை ஒப்புவித்துவிட்டு பின்னர் அரசியல் தலைவர்களின் வாழ்த்துக்களுக்கு பல் இளித்துவிட்டு மேடை அலங்காரிகளாக ஒவ்வொரு வருடமும் காட்சியளிக்கும் மேடைஅணிவகுப்புகளைக் கண்டு ஆற்றாமையே மிஞ்சுகிறது. பெண்களுக்காக சர்வதேச அமைப்புகள் ஏற்படுத்தி அனைத்து நாட்டு பெண்ணியவாதிகளையும் ஒன்றிணைத்து பெண்ணுரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நியூயோர்க்கில் உழைக்கும் வர்க்கப் பெண்களின் அமைப்புகள் தோன்றி போராட்டங்களை முன்னெடுத்த அசாத்தியமும், அம்மாநாட்டில் பிரேரிக்கப்பட்ட புரட்சிகர தீர்மானங்களான சட்டத் சீர்திருத்தங்கள் மூலம் சலுகைகள், திருமணமான பெண்களுக்கு சொத்துரிமை, தொழில், கல்வியில் அதிக வாய்ப்பு, வணிகத் துறையில் வாய்ப்பு, அரசியல் பிரதிநிதித்துவம், வேலை வாய்ப்புகள், கருச்சிதைவு உரிமை, குழந்தைப் பராமரிப்பில் ஆணுக்குரிய சலுகை, விவாகரத்து உட்பட மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்கள் நடத்தப்பட்டு பெண்கள் வென்றெடுத்த உரிமைகள் தான் இன்று பல நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமாக்கப்பட்டிருக்கின்றன. சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியில் போராடிய பெண்கள், ‘ஆண்களுக்கு நிகராக பெண்களும் நடத்தப்பட வேண்டும்’ என்றும், ‘வேலைக்கேற்ற ஊதியமும், எட்டு மணிநேர வேலையும், வாக்குரிமை பெண்களுக்கும் வேண்டும்’ என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பிரான்ஸ் மன்னனுக்கு எதிராக போராடி வென்றெடுத்த வெற்றி , ஐரோப்பிய பெண்களுக்கு எம்மாலும் சாதிக்க முடியும் என்ற உத்வேகத்தைக் கொடுத்து அவர்களும், போராடி வென்ற பெண்ணிய உரிமைகளும் இன்றைய எம் தமிழிச்சிகளுக்கு இல்லாமல் போய்விட்டதே ஏன்? இன்றைய காலகட்டத்தில் இப்படிப்பட்ட போராட்டங்களுக்கான சூழல்கள் எதுவும் இல்லை என்று சமாதானம் சொல்லாதீர்கள். ‘இன்று பெண்ணுரிமையைப் பற்றி பேசும் நாம் எந்த நிலையில் இருந்து கொண்டு பேசுகிறோம்? இதைப் பற்றிப் பேச எமக்கு யோக்கியதையோ, உரிமையோ உண்டா? நாம் ஆஸ்திகர்களா? நாஸ்திகர்களா? இது விடயத்தில் நம்முடைய ஆராய்ச்சியோ, முடிவோ நமக்கு ஆதாரமா? அல்லது இது விடயத்தில் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் முடிவே நமக்கு ஆதாரமா? என்பவற்றை முதலில் நாம் யோசித்துப் பார்த்த பிறகே விடயத்தைப் பற்றிப் பேசவேண்டும். ஏனென்றால் பெண்கள் விடயத்தில் இன்று உலகில் உள்ள மதங்கள் எல்லாம் ஏற்கனவே ஒரு முடிவுகட்டி விட்டன. அந்த முடிவுகள் வேத முடிவு, கடவுள் வேதத்தின் மூலமாய்ச் சொன்ன முடிவு என்று சொல்லப்படுகிறது. கிறிஸ்தவர்களுடைய வேதத்திலும், இந்துக்கள் வேதத்திலும் பெண்களுக்குச் சம உரிமை இல்லை.

(தொடரும்)

# புத்திசாலித்தனம் வாழ்க்கையில் முக்கியம்





ஒரு ஊரில் கண்பார்வை இல்லாத ஒருவர் பிச்சை எடுத்துப் பிழைத்து வந்தார். அவர் தினமும் 'கடவுளே என்னை இப்படிப் படைத்து விட்டாயே...உனக்கு கண் இல்லையா? தினமும் நான் கஷ்டப்படு கிறேனே...' என்று புலம்பியபடி கடவுளைத் திட்டிக் கொண்டேயிருந்தார். அவரது திட்டுப் பொறுக்க முடியாமல் கடவுள் ஒருநாள் அவர் முன்தோன்றி, 'நான் கடவுள் வந்தி ருக்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். ஆனால் ஒரு நிபந்தனை. ஒரே ஒரு வரம் மட்டும் தான் கேட்க வேண்டும்.' என்றார். பார்வை யற்றவரும் அதற்கு ஒப்புக் கொண்டு எனது மகன் சிறிது நேரம் யோசித்து விட்டு, 'ராஜவீதியில் தங்கத் தேர் ஓட்டி விளையாட, அவனைப் பெற்ற தாய் வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு ஊட்டு வதை என்னுடைய வீட்டின் ஏழாவது மாடியிலிருந்து நான் பார்த்து மகிழ வேண்டும்.' என்ற வரத்தைக் கேட்டான். இந்த வரத்தில் பார்வை இல்லாதவன், தனக்குப் பார்வை வேண்டும், ராஜயோக வாழ்க்கை வாழ வேண்டும், நூறாண்டு வாழ வேண்டும், ஏழு மாடி வீடு வேண்டும் என்பதயெல்லாம் ஒரே வரத்தில் கேட்டு விட்டான். அவனுடைய புத்தி சாலித்தனமான கோரிக்கையைப் பாராட் டிய கடவுள் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து மறைந்தார். புத்தி சாலித்தனம் வாழ்க்கையில் முன்னேற முக்கியம் என்பது உண்மைதானே?




## தெரிந்து கொள்ளுங்கள்

* கரையான்களால் அரிக்க முடியாத மரம் தேக்கு மரம். ஆபிரிக்காவில் குருதி வியர்வை சிந்தும் நீர்யானை உள்ளது.
* ஆரல் கடல், சாக்கடல், கஸ்பியன் கடல் இவை மூன்றும் கடல் என்ற பெயரைக் கொண்ட ஏரிகள் ஆகும்.
* பாரி, ஆய், எழினி, நள்ளி, மலயன், பேகன், ஓரி ஆகியோர் கடை ஏழு வள்ளல்கள்.
* அக்குரன், அந்திமான், கண்ணன், சந்தன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன் ஆகியோர் இடை ஏழு வள்ளல்கள்.
* ஒக்டோபர் 8ஆம் திகதி விமானப்படை தினம்.
* உலகில்கிடைக்கும்தங்கத்தில்பாதிஅளவைத்தரும்நாடுதென்னாபிரிக்கா (ஒரு ஆண்டுக்கு 700 தொன்).
* முத்துத் தீவு என அழைக்கப்படும் நாடு பஹ்ரெய்ன்.
* அரசே வட்டிக் கடை நடத்தும் நாடு மலேசியா.
* காண்டா மிருகத்தின் கொம்பு மற்ற மிருகங்களின் கொம்புகளிலிருந்து வேறுபடுகிறது. இதன் கொம்பு எலும்பால் ஆனது அல்ல. தோளிலிருந்தே உருவானது.
* நாகபாம்பு, கண்ணாடி விரியன், சுருட்டுப் பாம்பு, கட்டுவிரியன் ஆகியவை மிகவும் கொடிய விஷமுள்ள பாம்புகள்.
* சூரியன் அஸ்தமனத்துக்கு முன் சிவப்பாகத் தோன்றும். ஆனால், அது பச்சையாகத் தோன்றுவது அண்டார்டிக்காவில் மட்டும் தான்.
* பச்சைத் தங்கம் என அழைக்கப்படும் மரம் யூகலிப்டஸ் மரம்.
* நீரை உறிஞ்சிக குடிக்கும் ஒரே பறவை புறா தான்.
* விஷமுள்ள பாம்பு இன்னொரு பாம்பைக் கடித்தால் கடிவாங்கிய பாம்பு இறந்து விடும்.
* பாம்புகளில் 3,000 வகையான பாம்புகள் உலகம் முழுவதும் உள்ளன. இந்தியாவில் மட்டும் 350 வகைகள் உள்ளன.

## நிலை மாற வேண்டும்......

பல்கலையில் பண்பற்ற முறையில்
பகிடி வதை செய்யும் நிலை
மாற வேண்டும்.

சிரேஷ்ட மாணவர்கள் கனிஷ்ட மாணவர்களை
அடக்கியாள வேண்டும் என்ற நிலை
மாற வேண்டும்.

கல்லாசனம் தான் எங்கள் சிம்மாசனம்
என அகங்காரம் கொள்ளும் நிலை
மாற வேண்டும்.

நமக்குள்ளே நாம் புரிந்துணர்வற்றவர்களாய்
தினமும் குழுச்சண்டைகள் செய்யும் நிலை
மாற வேண்டும்.

அடித்தவனுக்குத் திருப்பி அடித்தால்தான்
மரியாதை என எண்ணும் மனநிலை
மாற வேண்டும்.

முதலாம், இரண்டாம் வருடத்தில் பூனையைப்போலப்
பதுங்கி, மூன்றாம், நான்காம் வருடத்தில்
புலியைப்போலச் சீறிப்பாயும் நிலை மாற வேண்டும்.

கற்றதோர் சமூகமான நாம் கல்லாலும்,
பொல்லாலும் அடிபடும் நிலை மாற வேண்டும்.

அற்ப சொற்ப பதவிகளுக்காய்
நமக்குள் நாம் முரண்படும் நிலை மாற வேண்டும்.

உயர்கல்வி கற்கும் நாம் பெற்றோரின்
உன்னத உழைப்பை ஊதாரித்தனமாகச்
செலவு செய்யும் நிலை மாற வேண்டும்.

கலைப்பீட மாணவர்கள் தான் காவாலிகள்
என அனைவரும் சொல்லும்நிலை
மாற வேண்டும்.

கல்விச் சமூகம் நாம் ஒற்றுமையாக
சமூகத்தின் முன்மாதிரிகளாய் நடந்து
கொள்ளும் நிலை வரவேண்டும்.

**- வ.றொபின்சன்,** யாழ்.பல்கலைக்கழகம் கலைப்பீடம்(3ம் வருடம்)



## வாழ வழி விடுங்கள்

சிறுவர் தினமென்று விழா வெடுத்து
சிறுவர் எமக்கென ஒரு நாள் ஒதுக்கிவிட்டு
சித்திரவதைகள் தினமும் செய்து கொண்டு
சீண்டிப் பார்ப்பதோ? எம் வாழ்வு!

சிறுவர் எம்மை எந்நாளும்
சிறுவர்களாய் வாழ வழி விடுங்கள்! - இரத்தம்
சிந்திச் சிந்தி வெந்திடாமல்
சிகரம் தொட வழி காட்டுங்கள்!

சிறுவர் நாமே நாளைய தலைவர்கள்
சிந்தித்துச் செயற்படு மனிதாபிமானமே!
சீக்கிரமே முளைத்தெழுவோம் நாமே - வெஞ்
சினமில்லாத மனிதர்களாய்!

– அரியாலையூர், **மிஷாந்தி செல்வராஜா**

# உயர்நீதிமன்ற நீதியரசருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுகள்

கொழும்பு, நவ.23

உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் அப்ரூவுக்கு எதிராக, இரண்டு குற்றச்சாட்டுகளை முன்வைத்து சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் தனது வீட்டி[illegible]ள்ள பணிப்பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குறித்த பெண் இது குறித்து கல்கிசை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதுதவிர, ஏற்கனவே தனது வீட்டில் பணி புரிந்த ஒரு பெண்ணின் மீது தாக்குதல் மேற்கொண்டதற்காக மற்றொரு குற்றச்சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# இந்தியாவுக்கு நன்றி தெரிவித்தார் ஜனாதிபதி



கொழும்பு, நவ.23

இந்தியாவின் உதவிகளுக்கு இலங்கை அரசு நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முன்னெடுத்து வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா நிதி உதவி வழங்கி வருகின்றமை வரவேற்கப்பட வேண்டியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று மாத்தளையில் நடைபெற்ற [illegible]ஹாத்மா காந்தி நிலையத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்ற போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா ஆகியோர் இந்த நிலையத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்தியா, இலங்கையின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக, ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் மிக வலுவான உறவுகள் காணப்படுவதாகக் கூறியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கலாசார, ஆன்மிக, பொருளாதார, சமூக, மத ரீதியான பல்வேறு வழிகளில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தொடர்பு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (வ)

# மைத்திரி, ரணில், சம்பந்தனை இன்று சந்திக்கிறார் சமந்தா பவர்

கொழும்பு, நவ.23

மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக, இலங்கை வந்துள்ள ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் இன்று சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

நீதி, பொறுப்புக்கூறல் பாதையில் இலங்கையின் தலைவர்கள் பயணிக்கவேண்டியது முக்கியம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ள சமந்தா பவர், இந்த விடயத்தை ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடமும் சுட்டிக்காட்டுவார் என்றும், உள்ளகப் பொறிமுறை குறித்த அரசின் தற்போதைய நிலைப்பாடு எவ்வாறுள்ளது எனக் கேட்டறிவதுடன், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் விவாதிப்பார் என இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சமந்தா பவரிடம், முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன் உள்ளிட்ட தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளையும் அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இன்று காலை சந்திக்கும் சமந்தா பவர், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டமைப்பின் நிலைப்பாட்டைக் கேட்டறியவுள்ளார்.

இதேவேளை, ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படாமை மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து சமந்தா பவரின் கவனத்துக்குக் கூட்டமைப்பினர் கொண்டுவரவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-வ)

## மரண அறிவித்தல்கள்

### அமலோற்பவநாயகி பிரகாசம்



பிறப்பு 28.11.1950 இறப்பு 20.11.2015

அச்சுவேலி விளங்கியவத்தையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி பரலோகமாதா கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அமலோற்பவநாயகி பிரகாசம் 20.11.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரகாசம் - பிரகாசி தம்பதியினரின் மகளும் ஆரோக்கியம்மா, ஆரோக்கியநாதன் , அந்தோனியம்மா காலஞ்சென்ற அன்ரனி மற்றும் சூசைப்பிள்ளை, பசில், கில்டா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருட்பிரகாசம், லூர்த்தம்மா, அமிர்தநாதர், பூங்கொடி காலஞ்சென்ற லியோனாயூலியற்ராணி மற்றும் ஜெகதீசர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.11.2015) திங்கட்கிழமை இறுதி அஞ்சலிக்காக நீர்வேலி பரலோகமாதா பதியிலிருந்து அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் முற்பகல் 10.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக வல்லை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 139 0219
077 528 4614

(66293)

தகவல் :
அ.அருட்பிரகாசம்

### திருமதி மற்றில்டா சோதிமலர் இராசசிங்கம்

(இளைப்பாறிய யாழ் HFC ஆசிரியர்)



தெல்லிப்பழை வீமன் காமத்தை பிறப்பிடமகவும் யாழ்ப்பாணம் பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மற்றில்டா சோதி மலர் இராசசிங்கம் 18.11.2015 புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான M.Aஜோசவ் - சீரோண்மணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - ஆரோக்கியம் தம் பதியினரின் அன்பு மருமகளும்G.R இராசசிங்கத்தின் (முன்னாள்யாழ் மாநகர சபை, யாழ் மாவட்டச் செயலகம் GTZ இணைப்பாளர்) அன்பு மனைவியும் கறோலைன் சுமதியின் (லண்டன்) அன்புத்தாயும் உமாசங்கரின் (லண்டன்) அன்பு மாமியும் அஞ்சலோ (மயூரன் - லண்டன்), ஸ்ரெபொன் (அர்ச்சுன்-லண்டன்) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் தவமலர், யோசப்மேரியன் (ராகம), லீலா ஸ்ரீறீன்பேர்க் (London), நவமலர் கனகசுந்தரி (Jaffna), J.C.ஆனந்தராசா (Australia), J.A.ஆனந்ததாஸ் (London), சுகந்தலீலா செல்வநாதன் (London), வசந்தலீலா வில்லியம் (Australia) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அல்பிரட் துரைசிங்கம் மற்றும் லீலா அமிர்தநாயகம், ராணி அரசநாயகம், றூபி சூசைப்பிள்ளை, வில்பிறட்ரட்ணசிங்கம், கில்பேட் ஜெயசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (23.11.2015) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

368/3B, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா துரைராஜா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப் பிடமாகவும் கொண்ட பொன்னையா துரைராஜா நேற்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சீனிவாசகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும், அமுதவல்லியம்மா காலஞ்சென்ற வர்களான செல்லம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வபாரதி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர், யாழ்போதானா வைத்தியசாலை -சுவிஸ்), இராஜசங்கர், ஜெயச்சந்திரன், விஜயபாரதி, பாரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற நிஷாந்தினி, விஜயச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், தனுஜன், ஸ்ரீகஜன், லிகிந்தன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2015) திங்கட்கிழமை பி.ப. 02.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9352957

### திருமதி மாணிக்கம் இராமு



பழைய வாய்க்கால் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் ஸ்ரேசன் லேன், சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் இராமு கடந்த (21.11.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கந்தர் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணபதி மற்றும் இராசேந்திரம், சிவபாக்கியம், காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை மற்றும் யோகம், காலஞ்சென்ற சரஸ்வதி, சுப்பிரமணியம், சீதேவி, சிவபெருமாள், செல்லத்துரை, சிவக்கொழுந்து, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோ தரியும், அழகம்மா, தர்மலிங்கம், தங்கராசா, சிவலிங்கம் (சோமு), காலஞ்சென்ற இராஜேஸ்வரி, மற்றும் ரஞ்சன், றஞ் சினி, செல்வா, றாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2015) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திரு.திருமதி சிவலிங்கம்,
ஸ்ரீபன் குடும்பம் - (சுவிஸ்)
சுபாஸ்கரன் குடும்பம் (லண்டன்)
சுதர்சன் குடும்பம்
மயூரதன் குடும்பம்

ஸ்ரேசன் வீதி,
சாவகச்சேரி.

### சபாரட்ணம் கனகரத்தினம்

(முன்னாள் யாழ் ஐக்கிய வியாபார சங்க பிரதம காசாளர்)



கந்தர்மடம் குமாரசுவாமி வீதியினைப் பிறப்பிடமாகவும் நல்லூரினை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் கனகரத்தினம் நேற்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - அன்னமுத்து தம்பதியினரின் மகனும் கனக சபாபதியின் (முன்னாள் நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்) சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், தவத்திரு தேரடிச்சித்தர் செல்லப்பாச் சுவாமிகளின் பேரனும் காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஸ்ணானந்தம் (முன்னாள் உரிமையாளர் ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்), லோகானந்தம் (உரிமையாளர் ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்), சற்குணானந்தம் (ஓய்வு பெற்ற உப தபால் அதிபர் நல்லூர் கோயில் S.P.O), லோகராணி (அவுஸ்திரேலியா), கலைவாணி, குமுதினி (ஆசிரியை யாழ் இந்து மகளிர் கல்லூரி மற்றும் யாழ் இளைய தம்பி இந்து வித்தியாலயம்), குகானந்தம் (வருமான வரிப்பரிசோதகர் - யாழ் மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சூரியகுமாரி, ரஞ்சினிதேவி, ரஞ்சினி, ஜெயபாலன் (அவுஸ்திரேலியா), சிவசந்திரபோஸ் (உரிமையாளர் - போஸ்கோ பதிப்பகம்), உருத்திரகுமாரன், அருட்செல்வி ( ஆசிரியை யாழ் வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்ஷன் (பிரதேச செயலகம் ஊர்காவற்துறை) ஆர்த்திகா, பார்த்தீ பன், கார்த்திகா, ஸ்ரீகுமரன், பைரவி, அர்ச்சுனா, யஸ்மின், தமிழினி, தர்ஷன், திருவரங்கன், கௌதமன், சிந்துகௌரி, சிவதர்சினி, செந்தூரன், சிவசேந்தன், குகசுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் கரிகாலன், சித்தார்த், அரிஷ் ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மதியம் 12 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

616/04, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2596

(66296)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 12 . 06 . 1974

மறைவு 21 . 11 . 2015

**வில்வராஜா சுதாகர்**

(நரேசா இஞ்சினியர்ஸ் உரிமையாளரும், யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவரும்)

காற்றில் வந்த உன் மரணச் செய்தி!
கனவாகிப் போகாதோ!
பூத்திருந்த உன் வதனம்
பாரினில் எம்மைத் தவிக்க விட்டு
எங்கு சென்றதோ!

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

LINCO ENGINEERING & CONSTRUCTION

# கண்ணீர் அஞ்சலி



யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர் திருமதி. குமுதினி உருத்திரகுமாரனின் (யா/இந்து மகளிர் கல்லூரி, யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்) தந்தையார்

அமரர் **சபாரட்ணம் கனகரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

(66296) இசை ஆசிரியர் கழகம் - யாழ் கல்வி வலயம்

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகளின் பேரனார் **சபாரட்ணம் கனகரத்தினம்** அவர்களது அமரத்துவ செய்தி கேட்டு, அன்னாரின் பிரிவுத் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயக அறங்காவலரும்,
(66294) விநாயகஅடியார்களும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னப்பெடியர்
**கந்தையா**
(ஓய்வுபெற்ற நிலவளவைத் திணைக்கள உத்தியோகத்தர்)



நிஜமாக நீங்கள் மறைந்து
ஓராண்டு ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக்கடந்தாலும் - ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூஜிப்போம்.

உங்கள் நினைவுகளுடன் என்றும்
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
கைதடி மத்தி, குமரநகர்,
கைதடி.

தோற்றம் 1941.06.13

மறைவு 2014.12.04

(66292)(11.15.11)

# மரண அறிவித்தல்

**கந்தையா இராமச்சந்திரன்** (சாரதி சின்ராசு)



மட்டுவிலை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராமச்சந்திரன் (சாரதி) (21.11.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் தவமணியின் (தவம்) அன்புக்கணவரும் ரவிச்சந்திரன், சசீந்திரன், சுசீந்திரன் ஆகியோரின் தகப்பனும்றஜனி, றயீதா, சாமிளா ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற ருக்சனன் மற்றும் லத்மிகா, அபினா, யெஸ்மினா, துசாந், தேனுகாந் ஆகியோரின் பேரனும்காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பிரான்ஸ்) மற்றும்சிவபாக்கியம் (மட்டுவில்), பரமேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் சகோதரனும் மகேஸ்வரி (பிரான்ஸ்), சரவணமுத்து (மட்டுவில்), முத்துலிங்கம் (டென்மார்க்) காலஞ்சென்ற பத்மநாதன் (கட்டப்பிராய்) மற்றும் மகேந்திரம் (திருநெல்வேலி), பற்குணராசா (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (இளைப்பாறிய C.E.B) பாலகிருஸ்ணன் (சுவிஸ்), புஸ்பராணி (கொக்குவில்), இராசேந்திரம் (கட்டப்பிராய்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நாளை (24.11.2015) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு
100/8 சம்பியன் லேன், கொக்குவில். (66299)

தகவல்:
குடும்பத்தினர்.


# இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாக்க இந்தியா அழுத்தம்

### *கொடுக்க வேண்டுமென மோடியிடம் நேரில் வலியுறுத்தியது மலேசிய எதிர்க்கட்சி*

கோலாலம்பூர், நவ.23

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமைகளை மேம்படுத்தவும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவும் கொழும்பு அரசுக்கு புதுடில்லி அழுத்தம் கொடுக்க வேண்டுமென இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் மலேசிய எதிர்க் கட்சியினர் நேரில் வலியுறுத்தியுள்ளனர்.

ஆசியான் மாநாட்டில் பங்கேற்கவும், இந்திய-மலேசிய இருதரப்பு உறவுகள் தொடர்பில் பேச்சுக்களை நடத்தவும் இந்தியப் பிரதமர் கோலாலம்பூர் சென்றுள்ளார்.

இதன்போது, மலேசியாவின் எதிர்க் கட்சித் தலைவர்கள் இந்தியப் பிரதமரைச் சந்தித்துள்ளனர்.

அந்தச் சந்திப்பில் இலங்கையில் மனித உரிமை நிலைமை மேம்பட இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தாங்கள் கோரியதாக அவரை சந்தித்த குழுவில் இருந்த ஜனநாயக செயற் கட்சியின் துணைத் தலைவர் குலசேகரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐ நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை இதயசுத்தியுடன் நிறைவேற்ற இந்தியா அழுத்தம் கொடுத்து அதை கண்காணிக்க வேண்டும் எனத் தாங்கள் கோரியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலை, மலேசியாவில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 12 இந்தியர்களின் நிலை ஆகியவை குறித்தும் மோடியுடன் விவாதிக்கப்பட்டதாக ஜனநாயக செயற் கட்சியின் துணைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (த-வ)

# அமைப்புக்கள் மீதான தடை நீக்கத்தை வரவேற்கிறது பிரி.

கொழும்பு, நவ.23

அமைப்புக்களின் மீதான தடை நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என பிரிட்டன் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டாவுரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண்பதற்கான ஓர் முனைப்பாக இந்த தடை நீக்கத்தை கருதுகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட நபர்கள் மீதான தடையை இலங்கை அரசு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் ஊடாக நீக்கியிருந்தது.

பிரித்தானிய தமிழர் பேரவை, க்ளோபல் தமிழ் போராம், கனேடிய தமிழ் காங்கிரஸ் உள்ளிட்ட எட்டு அமைப்புக்கள் மற்றும் 267 தனிப்பட்ட நபர்கள் தடை செய்யப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ)


# துயர் பகிர்கின்றோம்

Hotel Lovusiya இன் முன்னாள் முகாமையாளரும் Green Grass Hotel இன் முகாமைத்துவ பணியாளராகவும் கடமைபுரிந்த

**தர்ம புத்திரன் அரவிந்தன்**



அவர்கள் 20.11.2015 இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குநர்
முகாமையாளர், பணியாளர்கள்
Green Grass Hotel & Lovusiya Hotel

# இதய அஞ்சலி

**Eng. வில்வராஜா சுதாகர்**



எம் இதயம் நிறைந்த
இனியவனே !
உன் முகம் எம் விழிகளில்
நனைகிறது !
உன் நட்பின் நினைவுகள்
எம் மனதில் சுழல்கிறது !
யாழ் இந்து அன்னைக்கு
பெருமை சேர்த்த இந்துவின்
மைந்தனே !

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

ஆருயிர் நண்பர்கள்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - A/L 93 (c/20340)


# புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரியிடம் விசாரணை

கொழும்பு, நவ.23

சட்டவிரோத ஆயுதப் பரிமாற்றங்கள் தொடர்பாக, இலங்கையின் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவிடம், பெரியளவிலான மோசடிகள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு, விசாரணை நடத்தியுள்ளது.

ஆணைக்குழுவுக்கு, கடந்த வாரம் அழைக்கப்பட்ட மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவிடம், ஒரு மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டு வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள் ளது.

ரக்னலங்கா பாதுகாப்பு நிறுவனத்துக்குச் சட்டவிரோதமாக ஆயுதங்களை வழங்கியது தொடர்பாகவே அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமானவரான இவர், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்தவுடன், அரச புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பதவியைவிட்டுவிலகினார்என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### 600 கிலோ தங்கப் புதையல் தோண்டியோருக்கு 3 நாள் விளக்க மறியல்

பருத்தித்துறை, நவ.23

மணற்காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் 3 நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் நேற்று ஆயர்ப்படுத்திய போதே நீதிபதி மா. கணேசராசா அனுமதி வழங்கினார்

கடந்த வெள்ளிக்கிழமை புதையல் தோண்டியவர் களை பருத்தித்துறைப் பொலிஸாரும் நெல்லியடிப் பொலிஸாரும் கைது செய்தனர். இதன் போது 6 பேர் கைது செய்யப்பட்டனர் மேலும் முக்கிய புள்ளிகள் 6 பேர் தப்பியோடினர். தப்பியோடியவர்களை நெல்லியடிப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

அதசூரியகே ரஞ்சித் (வயது - 63), முடியான்சே ஆராச்சி (வயது -36), அதங்க நாமல் ஆராச்சி(வயது -34),வேலாயுதம் பிரதீப் நிசாந்தன் (வயது-43) உதயகுமார் வீரப்பன்(வயது-46) அழகய்யா பிரகாஸ் ஆகியோர் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இதன் போது 600 கிலோ தங்கம் இருப்பதாக தெரிந்ததா லேயே புதையல் தோண்டியதாகக் கூறினர். (108)

# 2020 ஆம் ஆண்டு வரை அரசை எவராலும் அசைக்க முடியாது

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

கொழும்பு, நவ.23
எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை இந்த நல்லாட்சி அரசை எவராலும் அசைக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றில் ஒளிபரப்பாகிய விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த ஜனவரி 8ஆம் திகதி முதல் இன்று வரை உள்ள குறுகிய காலப்பகுதியில் கடந்த நாற்பது-ஐம்பது வருடங்களாக வெறும் பேச்சளவில் மாத்திரம் காணப்பட்ட நல்லாட்சிக்கான அடித்தளங் கள் பல நிறுவப்பட்டுள்ளன.



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான நடவடிக்கைகள் செயலளவில் ஆரம்பமாகியுள்ளன. அதே போன்று இன்றுவரை ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. உயர்மட்ட செலவுகள்பெரியளவில்குறைக்கப்பட்டுள்ளன. இவைகள் சிலரது கண்களுக்குத் தெரிவதில்லை.

இந்த அரசு உறுதியான அரசு அல்ல. இந்த அரசினால் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாது. விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும் போன்ற கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர்.

நான் ஒரு விடயத்தை, உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தேசிய அரசு உறுதியானது. எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை இந்த அரசை எவராலும் மாற்ற முடியாது. அதன் பின்னர் வரும் பொதுத் தேர்தலில் மக்கள் விருப்பத்திற்கு அமைய அரசு அமையும். அதுவரை தற்போதைய அரசு சேவையாற்றும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்-என்றார். குறித்த நிகழ்ச்சியில் பிரதமர் உட்பட நல்லாட்சி மாற்றத்துக்கு உழைத்த கட்சிகளின் தலைவர்கள் சிலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

## அரசுக்கு எதிராக ஒன்றிணைய தொழிற்சங்கங்கள் ஏற்பாடு

கொழும்பு, நவ.23
ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை இலங்கை மத்திய வங்கியிலிருந்து நீக்கி விடுவதற்கும் தொழிலாளர் சட்டத்தை மாற்றுவதற்கும் அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள் கூட்டு நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக, கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் இந்த நடவடிக்கையில் இணைந்து கொள்ளவுள்ளன.

இதற்காக, தொழிற்சங்கங்களின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் ஆரம்பக் கட்ட கூட்டமொன்று எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கொழும்பு-3 இல் உள்ள இலங்கை வர்த்தக தொழில்நுட்ப மற்றும் பொதுத் தொழிலாளர் சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மின்சாரக் கட்டணம் அதிகரிக்க வாய்ப்பு

கொழும்பு, நவ.23
நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்துக்கு அமைய மின்சாரக் கட்டணம் மற்றும் தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் விரைவில் அதிகரிக்கப்படும் வாய்ப்புக்கள் காணப்படுவதாக, கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், தகவல் தொடர்பாடல் மற்றும் மின்சார விநியோக சேவைத்துறைக்கான புதிய வரி விதிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் காரணமாகவே மேற்குறிப்பிட்ட சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்ப்பதாக துறைசார் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்பாடல் சேவை மற்றும் மின்சார விநியோக சேவைகளுக்காக 4 சதவீத வரி விதிப்பு அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக வரவு -செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# கிராமத்துக்குள் புகுந்து கலாட்டா: கட்டி வைத்துக் கவனித்தனர் மக்கள்

## பின்னர் சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
நள்ளிரவில் ஆயுதங்களுடன் கிராமத் துக்குள் புகுந்து கிராமத்தவர்களைத் தாக்கிக் காயம் ஏற்படுத்தியவர்களை மக்கள் ஒன்றுசேர்ந்து பிடித்துக் கட்டி வைத்து நையப் புடைத்துவிட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பரந்தன் கோரக்கன்கட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

குறித்த கிராமத்தில் இனந்தெரியாத நபரின் நடமாட்டம் இருப்பதைக் கண்ட தோட்டக்காவலில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் அவரிடம் சென்று விசாரித்துள்ளனர்.

அதன்போது முறுகல் ஏற்பட்டதால் இனந்தெரியாத நபர் தொலைபேசி அழைப்பின் மூலமாக மேலும் சில இளைஞர்களைச் சம்பவ இடத்துக்கு அழைத்துள்ளார்.

அங்கு வந்து சேர்ந்த மற்றைய இளைஞர்களும் பிரச்சினையைத் தீர்க்காமல் தோட்டக் காவலில் ஈடுபட்டிருந்த இளைஞர்களுடன் முரண்பட்டுத் தாக்கியுள்ளனர். அவர்கள் கொண்டுசென்ற கத்தி மற்றும் மூங்கில் தடி உள்ளிட்டவற்றால் முதலில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதனால் நிலைமை மோசமாகவே அங்கு கூடிய கிராம மக்கள் சேர்ந்து குறித்த 4 இளைஞர்களையும் பிடித்துக் கட்டிவைத்து உரிய கவனிப்பு வழங் கினர். பின்னர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு சென்ற பொலிஸார் குறித்த 4 பேரையும் கைது செய்து சென்றனர்.

அவர்கள் என்ன நோக்கத்துக்காக அங்கு சென்றனர் என்பது பற்றிய விடயங்களைப் பொலிஸார் தெரிவிக்கவில்லை. சம்பவத்தில் வை. எம். சி. ஏயைச் சேர்ந்த இருவர் காயமடைந்து கிளி நொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-4,ரி3)




# குற்றச்சாட்டுக்கள் குறித்து நம்பகரமான விசாரணை

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.23
தனது பொறுப்பில் உள்ள நிறுவனங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நம்பகமான விசாரணைகள் நடத்தப்படும் என்று பாதுகாப்புச் செயலர் கருணா சேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின், உயர் மட்ட அதிகாரிகள் 200 பேர் பங்கேற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்ட பின்னர், கருணாசேன ஹெட்டியாராச்சி முதல் முறையாகக் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத் தலைமையகத்துக்குச் சென்றிருந்தார்.

அவரை, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள் வரவேற்றனர். அங்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

இதையடுத்து, மேஜர் ஜெனரல், பிரிகேடியர் பதவி நிலைகளில் உள்ள இராணுவ அதிகாரிகள் 200 பேர் மத்தியில் பாதுகாப்புச் செயலர் உரையாற்றினார்.

இதன் போது அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

எனது பொறுப்பின் கீழ் உள்ள நிறுவனங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நம்பகமான விசாரணைகள் நடத்தப்படும்.

தேசிய அளவில் பல்வேறு புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் போது, பின்பற்றுவதற்கான ஒரு மூலோபாய பாதுகாப்பு அனுமதிக் கொள்கை ஒன்றின் முக்கியத்துவத்தை ஆயுதப் படைகளின் நிலையில் இருந்து, புரிந்து கொண்டுள்ளேன்.

நாம் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் போது, நம்பகமான விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் நிச்சயமாக அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். நாம் அவ்வாறு செய்யத் தயார். ஏனென்றால் நாம் நினைப்பது போன்று பிசாசு ஒன்றும் அவ்வளவு கொடூரமானது அல்ல.

நாம் அனைவரும் குழுவாகப் பணியாற்ற வேண்டும். இராணுவம் ஒழுக்கமுடையதாக இருக்க வேண்டும்-என்றார். (து-வ)

**வாடகைக்கு வீடு தேவை**

கடந்த 03 வருடங்களாக மன்னாரில் இயங்கிவரும் பொருளாதார மேம்பாட்டு நிறுவனமான ECLOF LANKA (GTY) எக்களொப் லங்கா நிறுவனத்திற்கான அலுவலகத்திற்காக 500 சதுரடி கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு மன்னார் நகரத்திலிருந்து ஒரு km தூரத்திற்குட்பட்டு இருப்பதுடன் மாத வாடகை ரூபா 10,000 /= உட்பட்டவாறு தேவைப்படுகின்றது. பொருத்தமானவர்கள் கீழ்காணும் இலக்கங்களுக்கு 05.12.2015 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். (c/20337)

திட்ட அலுவலகர் ECLOF LANKA MANNAR
T.P : 072 7171 463, 077 9744 611

# பிரிவினைவாதத்தைக் கைவிடுங்கள்

## தடைப்பட்டியலிலுள்ளவர்களிடம் கோருகிறது இலங்கை அரசு

பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாதத்தை கைவிடுமாறு தடை செய்யப்பட்டுள்ள அனைத்து அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களிடமும் அரசு கோரியுள்ளது.

அத்துடன் அவற்றைக் கைவிட்டு அரச சட்டங்களை மதிப்பதன் மூலம் அவர்கள் மீதான தடை நீக்கப்படுமென வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த மகிந்த ராஜபக்ச அரசின் ஆட்சிக் காலத்தில் 16 அமைப்புக்கள் மற்றும் 424 தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் 8 அமைப்புக்கள் மற்றும் 267 தனிப்பட்ட நபர்களை இந்த பட்டியலிலிருந்து நல்லாட்சி அரசு நீக்கியுள்ளது. தடை செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்புக்கள் தொடர்பில் நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படும் எனவும் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நல்லாட்சி, ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்து வதாகத் தெரிவித்து அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஐக்கிய இலங்கை என்னும் கோட்பாட்டை ஏற்றுக் கொண்ட அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட அமைப்புக்களும் பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாதத்தைக் கைவிட்டு அரச சட்டங்களை மதித்தால் அவற்றின் மீதான தடைகளையும் நீக்க முடியும். வடக்கும் தெற்கும் கூட் டாக இணைந்து நாட்டின் நலனுக் காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

தடை செய்யப்பட்ட சில அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாதத்துடன் தொடர்புடையவர்கள் அல்ல. தடை செய்யப்பட்ட சில தனிநபர்கள் தடை செய்யப்பட்ட பட்டியலில் அறிவிக்கப்பட்ட போதே உயிரிழந்திருந்தனர் .

இந்த தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் தொடர்பில் அரச புலனாய்வுத் தரப்புக்கள் கடந்த ஆறு மாதங்களாக விரிவாக மேற்கொண்ட விசாரணைகள், ஆய்வுகளின் பின்னர் தடை தளர்த்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் துரித கதியில் விரிவாக ஆராயப்படாது அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது என்பதை வெளிவிவகார அமைச்சு ஒப்புக்கொள்ளவதாக அதில் குறிப்பிடப்பட் டுள்ளது. (வ)

---

### எமது

யாக இருப்பார். நெருக்கடி யான வேளைகளில் கூட, அவர் உண்மையைப் பேணிக் கொண்டதுடன் இந்த நாட்டின் மீது நம்பிக்கையையும் வைத்திருந்தார். அனைத்துக் குடிமக்களின் மனித உரிமைகளையும் உறுதிப்படுத்தும், ஜனநாயகப் பயணத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

நாம் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்துப் பேசியுள்ளோம். நாங்கள் ஒரு சவாலான பாதையைத் தெரிவு செய்துள்ளோம். நாம் ஒரு நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எமக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவை-என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் :-

நீதி, பொறுப்புக்கூறல் பாதையில் இலங்கையின் தலைவர்கள் பயணிக்க வேண்டியது அவசியம். 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக இலங்கைக்கு வந்துள்ளேன். ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் மனித உரிமைகள் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

தலைவர்கள் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நோக்கிய பயணத்தைத் தொடர வேண்டும். இலங்கை மக்களின் மனித உரிமைகள் சார்பாகவும், பொறுப்புக்கூறல் மற்றும் மறுசீரமைப்புக்கான அரசாகவும், செயற்படுவதாக, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உறுதியளித்திருப்பது வரவேற்கத்தக்கது-என்றார். (த-வ)

### இராஜதந்திர

மகிந்த ராஜபக்ச கூறிவந்தார்.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், முதல் முறையாகக் கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை வந்திருந்த தெற்கு மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வாலுக்கும் அப்பம் விருந்து வழங்கப்பட்டது.

தாம் முதல் முறையாக அப்பத்தைச் சாப்பிட்டதாக குறிப்பிட்டிருந்த அவர், அதனை இலங்கையின் அப்ப இராஜதந்திரம் என்று விவரித்திருந்தார்.

இந்த நிலையில், இலங்கை வந்துள்ள சமந்தா பவருக்கும் அப்ப விருந்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த விருந்துபசாரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-வ)

### மக்களின்

ஈ.சரவணபவன் வரவேற்றார். இதன் பின்னர், 2013 ஆம் ஆண்டு இனந்தெரியாத ஆயுததாரிகளினால் எரியூட்டப்பட்ட இயந்திரத்தை அவர் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, 'உதயன்' அலுவலகம் மீதான தாக்குதல், 'உதயன்' ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான ஒளிப்படங்களையும் அவர் பார்வையிட்டார். 'உதயன்' பணியாளர்கள் மத்தியில், உரையாற்றிய சமந்தா பவர், நானும் ஒரு பத்திரிகையாளன்தான். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பிரதிநிதியாகவே உங்களின் முன்னால் நிற்கின்றேன். இந்தப் பகுதியில் உங்கள் வேலைகள் கடந்த காலங்களில் மிகவும் கஷ்டமாக இருந்தது என்பதை நான் அறிவேன்.

நீங்கள் ஒரு விடயத்தை - மக்கள் பிரச்சினைகளை - அடக்குமுறைகளை - உங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பீர்கள் என்ற விடயம் இல்லாமல் இருந்திருந்தால், நிலைமை இன்னும் மோசமாகி இருக்கும். நீங்கள் அவ்வாறு பிரசுரித்ததுதான் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. உங்கள் தைரியம், முன்னால் வந்து வேலை செய்யும் தன்மை இல்லாவிட்டால் இந்தப் பகுதி எப்படி இருந்திருக்கும் என்பதை எங்களால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

உண்மையாகவே நாட்டில் மேலும் முன்னேற்றங்கள் இருக்க வேண்டும் என்றால் அரசு பொறுப்புக் கூறுவதை உறுதி செய்ய வேண்டும். நானும் ஒரு பத்திரிகையாளர் என்ற ரீதியில் அரசை விமர்சிப்பதோ அல்லது அரச பக்கத்தில் இருந்து விமர்சனங்களை எதிர்நோக்குவதோ இரண்டும் முக்கியமானவைதான்.

நீங்கள் மக்களோடு அதிக தொடர்பில் இருப்பதால் ஏனையோருக்கு, அரச அதிகாரிகளுக்கு தெரியாத விடயங்கள் கூட உங்களுக்குத் தெரியவரும். நீங்கள் தான் குமிழ்களை உடைப்பவர்கள். துளைகளை இடுபவர்கள்.

நீங்கள் உங்கள் மக்கள் உரிமைக்காக போராடுகிறீர்கள். என்னுடைய நாட்டிலும் பத்திரிகைத்துறை கடினம்தான். ஆனால் அங்கு பாதுகாப்பு உள்ளது. நீங்கள் பாதுகாப்பு பிரச்சினை இருந்தும் வேலை செய்கிறீர்கள்.

பாதுகாப்பு பிரச்சினையை எதிர்கொண்டு அதனை தனது உடலில் தாங்கிக் கொண்டிருக்கும் 'உதய'னின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் சிறந்த உதார ணம். நீங்கள் செய்யும் தியாகத்தின் ஒரு பகுதியை தன் உடலில் சுமந்துள்ளார். இதன்னை நினைத்து நான் வியக்கிறேன். இதை எமது நாட்டு ஜனாதிபதி சார்பில் தெரிவிக்கின்றேன் - என்றார். (த-5-10)

### படைக் குறைப்புக்கு

ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, யாழ்ப்பாணத்தில் படைக்குறைப்புச் செய்வதற்கு காத் துக் கொண்டிருக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)

திருமலை

பேர் தொடர்பான விவரங்களை வெளியிடத் தயார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் நிறைவேற்று அதிகாரியும் ஐ.நா பொதுச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட தருஷ்மன் நிபுணர் குழுவின் உறுப்பினருமான யஸ்மின் சூகா அறிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படை முகாமில் சித்திரவதைக்கூடமொன்று காணப்பட்டதாகக் கடந்த வாரம் இலங்கை வந்திருந்த பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ. நா செயற்குழுவின் பிரதிநிதிகள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்த நிலையிலேயே இந்த சித்திரவதைக் கூடத்தை இயக்கியவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடத் தயார் என சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் நிறைவேற்று அதிகாரியான யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இந்த முகாம் பற்றிய மேலதிக விவரங்கள் எம்மிடமுள்ளது. குறித்த சித்திரவதைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டு உயிருடன் தப்பி வந்த சாட்சிகளின் தகவல்கள் ஆதாரங்களுடன் வழங்கப்படும்.

அத்துடன் கைதிகளை முகாமுக்கு அழைத்துச்சென்ற கடற்படை உத்தியோகத்தர்களின் பெயர் விவரங்கள் எம்மிடம் இருக்கின்றன. இதில் குறித்த சித்திரவதைக் கூடத்துடன் தொடர்புடைய பத்து கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்கள் வகித்த பங்கு குறித்த தகவல்களும் உள்ளன.

இவை தொடர்பான எழுத்து மூல ஆவணம் ஐ.நா செயற்குழுவுக்கு அதன் இலங்கைப் பயணத்துக்கு முன்னர் எம்மால் வழங்கப்பட்டுள்ளது.

சில கைதிகள் யாழ்ப்பாணம், பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களைப் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு அழைத்துச் சென்ற நபர்களின் பெயர் விவரங்களும் உள்ளன. இதில் கடற்படைப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளும் அடங்குகின்றனர். இந்தக் காலப்பகுதியில் கடமையாற்றிய கடற்படை அதிகாரிகள் உத்தியோகத்தர்களிடம் முகாம் பற்றி, இலங்கை அரசு விசாரணை நடத்தவேண்டும்-என்றார். (த-வ)

### அனைத்திலும்

மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா ஆகியோரை, வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் போதே, சமந்தா பவர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

### பொறுப்புக்

எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒபாமாவிடம் இருந்து நான் கொண்டுவந்த செய்தி நல்லிணக்கம் ஆகும். தமிழ் மக்கள் மீதான அத்துமீறல்கள் - வன் செயல்களிலிருந்து விடுபட்டு சகல இனங்களுக்கிடையில் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது எமது நோக்கமாகும்.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போரில், அதிக இழப்புகளுக்கு மக்கள் முகம் கொடுத்தனர்.

போர் முடிவுக்கு வந்ததிலிருந்து, ஜனாதிபதி ஒபாமா அழுத்தம் கொடுக்கும் விடயம், பொறுப்புக் கூறுதல் ஆகும். பொறுப்புக் கூறுதல் நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் என்று அவர் நம்புகிறார். ஜெனிவாவில் இது தொடர்பில் ஏனைய நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு கடும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

ஒபாமாவின் மற்றுமொரு செய்தி நம்பிக்கை. உலகமே இலங்கையை பார்த்துக் கொண்டிருக்கின்றது. நாடு தழுவிய ரீதியில் நம்பிக்கையை ஏற்படுத்தல் முக்கியமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அந்த வாக்குறுதிகள் நல்லிணக்கத்துக்கான படிகளாக அமையும். கடந்த 10 வருடங்கள் ஆட்சி செய்த அரசில் இருந்து தற்போது உருவாகியுள்ள புதிய அரசு மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடியது.

பொறுப்புக் கூறலுக்கான சாதகமான சூழல் தற்போது நிலவுவதாக நாங்கள் நம்புகின்றோம். தற்போதைய அரசும் தனது நோக்கம் அது தான் எனக் கூறியுள்ளது. நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை அரசு மேற் கொள்ளும் எனப் பொறுமையுடன் காத்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் கால தாமதமின்றிச் செயற்படுத்துவது அவசியம். சர்வதேச ரீதியில் சில சாதகமான காரணிகள் இருப்பினும், தற்போதைய அரசியல் நிலைமை சிக்கல் நிறைந்ததாகவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தேன். போரில் கணவனை இழந்தவர்களுக்குப் புதிய அரசின் மாற்றங்கள் , வாக்குறுதிகள், திட்டங்கள் அவர்களின் வாழ்க்கைக்கு வழிவகுத்துக் கொடுக்கும் என்று நம்புகிறேன். எதிர்வரும் காலங்களில் நாடு தழுவிய ரீதியில் போரினால் பாதிக்கப்பட்டோருக்கான வாழ்வாதாரத் திட்டங்களை வழங்கவுள்ளோம். அவர்களுக்கான நீதி கிடைப்பதற்கான பிரயத்தனங்களை மேற்கொள்வோம் - என்றார். (த-வ-5-ரி4)

### ஆட் கடத்தல்களுக்கு

நேர்முகப் பரீட்சை ஒன்றில் கலந்து கொண்ட பின்னர், திரும்பிச் செல்லும் போது அவர்கள் பயணம் செய்த வாகனத்துடன் கடத்தப்பட்டிருந்தனர்.

இந்த கடத்தல் தொடர்பில் வத்தளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், இவ்வாறு கடத்தப்பட்ட மாண வர்கள் கொலை செய்யப்பட்டனர் என விசாரணைகளில் தெரிய வந்தது.

இந்த நிலையில், கடற்படைத் தளத்திலிருந்து கைப்பற்றப்பட்ட வாகனம் குறித்த மாணவர்கள் பயணித்தது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாகனத்தைக் கைப்பற்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த பல நாட்களாக பகீரதப் பிரயத்தனங்களை முன்னெடுத்த போதிலும், கடற்படை உயர் அதிகாரிகளின் தலையீட்டினால் இது முடியாமல் போனது. குற்றச் செயலொன்றுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமொன்றை மறைத்து வைத்திருப்பது குற்றம் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடற்படைத் தளபதியிடம் தெளிவுபடுத்திய பின்னர் குறித்த வாகனம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வாகனம் திருகோணமலை கடற்படை முகாமின் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது-என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

# பொதுமக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் நிதி நிறுவனங்கள் செயற்படுவதற்கு நடவடிக்கை

அவரது உரை நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இங்கே பிரசுரமாகிறது

**வங்கி மற்றும் நிதியியல் கொழும்பில் சர்வதேச நிதி மையம்**

நாங்கள் பல வருடங்களாக நிதி மையமொன்று தொடர்பாகக் கதைக்கின்றோம். ஆனால் அது சாத்தியமாகவில்லை. உலக சனத்தொகையின் நான்கில் ஒரு பகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ள சார்க் பிராந்தியத்தில் எமது பௌதிக ரீதியான அமைவிடமானது அத்தகையதொரு முயற்சிக்கு கூடுதல் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

நிதி மையமானது, பொருளாதாரத்தின் வளர்ச்சியைத் தூண்டும் சக்தியைக்கொண்டுள்ளது. இது உண்மையில் எங்களிடமிருந்து சில முதிர்வுகளை வேண்டி நிற்கின்றது. அதாவது விசேடமாக பௌதிக மற்றும் எண்ணியல் கட்டமைப்பு வசதிகள் மனித வளம் ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்ட நிதி உட்கட்டமைப்பு வசதிகளாகும். இந்த அரசானது சாத்தியமான விட யங்களில் பணத்தை முதலிடுவதில் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்தப் பின்னணியில் நாங்கள் கொழும்பு சர்வதேச நிதி மையத்தை உரு வாக்குவோம்.

இந்தக் குறிப்பிட்ட வலயம் டுபாய் சர்வதேச நிதி மையம் மற்றும் உலகின் பல பாகங்களில் காணப்படும் கரை கடந்த நிதி மையங்களின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படும். இந்த வலயமானது வரையறுக்கப்பட்ட டி.ஆர் விஜயவர்தன மாவத்தைக் குள் உள்ளடக்கப்படுவதுடன் 300,000 சதுர அடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியும் நிர்மாணிக்கப்படும். நிதி மைய ஒழுங்குபடுத்தல் தேவைப் பாட்டுக்கு அமைய நிதி மையத்திற்கே உரித்தான முறையில் வர்த்தக ரீதியான பிணக்குகளை மிக விரைவாகவும் மற்றும் நியாய முறையில் [illegible]பதற்காக அது வர்த்தக நீதிமன்றத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

இந்த முயற்சியானது கடந்த அரசின் கசினோ சூதாட்ட எண்ணக் கருவை ஒரு சிறப்பான நிதி மையமென்ற வியாபார முயற்சியாக மாற்றியுள்ளதென்றே நம்புகிறோம். அது பல எண்ணிக்கையிலான தொழில் முயற்சிகளை உருவாக்கும். நாங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச வங்கிகளை இந்த நிதியத்திலிருந்து இயங்குமாறும் இந்த நிலையத்தின் ஒரு பகுதியாக அழைக்கின்றோம். 2016 ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

**வர்த்தக வங்கிகள்**

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட 32 வங்கிகளையும் 48 நிதி நிறுவனங்களையும் நாங்கள் கொண்டுள்ளோம். வங்கிகள் தாங்களாகவே கிடையான விரிவாக்கத்தில் ஈடுபடுவதனால் இலங்கையின் வங்கித்துறையின் ஊடுருவலானது குறிப்பிடும் படியாக அதிகரித்துள் ளது. தற்போது எமது வங்கிகளானது தன்னியக்க காசு மீளப்பெறல் இயந்திர வசதிகள், இலத்திரனியல் வங்கி வசதிகள் மற்றும் ஏனைய வங்கி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதனால் அவைகள் வங்கிகளை வாடிக்கையாளர்களின் காலடியில் கொண்டு போய்ச் சேர்த்துள்ளன.

நான் வங்கித் துறையினரை அவர்களின் விரிவாக்கத்துக்காக மெச்சுகிறேன். அதேவேளை எமது வங்கிகளானது பிணையை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்குவதில் தம்மை மையப்படுத்தியுள்ளதோடு வியாபார மாதிரியிலான கடன் வழங்கலுக்குப் பின்னிற்கின்றதைக் காணக்கூடியதாக உள்ளது. இது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உருவாக்கலுக்குத் தடையாக உள்ளது.

எமது வங்கித் துறையானது முறைமையான முக்கியத்துவமான ஒரு சில வங்கிகளையும் மற்றும் சில சிறிய அளவிலான வங்கிகளையும் கொண்டதாகும். வங்கிகள் சுயேச்சையாக இணைவதை நாங்கள் வரவேற்கின்றோம். ஏனெனில் அதன் மூலம் உறுதியான ஐந்தொகையை உருவாக்கலாம். அது சிறந்த தரப்படுத்தலைப் பெற்றுக்கொடுப்பதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் விரிவான நுழைவுக்கும் வழிவகுக்கும். நான் மீண்டும் வலியுறுத்துவது என்னவெனில், இவ்வாறான இணைவுகளின் போது அனைத்துத் தரத்திலான ஊழியர்களினதும் தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தையும் மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியையும் இணைத்து மிகவும் உறுதியான மற்றும் பெரிய அளவிலான தேசிய வீட மைப்பு வங்கியையும் லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியை பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் இணைத்து இலங்கை தொழில் முயற்சிகள் அபிவிருத்தி வங்கியையும் உருவாக் குவதோடு இலங்கை சேமிப்பு வங்கியானது தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைக்கப்படும்.

திவிநெகும வங்கியானது ஏறக்குறைய ரூபா 59 பில்லியன் முதலீட்டுப் பட்டியலைக் கொண்டுள்ளது. ஆனால் இத்தகையதொரு தொகையை முகாமை செய்வதற்கான இயலளவு அந்த வங்கியிடம் இல்லை. அந்த வங்கியில் உள்ள பணத்தின் உரிமையாளர்கள் எமது சமூகத்தில் மிகவும் நலிவானவர் களாவர். ஆகவே அதனைப் பாது காப்பது எமது கடமையாகும். ஆகவே, இவ்வங்கியிலுள்ள வைப்புக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும் தொழில் ரீதியான முகாமையை உறுதிசெய்யும் நோக்கிலும் இந்த வங்கியை தேசிய சேமிப்பு வங்கியுடன் தொடர்புபடுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அனுமதிப் பத்திரம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது பிரதான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். குத்தகை வியாபாரமானது வங்கிகளின் பிரதான நடவடிக்கைகளுக்கு அழிவை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இந்த வங்கிகள் 2016 யூன் முதலாம் திகதியுடன் குத்தகை வியாபாரத்தில் ஈடுபடுவதை நிறுத்தல் வேண்டும்.

இன்று வங்கிகள் நாட்டின் பொருளாதாரத்தில் காணப்படும் சில துறைகள் மீது கடன் வழங்குவதற்குத் தயக்கம் காட்டுகின்றன. ஆதலால் இந்தத் துறைகளின் முன்னேற்றமா னது பாதிப்படைந்துள்ளது. அனைத்து வங்கிகளும் தனது கடன் பட்டியலில் 10 சதவீதத்தை விவசாயத் துறைக் கும், 5 சதவீதத்தை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும், 5 சதவீதத்தை பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கும் கடன்களை பெற்றுக்கொள்வதற்காக ஒதுக்குதல் வேண்டும்.

சர்வதேச சந்தையில் காணப்படும் தங்கத்திற்கான விலையின் தாக்கம் காரணமாக உள்ளூர் வங்கிகள் மிக விசாலமான நகையீட்டு முதலீட்டுப் பட்டியலையும் கொண்டுள்ளன. நான் வங்கித் துறையிடம் வேண்டிக் கொள்வது யாதெனில், தனது கடன் பட்டியலில் அடகு கடன் பட்டியலை 5 சதவீதத்துக்கு வரையறுத்துக் கொள்ளுமாறும், மேலும் வங்கிகள் தமது வாடிக்கையாளர்கள் பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குக் கடன் வழங்குவதை நான் ஊக்குவிக்கின்றேன்.

நகை அடகு பிடிக்கும் சட்டத்தைத் திருத்தி அடகு வியாபாரப் பதிவுக்கான கட்டணத்தை ரூபா 25,000 ஆக உயர்த்துவதற்கு முன்மொழிகின்றேன்.

**தேசிய கொடுப்பனவுகள் பேரவை**

தேசிய கொடுப்பனவுகள் பேரவை நாட்டில் அனைத்துக்கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் தேசிய அமைப்பாகும். நாட்டின் நிதி முறைமை அபிவிருத்தி மற்றும் மேம் படுத்தல் தொடர்பான அரசின் உபாயத்தின் ஒரு பகுதியாக இந்த நிறுவனமும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. இதுவும் கொழும்பு நிதி மையத்தை உருவாக்குவதற்கு வசதியளிக்கின்றது.

வங்கிக் கணக்குகளில் போதியளவு பணமின்றி முறையற்ற முறையில் வியாபாரம் செய்கின்றனர். இதன் போது ஏற்படும் மறுக்கப்பட்ட காசோ லைகள் என்பது ஒரு பெரிய சிக்க லான பிரச்சினையாகும். ஒரு நேர்மையான வியாபாரக் கலாசாரத்தை உருவாக்குவதற்கும் வாடிக்கையா ளர்களைப் பாதுகாக்கும் நோக்கில் மறுக்கப்பட்ட காசோலைகள் ஒரு குற்றவியல் சட்டத்திலுள்ள தவ றொன்றாகக் கொண்டு அவ்வாறான குற்றவாளிகளுக்குக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்மொ ழிகின்றேன்.

இரண்டு வங்கிகளைத் தவிர எந்தவொரு உள்ளூர் வங்கியும் சர்வதேசரீதியில் தமது செயற்பாடுகளை விரி வாக்கவில்லை. ஆனால் சந்தர்ப்பங்களோ அதிகமென நான் நம்புகிறேன். அவ்வாறான சந்தர்ப்பங்களை அடைந்து கொள்வதற்கான இயலளவை எமது வங்கிகள் கொண் டுள்ளன. ஆகவே தற்போது காணப் படும் வரி ஊக்குவிப்புகளைப் பயன் படுத்தி வங்கிகள் தமது செயற்பாடுகளை வெளிநாடுகளில் விஸ்தரிப்பதை நான் ஊக்குவிக்கிறேன்.

மேலும், உள்ளூர் கம்பனிகள் தமது வியாபார விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு அவசியமான மூல தனத்தை, தமது ஐந்தொகையை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச மூலதனச் சந்தைகளிலிருந்து கடனாகப் பெறுவதை நான் ஊக்கு விக்கின்றேன். கடனைப் பெறும் நிறு வனமானது செலாவணி ஆபத்தைத் தாங்கிக் கொள்வதோடு கடனுக்கான வட்டி விகிதமானது சந்தையில் காணப்படும் வட்டி விகிதத்துடன் ஒன்றிணைந்து செல்லுதல் வேண்டும். கடன் திருப்பிச் செலுத்தல் மற்றும்வட்டிக்கொடுப்பனவுகளானவை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும்.

எமது வங்கிகள் தமது கடல் கடந்த நடவடிக்கைகளை விரிவாக்குவதையும் வெளிநாட்டுச் செலாவணிகளை மத்திய வங்கியில் வைப்புச் செய்வதையும் நான் ஊக்குவிக்கின்றேன். இந்த நாட்டின் அதியுயர் இருப்பை உறுதிப் படுத்துவதோடு உள்ளூர் வங்கிகளுக்கு வர்த்தக நட வடிக்கைளுக்கு அதிக உள்ளூர் நாணயங்களைப் பெற்றுக்கொடுப்பதற்குச்சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இலங்கையில் வதிவில்லாப் பிரசைகளுக்கான அரச பிணைகளின் மீதான எல்லை அளவை திறைசேரி முறிகள் மற்றும் கடன் முறிகளின் மொத்த நிலுவை இறுப்பை 12.5 சத வீதத்திலிருந்து 10 சத வீதமாக திருத்துவதற்கு நான் முன்மொழிகின் றேன். இதன் மூலம் உள்ளூர் முத லீட்டாளர்களுக்கு அரச பிணைகளில் முதலீடு செய்வதற்குக் கூடுதல் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுப்பதோடு வதிவில்லாதவர்களினால் மேற் கொள்ளப்படும் திடீர் மீளப் பெறுதலி னால் இடம்பெறும் அந்நியச் செலாவணி ஏற்றத்தாழ்வுகளான அண்மைக் காலத்தில் எதிர் கொண்ட அபாயம் போன்றவை தடுக்கப்படுகின்றன.

நாம் மிகவும் நவீன மயமான காசு முகாமைத்துவத்தை நோக்கி மாறிக் கொண்டிருக்கிறோம். வங்கிகளி னால் வழங்கப்படும் நவீன வசதிகளின் காரண்மாக ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளும் நோக்கில் காசு போக்குவரத்தை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்குடன் வங்கிகளிலிருந்து காசு மீளப் பெறல்கள் மீது பின்வரும் வகையில் கட்டணம் அற விட முன்மொழிகின்றேன்.

அ. ஒரு மில்லியனுக்கு குறைவானது:
கட்டணம் இல்லை.
ஆ. ஒரு மில்லியன் தொடக்கம் 10 மில்லியன் வரை: 2 சதவீதம்
இ. 10 மில்லியனுக்கு மேல்: 3 சத வீதம்

வங்கி வரைவுகள் மீதான கட்டணம் ஒவ்வொரு வங்கி வரைவுக்கும் ரூபா 150 ஐ விஞ்சக் கூடாது. இதே காரணங் களுக்காக அனைத்துத் தொழில் கொள்வோரும் தமது தொழிலாளர் கள் அனைவருக்கும் வங்கிக் கணக் குகளை ஆரம்பிக்கும்படி அறிவுறுத்தி அவர்களது சம்பளத்தை அந்தக் கணக்குகளுக்கு வரவு வைக்குமாறு முன் மொழிகின்றேன்.

அனைத்து நிதிச்சட்டக் கொடுப்பனவு களையும் ஒழுங்குபடுத்துவதற்காக ஒவ்வொரு நிறுவனமும் பிரத்தியேக மான வங்கிக் கணக்குகளை பேணு தல் வேண்டுமென நான் முன்மொ ழிகின்றேன்.

நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற் கான வாகனங்கள் பெறுமதி மதிப் பீட்டு பத்திரங்கள் மீதான கட்டணத்தில் 2016 ஜனவரி 1 முதல் திருத்தம் செய்யப்படும். அதனடிப்படையில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச் சக்கர வண்டி மீது ரூபா 2,500 உம் மற்றும் மோட்டார் கார் உட்பட அனைத்து வாகனங்கள் மீதும் ரூபா 15,000 கட்டணம் அறவிட நான் முன்மொழிகின்றேன்.

நகரப் பகுதிகளில் அதிக[illegible]வில் வங்கிகள் காணப்பட பின்த[illegible]கிய பிரதேசங்களில் குறைந்த[illegible]வான வங்கிகளே பிரசன்னமாகியு[illegible]ளன என்பதில் நீங்களும் என்[illegible]டன் உடன்படுவீர்கள். இது நிதி [illegible]டை வில் சமமின்மையை ஏற்ப[illegible]த்தியுள்ளது. இந்தச் சமமின்[illegible]யை இல்லாமல் செய்யும் நோக்கு[illegible]வும் அதேவேளை பொருளாதார [illegible]டவடிக்கைகளை மேம்படுத்தும் [illegible]நோக்கிலும் அனைத்து வங்கிக[illegible]ளும் பின்தங்கிய பிராந்தியங்களில் [illegible]திய கிளைகளைத் திறந்து தமது [illegible]ளைகள் வலையமைப்பை 15 சத [illegible]தத்தினால் அதிகரித்தல் வேண்[illegible]டும் என நான் முன்மொழிகின்[illegible]ன்.

கடன் தகவல் பணியகமா[illegible]து கடன்களுக்கான அடைவை அதிகரித்து கடன் வழங்கலில் உ[illegible]ள ஆபத்தை அடிப்படையா[illegible]க் கொண்ட விலையிடலை இய[illegible]ச் செய்து நிதி நிறுவனங் க[illegible]க்கு இடையில் போட்டித்தன்[illegible]யை உருவாக்கி நிதித்துறையின் சிறப்பான அபிவிருத்திக்கு உதவி செய்கின்றன.

அரசபங்குடைமை அடிப்படையில் உருவாக்கப்பட்டதொரு கடன் தகவல் அலுவலகத்தை நாடு ஏற்கனவே கொண்டுள்ளது. நிதித்துறையின் எதிர்கால விரிவாக்கத்தைக் கருத்திற்கொள்ளும் போது தனியார் துறையும் கடன் தகவல் அலுவலகமொன்றை உருவாக்குவதை நாம் ஊக்குவிக்கின்றோம். இதில் இலங்கை மத்திய வங்கியானது ஒரு உரித்தாளராக இருப்பதோடு நிதி நிறுவனங்கள் [illegible] நிதி நிறுவனங்கள் மற்றும் [illegible] வசதிகளை வழங்கும் நிறு[illegible]கள் உள்ளடங்கலாக கு[illegible] தொழிற் பங்குபற்றலுடன் உருவாக்கப்படல் வேண்டும். [illegible] நோக்கத்துக்காகத் தேவை[illegible] சட்ட திட்டங்களை மேற் கொ[illegible] நான் முன்மொழிகின்றேன். [illegible] போல் காப்புறுதிக் கைத் தொ[illegible] தனியார் கடன் தகவல் அ[illegible] கத்தைத் திறப்பதை நான் [illegible] விக்கின்றேன்.

அதே வேளையில் வணிக[illegible]கி களில் உறங்குநிலையிலுள்[illegible]க் குகளில் காணப்படும் பண[illegible] அரச திரட்டு நிதிக்கு 2016 ஜ[illegible]ரி 1 இல் வரவு வைக்குமாறு முன்மொழிகின்றேன்.

*(நிதியமைச்சரின் மிகுதி முன்[illegible] வுகள் நாளைய உதயனில்)*



# வாக்களிக்கும் தகுதியையே இழந்தது மன்னார் மாவட்ட மெய்வன்மைச் சங்கம்

யாழ்ப்பாணம், நவ. 23
மன்னார் மாவட்ட மெய்வன்மைச் சங்கம் கடந்த இரண்டு வருடங்களாக (2014ஆம், 2015ஆம் ஆண்டு) எந்த ஒரு செயற்பாடுகளையும் முன்னேடுக்காத காரணத்தினால் இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் தீர்மானங்களில் வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளது.

மாவட்ட மெய்வன்மைச்சங்கங்கள் வருடத்தில் ஏதாவது மெய்வன்மை சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து இலங்கை மெய்வன்மைச் சங்கத்துக்கு அறிக்கை சமர்பித்தல் வேண்டும். அதில் மாதாந்தக் கூட்டமோ அல்லது பொதுக் கூட்டமோ அல்லது தடகளத் தொடர்களோ இடம்பெறலாம். அவ்வாறு ஏதேனும் நடவடிக்கைகள் இடம்பெறாவிட்டால் அந்த மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின்வாக்குரிமைபறிக்கப்படுவதுடன் நிதி ஒதுக்கீடுகளிலும் இடம் கொடுக்கப்படமாட்டாது. அந்த வரிசையில் தற்பொழுது இணைந்துள்ளது மன்னார் மாவட்ட மெய்வன்மைச் சங்கம்.

மன்னார் மாவட்டத்தில் ஏராளமான மெய்வன்மை சார்ந்த வீரவீராங்கனைகள் இருந்த போதிலும் அவர்களை வைத்து செயற்படத் திராணியற்ற நிலையில் இருந்துள்ளது குறித்த மெய்வன்மைச் சங்கம் என குறித்த மாவட்டத்தின் விளையாட்டு ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர். மன்னார் மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் தலைவர் ஒரு விரிவுரையாளர். இவர் தனது பதவியை விலகாமல் தனது வேலைகாரணமாக வெளி மாவட்டத்தில் தொடர்ச்சியாக தங்கியுள்ளதால்தான் மன்னார் மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக ஆர்வலர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சு, மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர், மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள் குறித்த பிரச்சினையைக்கவனத்தில் எடுத்து அதற்குரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறும் மன்னார் மாவட்ட மெய்வன்மை வீரவீராங்கனைகளின் சிறப்பான செயற்பாட்டிற்கும் அவர்களுக்கான ஒதுக்கீடுகளுக்கும் வழிவகுக்குமாறும் வீரர்களும் ஆர்வலர்களும் எதிர்பார்த்துள்ளனர். (ம-23)

## செந்தாரகை இலகு வெற்றி

யாழ்ப்பாணம், நவ.23
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் கிளிநொச்சி மாவட்ட லீக்கில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் ஏவ்.ஏ. கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்றுமுன் தினம்சனிக்கிழமைமுதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கிராஞ்சி செந்தாரகை அணியை எதிர்த்து கலையொளி அணி மோதிக் கொண்டது. இதில் கிராஞ்சி செந்தாரகை அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## காலிறுதியுடன் வெளியேறியது வடமாகாண ஆண்கள் அணி

யாழ்ப்பாணம், நவ. 23
தேசியமட்ட கொக்கித் தொடரில் வடமாகாண ஆண்கள் கொக்கி அணி. காலிறுதி ஆட்டத்துடன் தொடரிலிருந்து வெளியேறியது.

41ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலருக்குமான கொக்கிக் தொடர் கொழும்பு டொறிங்ரன் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான காலிறுதியாட்டத்தில் ஊவா மாகாண கொக்கி அணியை எதிர்த்து வடமாகாண கொக்கி அணி மோதிக் கொண்டது. இதில் ஊவா மாகாண கொக்கி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

## தவறியது இறுதிக் கனவு

யாழ்ப்பாணம், நவ. 23
தேசியமட்ட கொக்கித் தொடரில் வடமாகாண பெண்கள் அணி அரையிறுதிவரை முன்னேறிய போதிலும் இறுதி ஆட்டத்துக்கான வாய்ப்பை நழுவ விட்டுள்ளது.

41ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கொக்கித் தொடரில், பெண்களுக்கான காலிறுதி ஆட்டத்தில் ஊவா மாகாண கொக்கி அணியை எதிர்த்து வடமாகாண அணி மோதிக் கொண்டது. ஆட்ட நேரத்தில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தகர்ப்பில் வடமாகாண பெண்கள் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது. அரையிறுதியாட்டத்தில் மத்திய மாகாண அணியிடம் 8:0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து இறுதி ஆட்டத்துக்கான வாய்ப்பை நழுவ விட்டது. (ம-23)

## கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் கரப்பந்தாட்டத் தொடரில் சம்பியனானது



முல்லைத்தீவு, நவ. 23
முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட அரச அதிபர் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கரைதுறை பற்று பிரதேச செயலகம் சம்பியனாகியுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் முல்லை முற்றவெளி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை கிழக்கு பிரதேசசெயலக அணி மோதியது. முதல் சுற்றை 25:16 என்றபுள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கரைதுறைப் பற்று பிரதேச செயலக அணி இரண்டாவது செற்றை 25:02 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2-0 என்ற செற் கணக்கில் சம்பியனானது. (ம-102)




லாலிகா தொடரில் நேற்று நடைபெற்ற ரியல் மட்ரிட் - பார்சிலோனா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பரிஸ் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்திய வேளையில்...

## சமநிலைத் தகர்ப்பில் சென்.ஆன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 23
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் கிளிநொச்சி மாவட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் ஏவ்.ஏ. கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் சென்.ஆன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

பள்ளிச்குடா ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணியை எதிர்த்து வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரத்தில் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தகர்ப்பு உதைகளில் வலைப்பாடு சென். ஆன்ஸ் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## தேசியமட்ட வலுதூக்கல் தொடர் சாவகச்சேரி மாணவனுக்கு வெள்ளி


சாவகச்சேரி, நவ. 23
கொழும்பு வலுதூக்கல் சம்மேளனத்தினால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தேசிய வலுதூக்கல் போட்டியில் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த சற்குணராஜா புசாந்தன் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். இவர் 105 கிலோ எடைப் பிரிவில் 457.5 புள்ளிகளைப் பெற்றும் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-9)

# அணியில் தொடர்வேன் பட்டின்சன் நம்பிக்கை



தற்போது அமைந்துள்ள வாய்ப்பை மிகச்சிறப்பாகப் பயன்படுத்தி ஆஸ்திரேலிய அணியில் நிரந்தர இடம்பிடிக்க தயாராக இருப்பதாக வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
நியூஸிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாட வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் பட்டின்சன் தெரிவுள்ளார். ஜோன்சனின் ஓய்வை அடுத்து ஜேம்ஸ் பட்டின்சனுக்கு இந்த வாய்ப்பு அமைந்துள்ளது.
இது குறித்து கருத்து தெரிவித்த அவர், திடீரென அணியில் தெரிவு செய்யப்படிருப்பது மிகுந்த ஆச்சரியத்தைத் தருகிறது. ஜோன்சனின் இடத்தை நிரப்புவது கடினம். அவர் ஓர் அற்புதமான பந்துவீச்சாளர். ஆனால், அணியில் எனது இருப்பை உறுதி செய்யக்கூடிய வகையில் செயற்படுவேன். வேகப்பந்து வீச்சாளராக ஜோன்சனின் இடத்தில் தொடர்வேன்- என்றார். (ம)

# பாகிஸ்தான் – இங்கிலாந்து தொடரில் மீண்டும் கிளம்பியது சூதாட்டச் சர்ச்சை



பாகிஸ்தான் – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் சூதாட்டம் நடைபெற்றுள்ளதாகவும் பாகிஸ்தான் வீரர்களே அவ்வாறு சூதாட்டத்தில் ஈடுபட்டதாகவும் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.
ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. டெஸ்ட் தொடரை பாகிஸ் தான் 2:0 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை இங்கிலாந்து 3:1 என்ற கணக்கிலும் கைப்பற்றின. மூன்று ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கிடையே சார்ஜாவில் நடந்த 3 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் சூதாட்டம் நடைபெற்றதாக பத்திரிகை ஒன்று குற்றஞ்சாட்டி உள் ளது.
அதோடு இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஊழல் தடுப்பு விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளது.
இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 6 இலக்குகள் வித்தியாசத்தில் தோற்றது. பாகிஸ்தான் அணி முதலில் விளையாடி 208 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அசார் அலி, சோயிப் மலிக், முகமது ரிஸ்வான் ஆகிய 3 வீரர்கள் ரன் அவுட் ஆகியமை தொடர்பாக அந்த பத்திரிகை சந்தேகம் கிளப்பி இருந்தது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 8 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குறித்த குற்றச்சாட்டை பாகிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளர் வக்கார் யுனிஸ் மறுத்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்:- சார்ஜா ஆட்டத்தில் (3ஆவது ஆட்டத்தில்) சூதாட்டம் எதுவும் இடம்பெற வில்லை. பாகிஸ்தான் வீரர்கள் எந்தவித தவறான செயல்களிலும் ஈடுபட வில்லை. ரண் அவுட்கள் அதிகம் இடம்பெற்றால் சூதாட்டம் நடை பெற்றது என்று அர்த்தமா?. தற் பொழுது அணியில் இருக்கும் வீரர் கள் நாட்டை நேசிப்பவர்கள்- என்றார். இங்கிலாந்துடன் இடம் பெற்ற தொடரின்போதே பட், யூசொப், அமிர் மூவரும் சூதாட்டத்தில் ஈடுபட்டு அணியில் இருந்து தடை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# அமிருடன் விளையாட இயலாது

சூதாட்டத்தில் ஈடுபட்டு சிறைத் தண்டனை அனுபவித்த பாகிஸ்தான் இடது கை வேகப்பந்து வீச்சாளர் மொகமட் அமீருடன் சேர்ந்து விளையாட முடியாது என்று மொகமட் கபீஸ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
பங்களாதேஷ் பிரிமியர் லீக்கின் சிட்ட கொங் வைகிங்ஸ் அணி கபீஸிடன் ஏற்படுத்தவிருந்த ஒப்பந்தத்தை கபீஸே நிராகரித்ததாக செய்திகள் எழுந்தன. காரணம் அந்த அணியில் சூதாட்ட வீரர் அமீர் இருந்தார் என்பதே.
இந்த நிலையில் அமீர் தொடர்பாக கபீஸ் தெரிவித்ததாவது:-நான் எந்த ஒரு தனிநபருக்கு எதிராகவும் பேசவில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட்டின் கௌரவம் பற்றிய விவகாரம் இது. நாட்டுக்கு அவப்பெயர் ஏற்படுத்திய, கிரிக்கெட் அணியின் பெயரைக் கெடுத்த ஒருவருடன் நான் ஓய்வறையைப் பகிர்ந்து கொள்ள முடியாது. இந்த அணியில் அமீர் இருக்கிறார். வேறு அணிகள் நல்ல பண ஒப்பந்தத்துடன் வந்தால் நிச்சயம் விளையாடுவேன்- என்றார். (ம)



# இறுதியில் பெடரர்

நடைபெற்றுவரும் முன்னணி வீரர்களின் ரென்னிஸ் தொடரில் பெடரர் இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளார்.
நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ள ரோஜர் பெடரர், 4ஆம் நிலை வீரரான வாவ்ரிங்காவை எதிர்த்து மோதினார். இதில் பெடரர் 7:5, 6:3, என்ற நேர்செற் கணக்கில் வென்றார். (ம)



# இந்திய அணியில் மீண்டும் இணைவேன்

## இர்பான் பதான் நம்பிக்கை தெரிவிப்பு

காயம் காரணமாக இந்திய அணியில் இருந்து வெளியேறிய சகலதுறை வீரரான இர்பான் பதான், மீண்டும் இந்திய அணிக்காக ஆடும் கனவுடன் தாம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.
இந்திய அணி இதுவரை உருவாக்கிய ஆகச்சிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவர் என ஒருகாலத்தில் புகழப்பட்டவர் இர்பான் பதான். கடந்த 3 ஆண்டுகளாக காயம் மற்றும் மோசமான ஆட்டத்திறன் உள்ளிட்ட காரணங்களால் இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப் பட்ட அவர் தற்போது, நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் இந்திய அணியில் இடம் பிடிக்கும் கனவுடன் உரிய தருணத்தை எதிர் நோக்கிக் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.
இந்திய அணிக்குத் திரும்புவது தொடர்பாக இர்பான் தெரிவித்ததாவது:-எனது தற்போதைய குறிக்கோள் எதுவெனில், இந்திய அணிக்கு திரும்புவதே. இதற்காகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும், ஆட்டத்தை மேலும் மெருகேற்ற வேண்டும், சரியான பாதையில் செல்ல வேண்டும். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் கண்டிப்பாக உரியவர்களின் பார்வையில் அது சென்று சேரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது- என்றார். (ம)

# இரு புதிய அணிகளுக்கான ஏலம் ஐந்து நிறுவனங்கள் போட்டியில்

ஐ.பி.எல். தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பாக சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு தலா 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து புதிதாக தெரிவுசெய்யப்படும் அணியை ஏலத்தில் எடுக்க பல நிறுவனங்கள் போட்டியில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
புதிய அணிகளின் அடிப்படை விலையாக 120 கோடிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 5 நிறுவனங்கள் புதிய அணிகளை ஏலத்தில் எடுக்க இதுவரை விண்ணப்பித்துள்ளன.
இருப்பினும் அடுத்த மாதம் 8ஆம் திகதிவரை அணிகளை ஏலத்தில் எடுப்பதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்ற காரணத்தினால், போட்டியில் நிற்கும் அணிக ளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

# பார்சிலோனாவின் ஆட்டத்தில் அடிபணிந்தது ரியல் மட்ரிட்





லா லிகா தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனாவிடம் படுதோல்வியடைந்தது ரியல் மட்ரிட்.

ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் கோல்கணக்கைஆரம்பித்து வைத்தார் சுவாரஸ். நெய்மர் 39ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2-0என்றுமுன்னிலை வகித்தது பார்சிலோனா.இன்ஸ்ரா 53 ஆவது நிமிடத்திலும் சுவாரஸ் 74 ஆவது நிமிடத்தில் மற்றுமொரு கோலை விளாச முடிவில்4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பார்சிலோனா அணி. இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. (ம)

# அணித்தலைவர்களின் பணிச்சுமை ஆட்டத்தின் திறனை பாதிக்கிறது

## இங்கிலாந்து அணித்தலைவர்களிடத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தகவல்



கிரிக்கெட்டில் அணித் தலைவர்களுக்கு அதிக பணிச்சுமை இருப்பதால் அவர்களின் ஆட்டத்திறன் பாதிக்கிறதா என நிபுணர்கள் குழு மேற்கொண்ட ஆய்வில் பணிச்சுமை திறனை பாதிக்கிறது என முடிவு காணப்பட்டுள்ளது.

கிரிக்கெட்டில் அணித் தலைவர்களுக்கு பல் வேறு பொறுப்புக்கள் இருப்பதால், அவர்களின் ஆட்டத்திறனில் பாதிப்பு ஏற்படுகிறதா என இங்கிலாந்து அணித் தலைவர்களிடத்தில் மேற்கொண்ட ஆய்வில் அவர்கள் எப்போதுமே அதிக மன அழுத்தத்தில் இருந்து செயற்பட்டமை தெரிய வந்துள்ளது.

இங்கிலாந்தின்அணித்தலைவர்கள் பொறுப்பில் இருந்தபோது அவர்களின்சராசரியிலும்செயற்பாட்டிலும், இல்லாதபோது அவர்களது சராசரியிலும் செயற்பாட்டிலும் வந்துள்ள மாறுதல்களை ஆய்வாளர் தெளிவாக சுட்டியுள்ளனர். இதன்படி வோகன் டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவராக இருந்தபோது 36.02 என்ற சராசரியில் ஆட்டத்திறனை வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ள அந்த ஆய்வு, அணித் தலைவர் பொறுப்பில் இல்லாதபோது 50.98 என்ற சராசரியில் தனது ஆட்டத்திறனை வெளிப்படுத்தியுள்ளார் என சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வரிசையில்; குக் பதவியில் 49.94 என்ற சராசரியிலும் பதவியில் அல்லாத பொழுது 46.36 என்ற சராசரியிலும் ஸ்ட்ரோஸ் பதவியில் 40.76 என்ற சராசரியிலும் பதவியில் அல்லாதபோது 41.04 என்ற சராசரியிலும் நாஸர் உசேன் பதவியில் 36.04 என்ற சராசரியிலும் பதவியில் அல்லாதபொழுது 38.10 என்ற சராசரியிலும் என சிறப்பாக செயற்பட்டுள்ளனர். ஏனையவர்களின் சராசரியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி கனகரட்ணம்

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், யாழ் மாவட்ட விவசாயப் பயிற்சிக் கல்லூரி)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி கனகரட்ணம் நேற்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும், சி.ஆரணி (முகாமைத்துவ உதவி யாளர் கல்வி அமைச்சு அலுவலகம் வடக்கு மாகாணம்),சாய்ராம் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும், க. தயானலட்சுமி (கனடா), தெ. நித்தியலட்சுமி ஆகியோரின் சகோதரியும், ம. சிவபாஸ்கரன், ஹரிப்பிரியா ஆகியோரின் அன்பு மாமியும், ஹரிணி (தரம்06 வேம்படி மகளிர் கல்லூரி), கோபிகா (கனடா), ஜானுகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2015) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மாயானத்துக்கு மு.ப. 11.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
0212224895, 0771708632

தகவல்:
குடும்பத்தினர்.

# முடிவுக்கு வந்தது நடாலின் வெற்றி

## இறுதியாட்டத்தில் ஜோகோவிக்

முன்னணி வீரர்களின் ரென்னிஸ் தொடரில் அரையிறுதியில் ஜோகோவிக்கிடம் தோல்வியடைந்து தொடரைவிட்டு வெளியேறியுள்ளார் நடால்.

நேற்று நடந்த இந்த அரையிறுதியில் நடப்புச் சம்பியனும், தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரருமான சேர்பியாவின் ஜோகோவிக் ஸ்பெயினின் ரபேல் நடாலை எதிர்த்து மோதினார். இதில் ஜோகோவிக் 63, 63 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றார். நடால் 'லீக்' ஆட்டங்களில் தொடர்ச்சியாக வாவ்ரிங்கா, முர்ரே, பெரர் ஆகியோரை வீழ்த்தி இருந்தார். ஆனால் அரையிறுதியில் அவரது ஆட்டம் ஜோகோவிக் முன்பு எடுபடவில்லை. (ம)



தனது வருங்கால மனைவியான இங்கிலாந்து மொடல் அழகி கேசல் கீச்சுடன், சுற்றித் திரியும் யுவராஜ், தங்களது திருமணம் தொடர்பாக ஊடகங்களின் கருத்து சரியாக இருக்கலாம் என்று பதிவிட்டுள்ளார். இருவருக்கும் திருமண நிச்சயம் இந்தோனேசியாவில் வைத்து அண்மையில் இடம்பெற்றது. இருவரும் அடுத்த வருடம்பெப்ரவரி மாதத்தில்திருமணம்செய்யவுள்ளனர் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

Mobile Phone Repairing, CCTV Technician
Diploma புதிய பிரிவுகள் ஆரம்பம்
விரிவுரைகள் AICT-Colombo
Microsoft and Ministry of Education Awarded Institute as Innovative Teaching
பதிவுகளுக்கு நேரில், பதிவுகள் மட்டுபடுத்தப்பட்டுள்ளது
கல்வியங்காட்டு சந்தியில் MCAI CAMPUS
The Island Wide leader in ICT
www.mcai.edu.lk Phone : 775520940, 212219464, 213209798

பணிநிலை வேண்டுகை
புத்தகம் கட்டுனர் (பெண்)
முன்னனுபவம் உள்ளவர்களும், பயிலுனர்களும் நேரில் வரவும்.
சிவரஞ்சனம்
பலாலி வீதி, கோண்டாவில்.
0773068982

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.